
# வடக்கே போகும் மெயில்



சூரன் ஏ.ரவிவர்மா

# வடக்கே போகும் மெயில்

சிறுகதைத் தொகுதி

## சூரன். ஏ. ரவிவர்மா

**காயத்திரி பப்ளிகேஷன்**

**த. பெ. இல. : 64,**

**தெஹிவளை,**

**இலங்கை.**

**☎ 011 - 4981906**

நூலின் பெயர் : வடக்கே போகும் மெயில்

ஆசிரியர் : சூரன். ஏ. ரவிவர்மா

பதிப்புரிமை © : சூரன். ஏ. ரவிவர்மா

முதற்பதிப்பு : 2013 ஏப்ரல்

பக்கங்கள் : 80

விலை : ரூ. 250

அட்டைப்பட வடிவமைப்பு : S. ரமணராஜா

வெளியீடு : காயத்திரி பப்ளிகேஷன்
த. பெ. இல. 64,
தெஹிவளை,
இலங்கை.
☎ 011 - 4981906, 0777 892028

இ-மெயில் : navamohanv@yahoo.com

ஆக்கங்களுக்கும், கருத்துக்களுக்கும் நூலாசிரியரே முழுப்பொறுப்பு

TITLE OF THE BOOK : Vadakke Pogum Mail

AUTHOR : Sooran E. Ravivarmah

COPYRIGHT © : Sooran E. Ravivarmah

ISBN : 978-955-8741- 64 - 1

FIRST EDITION : 2013 April

PAGES : 80

PRICE : Rs. 250

COVER DESIGN : S. Ramanaraja

PUBLISHED BY : Gayathri Publication
P. O. Box 64,
Dehiwala,
Sri Lanka.
☎ 011 - 4981906, 0777 89 2028

E-MAIL : navamohanv@yahoo.com

WEB SITE : www.gayathiri.lk

சிலம்பு பதிப்பகம்

சமர்ப்பணம்

அண்ணா ராஜ. ஸ்ரீ காந்தன்
அவர்களுக்கு

[illegible] : [illegible]

[illegible] : [illegible]

[illegible] : [illegible]

[illegible] : 2013 [illegible]

[illegible] : 80

[illegible] : ரூ. 250

[illegible] : S. [illegible]

[illegible] : [illegible]
[illegible]
[illegible]
[illegible]
☎ 011 - [illegible], 077 [illegible]

[illegible] : [illegible]@yahoo.com

[illegible]

TITLE OF THE BOOK : [illegible]

AUTHOR : [illegible]

COPYRIGHT © : [illegible]

ISBN : [illegible]

FIRST EDITION : 2013 April

PAGES : 80

PRICE : [illegible]

COVER DESIGN : S. [illegible]

PUBLISHED BY : [illegible] Publication
P. O. Box 64,
Dehiwala,
Sri Lanka.
☎ 011 - [illegible], 077 [illegible]

E-MAIL : [illegible]

WEBSITE : [illegible]

## ஆசியுரை

# பரம்பரையாகத் தொடரும் எழுத்தூழியம்

முருகபூபதி

அவுஸ்திரேலியா

இலக்கிய உலகில் பிரவேசித்த காலத்திலேயே எனக்கு இலங்கையில் வடமராட்சிப்பிரதேசத்துடன் நெருக்க மான உறவும் பாசமும் ஆரம்பமாகி விட்டது. இன்று வரையில் நீடிக்கும் இந்தச் "சொந்தம்" எப்பொழுதும் முற்றுப் பெறாத தொடர்கதையாகத்தான் வளரும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எனக்குண்டு.

இந்த உறவு நீடிப்பதற்கு நான் மட்டுமல்ல என்னை நேசிக்கும் அந்தப் பிரதேச கலை, இலக்கியவாதிகளும் ஊடகவியலாளர்களும்தான் காரணம். இந்த உறவு சங்கிலித் தொடர் போன்றது.

என்னுடன் சகோதரவாஞ்சையுடன் உறவாடும் தெணியான் எனக்கு அறிமுகப்படுத்தியவர்தான் ராஜஸ்ரீகாந்தன். அவரால் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்தான் இந்த கதைக் கோவையின் படைப்பாளி ரவிவர்மா. புலம்பெயர்ந்து வந்த பின்பும் எனக்கு வடமராட்சியுடனான உறவு ஆரோக்கிய மாகவே தொடருவதற்கு இலக்கியமும் இதழியலும் முக்கியமான காரணிகள்.

கடந்த 2012 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கைக்கு வந்தபொழுது வடமராட்சிக்கும் பயணித்தேன். அப்பொழுது எனக்கு இரண்டு தகவல்கள் கிடைத்தன. ஒன்று சகோதரர் தெணியானின் பிறந்த நாள்விழாவும் அவரது நூல்களின் வெளியீட்டு நிகழ்வும். மற்றது ரவிவர்மாவின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு.

கடந்த ஜனவரி 6 ஆம் திகதி அல்வாயில் ஜீவநதி இதழின் ஏற்பாட்டில் தெணியான் விழாவுக்கு தலைமை தாங்கி விட்டு கொழும்பு திரும்பியதும் ரவிவர்மா வீட்டிற்கு விருந்துக்கு வந்தேன். அவரது குடும்பமும் எனது இனிய நண்பர் மறைந்த ராஜஸ்ரீகாந்தனின் குடும்பமும் அந்த வீட்டில்

என்னை உபசரித்து மகிழ்ந்தார்கள். எனக்கு அன்றைய தினம் மன நிறைவான நாள். பாசாங்குத்தனமற்ற உபசரிப்புகளை மறக்கவே முடியாது.

ரவிவர்மா தனது சிறுகதைத்தொகுதி பற்றி குறிப்பிட்டார். அதற்கு வாழ்த்துரை வேண்டும் எனவும் சொன்னார். அவர் ஒரு ஊடகவியலாளர் என்ற முகம் மாத்திரமே அதுவரையில் தெரியும். அவரும் சிறுகதை எழுதுகிறார் என்று சொன்னதும், "இலக்கிய உலகில் படைப்பாளிகளாக இயங்குபவர்கள் பத்திரிகையாளர்களாகவும் நடமாடுவது அபூர்வம்" எனச் சொன்னேன்.

ரவிவர்மா இலக்கியபிரதி ஆக்குநராக தனது எழுத்துலகப்பிரவேசத்தை ஆரம்பித்து ஊடகவியலாளரானாரா? அல்லது ஊடகவியலாளராக எழுதத் தொடங்கி படைப்பாளரானாரா? என்ற ரிஷி மூலம் எனக்குத் தெரியாது.

ஆனால் அவர் கல்கி கிருஷ்ணமூர்த்தியால் பாராட்டப்பட்ட வடமராட்சி தேவரையாளி சமூகத்தின் குலதெய்வம் சூரனின் முதல் பேரன் என்ற ரிஷி மூலம் எனக்குத் தெரியும். ராஜஸ்ரீகாந்தன் 2004 இல் பதிப்பித்து வெளியிட்ட சூரன் சுயசரிதை நூலின் மூல எழுத்துப்பிரதி ரவிவர்மாவிடமே இருந்திருக்கிறது என்ற தகவலை ராஜஸ்ரீகாந்தன் வாயிலாக தெரிந்து கொள்கின்றோம்.

வடமராட்சியில் அடிநிலை மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து போராடிய சூரனின் வாரிசு ரவிவர்மா என்பதனால் அந்த ஒளிவட்டத்தில் தன்னை பிரகாசித்துக் கொள்ள அவர் முயலவில்லை. இயல்பிலேயே இலக்கியநாட்டமும் பெற்றவர்களின் கவியாற்றலின் வழிகாட்டலும் ரவிவர்மாவை செதுக்கி செப்பனிட வைத்திருக்கின்றன.

ரவிவர்மாவின் மூத்த சந்ததி கவிபுனைவதில் ஆற்றல் மிக்கது. அவர்கள் கவிஞர்களாக மிளிர்ந்தார்கள். ரவிவர்மா சிறுகதைப் படைப்பாளியாகவும் ஊடகவியலாளராகவும் இரண்டு தளங்களில் பயணிக்கின்றார்.

ரவிவர்மா அமைதியான அதிர்ந்து பேசத் தெரியாத தன்னடக்கம் மிக்கவர். எனது நெஞ்சத்துக்கு அவர் நெருக்கமானதற்கும் அவரது இந்த இயல்புகள் தான் காரணமாக இருக்க வேண்டும். அத்தகைய ஒருவர் இலக்கியவாதியாக சிறுகதை படைப்பதும் ஊடகவியலாளராக செய்திகளைச் செப்பனிடுவதும் எனக்கு மிகுந்த மன நிறைவைத் தருகின்றன. உள்ளார்ந்த இலக்கிய ஆற்றல் மிக்கவர்களினால் செய்தி ஊடகத்தையும் சிறப்பிக்க முடியும். ரவிவர்மாவின் பின்புலம் மனித உரிமைக்காக போராடிய முற்போக்கு சக்திகளின் பாரம்பரியத்தில் உருவானது.

ரவிவர்மா தனது எழுத்தூழியத்தில் மென்மேலும் பணிகளைத் தொடர வாழ்த்துகின்றேன்.

letchumananm@gmail.com

# முன்னுரை

**க. நவம்**

**கனடா**

நவீன விஞ்ஞான, தொழில் நுட்பங்களின் கடுகதி வளர்ச்சியானது, இன்றைய வாசகர்கள் மத்தியில் பல்வேறு அனுகூலங்களைக் கொண்ட மின்-வாசிப்பான்கள் (e-readers), இணையப் பலகைகள் (tablets) போன்ற மின்-நூல்களை அறிமுகம் செய்து வைத்துள்ள போதிலும், இப்புதுவரவுகள் காகித நூல்களின் பாவனையிலும் பயன் பாட்டிலும் பாரிய மாற்றங்களை விளைவிக்கத் தவறிவிட்டன என்பதுதான் அண்மைக்காலக் கணிப்பீடுகளின் முடிவு. காகிதப் புத்தகம் தரும் துணைக்கும், தோழமைக்கும், பயன்பாட்டுக்கும் பரிச்சயத்திற்கும் ஈடு இணை இல்லை என்பது தான் உண்மை!

புத்தகம் ஒன்று, அது புத்தகமான தருணத்திலேயே பூரணத்துவம் பெறுவதில்லை. அது படிக்கப்படவும் வேண்டும். அதனைப் படிப்பதென்பது, அதன் ஆசிரியரது அனுபவத்தை வாசகர் பெறுவதாகும். புத்தகம் ஆசிரிய ருக்கும் வாசகருக்கும் இடையிலானதோர் இணைப்புப் பாலம்; ஏகாந்த உறவாடல் சாதனம். அதில் ஆசிரியரும் வாசகரும் சம பங்காளிகள். ஆசிரியர் தமது எண்ணங்களை யும் அனுபவங்களையும் படிப்பினைகளையும் வாசகர் மனதில் சரிவர விதைத்து, வாழ்வியல் குறித்த பரந்த தரிசனத்திற்கு வழிதிறக்கும் பணியில் வெற்றி பெறும் போதே, புத்தகம் தனது பூரணத்துவத்தை எய்துகிறது.

சூரன் ஏ. ரவிவர்மா ‘வடக்கே போகும் மெயில்’ என்ற பெயரில், தமது 16 சிறுகதைகள் அடங்கிய புத்தகம் ஒன்றை வெளியிடுகின்றார். இப்புத்தகமானது தனது பிறவிப் பணியின் பாதியினையே இதுவரை பூர்த்தி செய்திருக்கிறது. இனி, இது இடம் விட்டு இடம் நகர்ந்து, கால இடைவெளி கடந்து, வாசகரைச் சென்றடைய வேண்டும்; தனிமையில் வாசகரால் நுகரப்பட வேண்டும்;

வாசகரோடு நுணுக்கமான உறவை உண்டுபண்ண வேண்டும்; வாசகருக்குப் புதிய அனுபவங்களை அள்ளி வழங்க வேண்டும். வாழ்வின் நிதர்சனங்க்ளைச் சித்திரித்து, மனித மேம்பாட்டுக்குத் திசை காட்ட வேண்டும். இவற்றிலேயே இப்புத்தகத்தினது பிறவிப் பணியின் மீதிப்பாதி தங்கியுள்ளது.

'வடக்கே போகும் மெயில்' திரட்டினைப் படித்து முடிக்கும் வாசகர்கள், இதன் ஆசிரியர் ரவிவர்மா பொழுதுபோக்கு அம்சங்களைக் கதை களாக்கும் ஒரு கேளிக்கை எழுத்தாளரல்ல என்பதையும், பதிலாக அவர் சமூகத்தின் மீது கரிசனையும் அக்கறையும் கொண்ட ஒரு மனிதநேயப் படைப்பாளி என்பதையும் சுலபமாகக் கண்டறிந்து கொள்வர். சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களைத் தமது கதை களினூடாகப் பேசும் ரவிவர்மா, அதே மக்களின் அக வாழ்க்கையின் நெருக்கடிகளையும் கதைகளாக்கித் தந்திருக்கின்றார். எனவே இலக்கியம் சமூக நோக்குடையதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தினின்றும் அவர் விலகிச் செல்லவில்லை என்பதும், அவரது இத்திரட்டு வாசகனுக்கு நுட்பமான புதிய அனுபவங்களை வழங்கி, மனித மேம்பாட்டுக்கு உரம் சேர்க்கத் தவறவில்லை என்பதும் நம்பிக்கை தரும் செய்திகளாகும்.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இலங்கையின் வரலாற்றுப் போக்கினை மாற்றியமைத்த இனமுரண்பாடுகளும், அதன் வழியாக என்பதுகளின் ஆரம்பம்தொட்டு முனைப்புப்பெற்ற இன விடுதலைப் போராட்டமும், மக்களின் அமைதி வாழ்வைத் துவம்சம் செய்துபோன யுத்த அவலங்களும், அவற்றின் பக்க விளைவுகளும் பாதிப்புகளும் இடம்பெறாத அண்மைக்கால ஈழத்தமிழ் இலக்கியப் படைப்புக்கள் அனேகமாக இல்லை என்றே கூறலாம். ரவிவர்மாவின் 'வடக்கே போகும் மெயில்' சிறுகதைத் திரட்டும் அதற்கு விதிவிலக்கல்ல. 'வடக்கே போகும் மெயில்,' 'விடியலைத் தேடி,' 'குலதெய்வம்,' 'என்று மறையும்,' 'திக்குத் தெரியாத,' 'தாலி பாக்கியம்,' 'தண்ணீர் தண்ணீர்' ஆகிய கதைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இனமுரண்பாட்டினையும் யுத்தக் கெடுதிகளையும் தொட்டுச் செல்லும் கதைகளாகவே காணப்படுகின்றன. உதாரணத்திற்கு -

போர்க் காலங்களின் போது கொழும்பு சென்று தற்காலிகமாக லொட்ஜ் ஒன்றில் தங்கி நிற்கும் தமிழருக்கு ஏற்படக்கூடிய பீதியையும், அதனால் ஏற்படும் தடுமாற்றங்களையும் 'தண்ணீர் தண்ணீர்' என்ற கதை உணர்ச்சிச் செறிவுடன் நேர்த்தியாகச் சித்திரிக்கின்றது. அச்சமும் பதற்றமும்

உச்சமடைகையில், எதைச் செய்யக்கூடாதோ அதையே செய்ய நேர்ந்து விடும் அபாயத்தை எண்ணி அஞ்சும் மனம், தனக்குள் இலேசாக நகைக்கவும் செய்கிறது. சிறுகதை வரம்புகளுக்குள் அடங்க மறுத்தாலும், தன் பங்கைச் சரிவரச் செய்திருக்கும் ஒரு சின்ன மாத்திரைக் கதை இது.

'திக்குத் தெரியாத' என்ற சிறுகதை இன முரண்பாட்டின் கோர முகத்தைக் காட்டும் இன்னொரு கதையாகும். வன் செயல்களுடன் சம்பந்தப்படாத இளைஞர்கள் கூட, சில சமயங்களில் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக் கப்படும் சோகங்களைச் சொல்லும் கதை. அனைவரது முகங்களிலும் அச்சமும் சந்தேகமும் அள்ளிப் பூசப்பட்ட பாதுகாப்பு வலயம் ஒன்றினுள் எடுக்கப்பட்ட திகில் திரைப்படம் போன்று நகர்த்திச் செல்லப்படும் கதை.

போர்க்கால சூழலோடு பின்னிப் பிணைந்த இவை போன்ற பல கதைகளுடன், சாதாரண மக்களின் அகவயமான எழுச்சிகளையும் சிக்கல்களையும் நெருக்கடிகளையும் படம் பிடித்துக் காட்டும் வகை சார்ந்த படைப்புக்களையும் ரவிவர்மா இத்தொகுதியில் தந்திருக்கின்றார். 'செல்லாக்காசு', 'பொன்னுக்கிழவி', 'மிலேனியம் அப்பா', 'காவியமா நெஞ்சில் ஓவியமா', 'முடிவிலும் ஒன்று தொடரலாம்', 'திரைகடல் ஓடியும்', 'கொக்கு வெடி' என்பன மனோவினோதங்களின் வெவ்வேறு பரிமாணங் களைத் தொட்டுக் காட்டும் குறிப்பிடத்தக்க கதைகள். உதாரணங்களாக ஒன்றிரண்டைச் சுட்டிக் காட்டுவதாயின் -

கிழிந்து, உருக்குலைந்து, பெறுமதியிழந்து போன பத்து ரூபா தாள் காசைத் தந்திரமாகப் பிறரது தலையில் கட்டியடித்து விட முயற்சிக்கும் ஒவ்வொரு தடவையும், ஒரு சராசரி மனித மனம் படும் அவஸ்தையை 'செல்லாக்காசு' அழகாகச் சொல்கிறது. அறம் சார்ந்த மனச் சிக்கல் களுக்கு மத்தியிலும், வாழ்வின் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் விரும்பியோ, விரும்பாமலோ, நாமும் ஒரு கணேசமூர்த்தியாக இருந்திருக்கின்றோமோ என எண்ணி, வாசகர் மனம் சஞ்சலப்படும் வகையில் கதை நகர்ந்து செல்கிறது. அதுவே அக்கதையின் வெற்றியும் கூட!

இலட்சியங்களும் ஆசைகளும் கனவுகளும் மனித வாழ்வின் இயங்கியலுக்கான உந்துசக்தியாக விளங்குவன. இந்த யதார்த்தத்தை நிறுவும் விதமாகவே பொன்னுக்கிழவியின் சின்னச் சின்ன ஆசைகள் அவளது வாழ்க்கைப் படகை அவ்வப்போது முன்னோக்கி நகர்த்திச் சென்றுள்ளன. இறுதியில் மன நிம்மதியுடன் உடலை விட்டு உயிர் பிரிந்து செல்வதற்கும், 'தனது கடைசி ஆசை ஒன்று நிறைவேறி விட்டது'

என்ற செய்திதான் பொன்னுக்கிழவிக்குத் தேவைப்படுகின்றது. மேலும் 'பொன்னுக்கிழவி' என்ற இந்தக் கதை மூலமாக, மரண வீடுகளில் இடம் பெறும் சம்பவங்களையும் சம்பிரதாயங்களையும் ஒருவித எள்ளலுடன் எடுத்துக்கூறி, எமது கிராமியப் பண்பாட்டுக் கோலங்களை ரவிவர்மா கோடிட்டுக் காட்டுகிறார்.

இவ்வாறாக, 'வடக்கே போகும் மெயில்' எனும் இத்திரட்டிலுள்ள கதைகளை தமது மனதின் அகவயமான, புறவயமான தூண்டு தல்களின் விளைவாக, தமக்கே உரிய நடையில் ரவிவர்மா எழுதியுள்ளார். இதிலுள்ள எல்லாவகைக் கதைகளிலும் ரவிவர்மாவின் மனிதநேயம் இழையோடி இருக்கின்றது. தாம் வாழும் சமூகம் மீதான கரிசனை அவரது கதைகளில் ஊறிப் பரவிக்கிடக்கின்றது. இந்தக் கருத்து நிலை ஆரோக்கியம் தான் ரவிவர்மாவின் கதைகளின் பலம். இதற்குப் பக்க துணையாக அவரது எழுத்துடன் இயல்பாக ஒட்டியிருக்கும் மெல்லிய அங்கதம், அவரது கதைகளுக்கு மென்மேலும் மெருகூட்டி சுவாரசியத்தை வழங்குகிறது.

சுமார் நூறு வருட வரலாற்றைக் கொண்ட தமிழ்ச் சிறுகதையானது படிமுறை ரீதியான பரிணாம வளர்ச்சிக்கும் (Evolution) – உருமாற்றத்திற்கும் (Metamorphosis) உள்ளாகி, முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இத்தருணத்தில் ஒரு கதையின் உள்ளடக்கத்துக்கு ஈடாக, அதன் உருவம், உத்தி, படிமம், மொழிநடை, என்ப வற்றுடன் - படைப்பாளியின் கண்ணோட்டம், அனுபவம், கற்பனை வளம், படைப்பாற்றல் போன்றவற்றின் சீரான ஒருங்கிணைவு பெரிதும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இவ்வகைப்பட்ட நுட்பங்களைக் கருத்தில் கொண்டு, ரவிவர்மா மென்மேலும் தமது சிறுகதை எழுத்துப் பணியைத் தொடர வேண்டும்.

ரவிவர்மாவின் பாட்டனார் ஆசாரியார் திரு. கா. சூரன் அவர்கள் ஒரு பண்பட்ட சிற்பக் கலைஞர்; தந்தையார் ஆசிரியர் திரு. சூ. ஏகாம்பரம் அவர்கள் ஓர் உன்னதமான ஓவியக் கலைஞர் பெரிய தகப்பனார் கலா வினோதன் திரு. பெ. அண்ணாசாமி அவர்கள் ஓர் அற்புதமான நடிகர், நாடக அரங்கக் கலைஞர். இத்தகைய காத்திரமான கலைப் பாரம்பரியத் தின் வழிவந்த ரவிவர்மா, தமது கலை இலக்கியப் படைப்பாக்க முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட வேண்டும். வேரில் பலாவாக ஒளிந்திருக்கும் அவரது பன்முகப்பட்ட படைப்பாற்றல் வெளிக்கொணரப்பட வேண்டும். நவீன தமிழ்ப் புனைவிலக்கியம் அவரது ஆற்றல்களால் புது மெருகு பெறவேண்டும். வாழ்த்துக்கள்!

# என்னுரை

## சூரன். ஏ. ரவிவர்மா

**வா**சிப்பை என்னுள் உருவாக்கியவர்கள் எனது பெற்றோர். தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி அதனை வளர்த்தார். எனது வாசிப்பு ஆர்வத்துக்கு தீனிபோட்டது நெல்லியடி பட்டினசபை நூலகம். குடும்பத்தில் உள்ளவர்கள் கவிஞர்கள். ஆகையினால் நானும் கவிதை எழுத ஆசைப்பட்டேன், முடியவில்லை. ஈழநாடு மாணவர் மலரில் எனது சிரிப்புத் துணுக்கு கள் வெளியானதால் கவிதையைக் கைவிட்டு துணுக்குகளில் சிந்தனையைத் திருப்பினேன். நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் படிக்கும் போது எனது துணுக்குகளுக்கு நண்பர் குமாரகுலசிங்கம் படம் வரைந்து ஊக்கம் தந்தார்.

சி. ரதிமணி, சி. விக்னேஸ்வரன் ஆகியோருடன் இணைந்து நான் வெளியிட்ட "முக்கோணம்" எனும் கையெழுத்துப் பிரதி ஊக்கம் தந்தது. "மன்றம்" கையெழுத்துப் பிரதி உற்சாகம் தந்தது.

கே. டானியலின் எழுத்துக்கள் சிறுகதை எழுத வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. சிறுவயதில் கையில் கிடைத்த எல்லாவற்றையும் வாசித்தேன். பின்னர் எதனை வாசிக்க வேண்டும், எதனை வாசிக்கக் கூடாது என்று வரையறை செய்தேன்.

அண்ணா ராஜ ஸ்ரீகாந்தனின் வழிகாட்டல் என்னை பத்திரிகையாளனாக்கியது. என்னைச் சரியாக இனங்கண்டு எழுத்தாளனாக இருந்த என்னை பத்திரிகையாளனாக்கினார். இப்புத்தகம் வெளிவர எனக்கு உதவிய திரு. லெ. முருகபூபதி, திரு. க. நவம், திரு. மடுலுகிரியே விஜயரத்தின, திரு. மேமன் கவி, திரு. வே. நவமோகன், திரு. எஸ். ரமணன், திருமதி. சந்திரலேகா பேரின்பநாயகம், திரு. திருமதி. ரவிச்சந்திரன் ரவிசக்தி, திரு. திருமதி. இராஜசூரியர் ரவிப்பிரபா, திருமதி. அபர்ணா கிஷோர், திருமதி. அனோஜா சஜிதரன், திருமதி. ராதாரமணி ரவிவர்மா, செல்வி. தாட்ஷாயணி ரவிவர்மா ஆகியோருக்கு நன்றி.


"பவானி", வதிரி
கரவெட்டி
077 1143622

இல. 60, 6 வது ஒழுங்கை,
கொழும்பு 13.

thadshavarmah@gmail.com
varmah.blogspot.com

## உள்ளே ....


1. வடக்கே போகும் மெயில் 13

2. போனால் போகட்டும்.... 18

3. பொன்னுக் கிழவி 23

4. மிலேனியம் அப்பா 27

5. என்னைத் தெரியுமா? 31

6. செல்லாக்காசு 34

7. தாலிபாக்கியம் 38

8. திக்குத்தெரியாத .... 42

9. முடிவிலும் ஒன்று தொடரலாம் 47

10. குலதெய்வம் 51

11. தண்ணீர் தண்ணீர் 53

12. திரைகடல் ஓடியும் 54

13. கொக்கு வெடி 58

14. என்று மறையும் 64

15. காவியமா? நெஞ்சில் ஓவியமா? 68

16. விடியலைத்தேடி 75

## வடக்கே போகும் மெயில்

கோட்டை ரயில் நிலையத்தில் வடக்கே போகும் மெயில் வண்டிக்கு வழக்கத்திலும் மாறாக அதிகம் பேர் காத்திருக்கின்றனர். மாலை ஏழு மணிக்கு வெளிக் கிடவேண்டிய ரயில் வண்டி ஒரு மணித்தியாலம் தாமத மாக வெளிக்கிட்டது. வழி அனுப்ப வந்தவர்கள் ரயிலு டன் சேர்ந்து ஓடிப்பிரியமனமில்லாமல் மறையும் வரை கை அசைத்து விடை கொடுத்தனர்.

விடுமுறையை யாழ்ப்பாணத்தில் கழிப்பதற்காகச் செல்பவர்கள் விடுமுறையில் எங்கெங்கு போக வேண்டு மென்று அருகில் இருந்தவர்களுக்குச் சொன்னார்கள்.

கோயில் திருவிழாவுக்குச் செல்லும் பெண்மணிகள் புதிதாக எடுத்த சேலைகளினதும், செய்வித்த நகை களினதும் பெறுமதிகளை கொஞ்சம் கூடுதலாகவே, கேட்பவர்கள் பொறாமைப்படக்கூடிய விதத்தில் சொன் னார்கள்.

திருமணத்திற்காகச் செல்பவர்கள் மாப்பிள்ளையின் திறமை, பொம்பிளையின் வடிவு என்பனவற்றை அளவுக் கதிகமாக அளந்தார்கள்.

உறவுமுறையானவர் இறந்துவிட்டார். இறுதிக் கிரியை யில் கலந்து கொள்ள வேண்டும். எனக்காகப் பிரேதத்தை வைப்பார்களா என யோசிக்கிறார் மரண வீட்டுக்குச் செல்லும் ஒருவர்.

புதினம் பார்த்த சிறு பிள்ளைகள் தூங்க ஆரம்பித்து விட்டனர். பெரியவர்களின் பேச்சுச் சத்தமும் வரவர குறைந்துகொண்டு போனது.

இப்போ அதிகமானோர் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டனர். சிலர் குறைத்தூக்கத்தில் அடுத்தவரின் மேல் சரிந்து அப்படியே தூங்கிவிட்டனர். இன்னும் சிலர் கண்ணை வெட்டிவெட்டி நித்திரையைப் போக்க முயன்று

முடிவில் நித்திரா தேவியின் அரவணைப்புக்கு அடிமையாகி விட்டனர்.

எஞ்சி இருப்போர் நித்திரை கொள்ளாமல் இருப்பதற்காக சிகரெட் புகைத்தும், வெற்றிலை சப்பியும், இங்குமங்குமாக நடந்தனர்.

பொல்காவலை சந்தியில் ரயில் நின்றதும் அனேகமானோர் விழித்துக் கொண்டனர். கண்டியிலிருந்து வந்தவர்கள் இடம் தேடி அலைந்தனர். வசதியான இடம் கிடைக்காதா என்ற நப்பாசையில் சிலர் ஒவ்வொரு பெட்டியாகச் சோதனையிட்டனர். விழிப்பாக இருந்த ஒருவர், தன்னைக் கொஞ்சம் தள்ளி இருக்கும்படி சொல்லுவார்களோ எனப்பயந்து கண்ணை மூடிக்கொண்டிருந்தார்.

"சார் கொஞ்சம் காலை எடுங்கபெட்டியை வைப்பம்"

தூக்கத்தில் இருந்தவரை எழுப்பி தனது பெட்டியை ஆசனத்துக்குக் கீழே ஒருவர் வைத்தார். தூக்கம் கலைந்தவர் நித்திரையால் எழுப்பிய வரை எரிப்பது போல் பார்த்து விட்டு மீண்டும் தூங்க ஆரம்பித்தார்.

கோணர் சீற்றில் இருந்த ஒருவர் அப்பொழுது தான் விழித்துப் பார்த்தார். தனது மனைவியின் மேல் இன்னொருவர் சாய்ந்தபடி நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே எழுந்து தனது மனைவியை எழுப்பி கோணர் சீற்றில் இருத்தி விட்டு அவருக்கும் மனைவிக்கும் இடையில் இருந்து மனைவியின் மேல் சாய்ந்தபடி நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தார்.

பேராதனையில் இருந்து வந்த மாணவர் கோஷ்டி ஏறிய ரயில் பெட்டி ஒன்று மிகவும் கலகலப்பாகியது. இவர்களின் கலகலப்பால் ரயில் வண்டியின் சத்தம் கேட்கவில்லை. ஆடிப்பாடிய களைப்பால் மாணவர் கோஷ்டி தூங்க ஆரம்பித்தது.

இப்போ ரயிலின் கடபுடா சத்தம் வெகு துல்லியமாகக் கேட்டது. மீண்டும் ஒரே அமைதி நித்திரையில் இருந்து விடுபட்டவர்கள் நித்திரை யாகினர். புதிதாக ஏறியவர்கள் நின்று கொண்டும் இருந்து கொண்டும் தூங்கிவிட்டனர். நள்ளிரவு இரண்டு மணி அனுராதபுரம் நெருங்கிக் கொண டிருக்கிறது. இறங்க வேண்டியவர்கள் ஆயத்தமானர்கள். அன்று அனுராத புர நகரமே ஸ்ரேசனில் திரண்டிருந்தது போல் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது. ரயில் நின்றதும் ஸ்ரேசனில் நின்றவர்கள் முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள்.

எங்கும் ஒரே அமளி. ஏறியவர்கள் அனைவரினதும் கைகளில் பயங்கர ஆயுதங்கள். அவர்கள் பிரயாணிகளைத் தாக்கினார்கள். தாக்குதலை

எதிர் பார்க்காத பிரயாணிகள் என்ன செய்வதெனத் தெரியாது தவித்தனர். உறங்கியவர்கள் அடி விழுந்ததும் திடுக்கிட்டு விழித்தனர். ஒரு சிலர் ரயிலை விட்டு இறங்கி இருளில் பாதை தெரியாது ஓடினர்.

ரயிலில் வந்த சில விலங்குகள் தாக்கியவர்களின் பாஷையில் அவர்களைப் போன்று "விடாதே, வெட்டு, கொத்து" எனக் கோஷித்தனர்.

இரண்டு மணித்தியாலயங்களுக்கு கொலையும், கொள்ளையும் நடந்தன. ஒருவரைச் சூழ ஐம்பது நபர்கள் நின்று தாக்கினால் அந்த ஒருவரால் எவ்வளவு நேரத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியும்?

கொள்ளைக்காரர்களில் ஒருவன் "எடே மச்சான் அந்த டைம்பாம் எங்கே?" எனக்கேட்டான்.

"அதைத்தான் நானும் தேடுறன். இருட்டிலை எங்கையோ வெச்சிட்டன்" என அடுத்தவன் சொன்னான்.

தன் இனத்தையே வெறுத்து ஒதுக்கிய இனத்தை இன்னொரு இனம் அழித்துக் கொண்டிருக்கிறது.

கொள்ளையடித்த பணம், நகை, உடுதுணி என்பன கொள்ளையரின் ஏழு தலைமுறைக்குப் போதுமானது. வண்டி நகரத் தொடங்கியது. சந்தோசமாகப் பயணத்தை ஆரம்பித்தவர்கள் பாதியில் படுசோகத்துடன் பயணமாகிறார்கள். செய்திகளையும், கதைகளையும் பரிமாறியவர்கள் இப்போ யாருக்கு யார் ஆறுதல் கூறுவதெனத் தெரியாது போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வண்டியில் உயிரில்லாத உடம்புகள் பல உண்டு. கழுத்தில் தாலி உண்டு. கணவனின் உடம்பிலே உயிரில்லை.

கணவன் ஒருவன் அடி காயங்களுடன் இறந்த மனைவியின் உடலைக் கட்டிப்பிடித்துக் கதறுகிறான். தெய்வாதீனமாக கணவன் உயிருடன் இருக்கிறான். அவன் நல்ல நாள் பார்த்துக்கட்டிய தாலி கழுத்தில் இல்லை.

குழந்தையைப் பறி கொடுத்த பெற்றோர், கண் முன்னாலேயே பெற்றோரைப் பறி கொடுத்த பிள்ளைகள், அண்ணா, தம்பி, தங்கச்சி, அக்கா என உறவினர்களையும் பறி கொடுத்தவர்கள் கதறுகிறர்கள். சிலர் கொலைகாரர்களைத் திட்டுகிறார்கள். சிலர் தங்களை முனிவர்களாக நினைத்து சாபமிடுகிறார்கள்.

வட்டிக்குப் பணம் கொடுத்து வட்டிக்கு மேல் வட்டியாக ஏழைகளைத்

துன்புறுத்தி காணி வேண்டுவதற்காகக் கொண்டு வந்த பணம் எங்கே என்று புலம்புகிறார். வட்டிக்கடை வடிவேல் பாடுபட்டு சம்பாதித்து தனது ஒரே மகளின் திருமணத்தை சீரும் சிறப்புமாக நடத்த வேண்டும் என்று கொண்டு வந்த பணத்தைப் பறிகொடுத்துத் தவிக்கிறார் பரமசிவம். ஓடிக்கொண்டிருக்கும் ரயிலில் பணத்தை ஜேப்படி செய்து பின் அதைக் கொள்ளையரிடம் பறிகொடுத்துவிட்டு "வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் மாயவன்.

"என் பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. ஊரில் உள்ள தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் கொடுக்கும்படி தந்த பணம் என்னுடைய பெட்டிக்குள் இருந்ததே. அதுவும் போய்விட்டதே" என்று அடுத்தவருக்குச் சொல்லித் துயரத்தை வெளியிட்டார் கிளாக்கர் கந்தசாமி..

மிகவும் வேகமாக வண்டி போய்க்கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசினார்கள். "இதற்கு சரியான பாடம் படிப்பிக்க வேண்டும்" என்றார் ஒருவர். அனேகமானோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

"நமது பிரதேசத்தை விட்டு நாம் வெளியே போகக்கூடாது" என்றார் ஒருவர்.

"நமக்கென்று ஒரு நாடிருந்தால் இப்படி நடக்குமா?" எனக் கேட்டார் இன்னொருவர். அனேகர் அதை ஆமோதித்தனர்.

நமது நாட்டுக்காகப் போராடுவோம் என ஒருமித்த குரலில் கோஷமிட்டார்கள்.

நடந்த கொடூரங்களைக் கண்ட மெயில் வண்டியும் இனிமேல் தெற்கே போவதில்லை என திடசங்கற்பம் பூண்டது. இப்போ வண்டி மிக வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

உயர்ந்த சாதியில் பிறந்து பரம்பரை பரம்பரையாக சாதிக் கொடுமை புரிந்த ஒருவர் "தண்ணீர் தண்ணீர்" எனத் தவித்தார். அவருக்கு தாழ்ந்த சாதிக்காரன் தண்ணீர் கொடுக்க அமுதமென அதைப் பருகினார். பல உயிர்களைக் காப்பாற்றிய வைத்திய கலாநிதி ஒருவர் தனது உயிரை யாராவது காப்பாற்ற மாட்டார்களா? என்று உயிருக்காகப் போராடுகிறார்.

அடுத்தவீட்டு ஊமைக் குழந்தையை அண்டாமல் ஊமை என்று சிறப்புப்பெயர் சொல்லி விரட்டியவர் இரண்டு கண்களையும் இழந்து உலகையே இருட்டாகக் காண்கிறார். ஒரு காலத்தில் தனது பரம்பரைக்

கோயிலுக்கு தாழ்ந்த சாதிப்பெண் ஒருத்தி புதுச்சேலை உடுத்து வந்ததைப் பொறுக்கமாட்டாது அவளின் சேலையை உரிந்து தீயிலிட்டவரும் மனைவியும் உடுத்த துணிகளைப் பறி கொடுத்துவிட்டு உள்ளாடைகளுடன் ஒதுங்கி இருக்கிறார்கள்.

வவுனியாவை நெருங்கும் போது பிரயாணிகளுக்கு மற்றொரு சோதனை ஏற்பட்டது. ரயிலை நோக்கி பெரிய பெரிய கற்கள் வீசப்பட்டன. அதனாலும் பலர் காயமடைந்தனர்.

அனுராதபுரத்தில் அநியாயத்துக்குட்பட்ட ரயில் எங்குமே நிற்காமல் ஓடிக் கொண்டிருகிறது. பிரயாணிகளிடையே பெரும் பரபரப்பு. யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் நிற்குமா இல்லையா எனத் தெரியாமல் அவதிப்பட்டார்கள். யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் ரயில் நின்றதும் பலர் இறங்கி விட்டார்கள். இறங்கியவர்களில் அனேகமானோர் பெரியாஸ்பத்திரியை நோக்கிப் போனார்கள். மீண்டும் ரயில் ஓடத்தொடங்கியது. யாழ்ப்பாண ரயில் நிலையத்தை அடுத்து ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் ரயில் நின்றது.

காங்கேசன்துறையில் நின்றதும் எல்லோரும் இறங்கிவிட்டனர். "எல்லோரையும் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன்" என ரயில் நிம்மதிப் பெருமூச்சு விட்டது. "படார்" என்ற பயங்கர வெடிச்சத்தம். நின்றவர்கள் அனைவரும் திரும்பிய பக்கம் ஓடத்தொடங்கினார்கள். இனிமேல் தெற்கே போகமாட்டேன் என்ற ரயிலின் இயந்திரம் எரிந்து கொண்டிருக்கிறது. கொள்ளைக்காரர்கள் வைத்த டைம்பொம் வெடித்ததனால் ஏற்பட்ட நெருப்பு பயங்கரமாக எரிந்தது. தீ முற்றாக அணைக்கப்பட்ட போது இயந்திரத்தின் பெரும் பகுதி எரிந்து முற்றாக சாம்பலாகியது.

யாழ்ப்பாணம் எங்குமே சோகமயம். மூன்று மாதங்களில் எல்லாம் அமைதியாகி விட்டது. காங்கேசன்துறையில் இருந்து தெற்கு நோக்கிப் போவதற்கு ஒரு ரயில் தயாராக நிற்கிறது.

பிரயாணிகள் முண்டியடித்து ஏறினார்கள். இனிமேல் தெற்கே போகமாட்டோம் என்று சூளுரைத்த பலர் கோணர் சீற் தேடி அலைந்தார்கள். அவர்களை வடக்கே கொண்டு வந்த ரயிலின் இயந்திரம் அவர்களைப் பார்த்து சிரித்தது. யாரும் அதைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. பேரிரைச்சலுடன் ரயில் தெற்கு நோக்கிப் புறப்பட்டது. அவர்கள் ஓடிவரும் நாளை எதிர்பார்த்து வடக்கே வந்த ரயில் நிற்கிறது. ●

சுடர்

வைகாசி - 1979

## போனால் போகட்டும்.....

ஆழமான இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு அந்த அவலக்குரல் கேட்டது. அண்டை அயலில் உள்ளவர்கள் சத்தம் வந்த வீட்டை நோக்கி ஓடினார்கள். ஓடும் போது என்ன நடந்தது என ஒருவரை ஒருவர் வினவினார்கள். போய்ப் பார்த்தால் தெரியும் தானே எனச் சொல்லிக் கொண்டு ஒரு முதியவர் குடுகுடுவென ஓடினார்.

"அண்ணை அழாதேங்கோ. சட்டம்பியார் என்ன நடந்த தெனச் சொல்லுங்கோ".

வந்தவர்களின் வார்த்தையைக் கேளாமல் வேலுச்சட் டம்பியார் தலையில் அடித்துக் குழறினார். வேலுச் சட்டம்பியார் என எல்லோராலும் அழைக்கப்படும் வேலுப்பிள்ளை வேலையிலிருந்து இளைப்பாறி விட்டார். அவருக்கு எழுபது வயதென்றால் யாரும் நம்பமாட்டார் கள்.

பனி என்றாலும் மழை என்றாலும் பொருட்படுத்தா மல் அதிகாலை நான்கு மணிக்குத் தோட்டத்துக்குப் போய்விடுவார். உச்சி வெயிலையும் பொருட்படுத்தா மல் தோட்டத்தில் நிற்பார்.

இரவு ஒன்பது மணிக்கு சைக்கிளில் மிசினை வைத்துக் கொண்டு வந்தவர் முற்றத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு கிணற்றடியில் முகம் கைகால் கழுவிக் கொண்டு வந்து பார்த்த போது சைக்கிளுடன் மிசினும் மாயமாக மறைந்து விட்டது.

தோட்டம், வீட்டிலுள்ள மா, பலா, வாழை போன்றவற்றுக்கு நீர் இறைப்பது, ஊரில் மிசின் இல்லாதவர்களின் தோட்டங்களுக்கு வாடகைக்கு விட்டுச்சம்பாதிப்பது போன்ற வேலைகளைச் செய்து வந்த மிசினை இழந்த சட்டம்பியார் தனது கையை இழந்தது போலவும்,

தோட்டத்துக்கு மிசினைக் கொண்டு போவது, காய் கறி வகைகளைக் கரவெட்டியிலிருந்து நெல்லியடிச் சந்தைக்குக் கொண்டு போவது, நெல்லியடியிலிருந்து உரம், பசளை போன்றவற்றை வீட்டுக்குக் கொண்டு செல்லும் சைக்கிளை இழந்ததால் தனது காலை இழந்தது போல் தவித்தார்.

"பாவம் சட்டம்பியார் கனவிலை கூடத்தீங்கு நினையாதவருக்கு ஆரோ ஒரு தரித்திரம் பிடிச்சது இப்பிடிச் செய்து போட்டுது. கடவுள் எடுத்தாளுக்குப் பாடம் படிப்பிப்பார். அவர் நல்ல பக்திமான். கடவுள் கைவிடார்" என ஒருசிலர் அனுதாபப்பட்டனர்.

"உந்தாளுக்கேன் தோட்டம். ஆருக்காக உப்பிடி எல்லாம் சம்பாதிக்குது. பெண்டில், பிள்ளை இல்லாதாள் கிடைக்கிற பென்சனிலை காலத்தைக் கொண்டு போகமாட்டுதே? நாளைக்கு ஆரோ ஒருத்தன் தானே கொள்ளிவைச்சிட்டு சுருட்டிக்கொண்டு போகப்போறான்".

அவரின் விடாமுயற்சி முன்னேற்றம் ஆகியவற்றைக் காணச் சகிக்காதவர்கள் புலம்பினார்கள். மூன்று தரம் தலையில் குட்டி "எல்லாம் உனக்குத் தெரியும்" என மேலே பார்த்துக் கும்பிட்டார் வேலுச்சட்டம்பியார்.

வேலுச்சட்டம்பியாரின் வீட்டின் முன்னால் நின்ற ஜீப்பிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் இறங்கினார். அவரைத் தொடர்ந்து வேலுச்சட்டம்பியாரும் சில பொலிஸ்காரர்களும் இறங்கினார்கள். சைக்கிள் நின்ற இடம், கிணற்றடி எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்த இன்ஸ்பெக்டர் "மாஸ்ரர் சந்தேகமிருந்தால் ஆளைச்சொல்லுங்கோ" என்றார்.

"ஒருதரிலும் எனக்குச் சந்தேகமில்லை" என்று வேலுச்சட்டம்பியார் சொன்னார். யார் மீதாவது சந்தேகமிருந்தால் உடனடியாக வந்து சொல்ல வேண்டும் என இன்ஸ்பெக்டர் கூறினார். பொலிஸ் ஜீப் போனதும் சுற்றி நின்று புதினம் பார்த்தவர்கள் கலையத் தொடங்கினர்.

"மாஸ்ரர் எனக்கெண்டால் உவன் யோகுவிலைதான் சந்தேகம். அவன் போகவும் வரவும் உங்கடை வீட்டைத்தான் பாக்கிறான். பொலிஸ் வந்த உடனை வெளிக்கிட்டுக் கொண்டு போனான். உடனை போய் அவனைப் பிடிச்சு நாலு அடி போட்டுக் கேக்கச் சொல்லுங்கோ" என தாமு கூறிய வார்த்தைகளைக் கேட்ட வேலுச்சட்டம்பியார் சிரித்தார்.

"தாமு, என்னுடைய சைக்கிள், மிசின் களவு போனது எல்லாம் இறைவனுக்குத் தெரியும். அவனின்றி ஓரணுவும் அசையாது கண்டியோ. அது போறதையும் அவன் பாத்திருப்பான் தாற நேரம் திருப்பித் தருவான்.

களவு போனதை நான் காணேல்லை. உன்ரை சொல்லைக் கேட்டு அவனை மாட்டி விட விரும்பேல்லை".

தனது மகளைச் சுற்றி வரும் யோகுவைக் கண்டிக்கப் பயந்த தாமு, வேலுச்சட்டம்பியாரிடம் யோகுவைப் பற்றிக் கூடாமல் சொல்லி அவனைப் பொலிஸில் மாட்டிவைத்து அடி குடுப்பிக்க வேண்டும் என எண்ணிக் கொண்டு வந்தார். அவரின் எண்ணம் நிறைவேறாத படியால் வேண்டா வெறுப்பாக விடை பெற்றார்.

பருத்தித்துறையில் சைக்கிள் களவெடுக்கும் போது பிடிபட்ட ஒருவனின் மூலம் மூன்று சைக்கிள்கள் மீட்கப்பட்டதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். வேலுச்சட்டம்பியாரின் காதுக்கும் இது எட்டியது. அவர் உடனே பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சைக்கிள்களைப் பார்த்தார். அதிலே தனது சைக்கிளும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் சென்றவர் ஏமாற்றமடைந்தார்.

"மாஸ்ரர் கவலைப்படாதேங்கோ. உங்கடை சைக்கிளும் கெதியிலை கிடைக்கும். பல வருசங்களுக்கு முந்தி களவு போன சைக்கிளெல்லாம் கிடைச்சிருக்கு. உங்கடை சைக்கிலும் கெதியாக் கிடைக்கும்" என ஆறுதல் சொல்லி அனுப்பினார் இன்ஸ்பெக்டர்.

நீண்ட நாட்களின் பின் தொண்டமானாறு செல்வச் சன்னதிக்குச் சென்ற வேலுச்சட்டம்பியார் விபூதியை அள்ளி "சிவ சிவா" எனச் சொல்லியபடி நெற்றியிலே பூசினார். தலையிலே மூன்று முறை குட்டி விநாயகனை வணங்கினார்.

முருகனின் முன்னால் நின்று இரண்டு கைளையும் தலைக்கு மேலே கூப்பியபடி, "அப்பனே முருகா ஒப்பிலா மணியே கடைசியா உன்னட்டத் தான் சைக்கிளிலை வந்தனான். உன்னைக் கும்பிட்ட பலன் அண்டைக்கே சைக்கிள் களவு போட்டுது. கள்ளனை உனக்குத் தெரிஞ்சிருக்கும். உன்னட்டை வாறேல்லை எண்டுதான் நினைச்சிருந்தனான். எண்டாலும் உன்னை மறக்க முடியவில்லையடா அப்பனே"

"நடந்து வந்து உன்னட்டை முறையிடவேணும் எண்டுதான் இண்டைக்கு நடந்து வந்தனான். நான் சொல்லித்தான் களவு போனது உனக்குத் தெரியவேணுமெண்டதில்லை. எண்டாலும் சொல்லுறன் நான் சொல்லு றதையும் கேட்டுக்கொள்" என வாய்விட்டு அழுது தனது குறைகளை வெளிப்படுத்தினார்.

இலங்கையின் எந்தப் பகுதியில் சைக்கிள் திருடன் அகப்பட்டு

சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன என்று பத்திரிகையில் செய்தி வந்தால் உடனடியாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்குப் போய் விசாரிப்பார். வேலுச்சட்டம்பியாரின் சைக்கிளும் மிசினும் களவு போனதை பலர் மறந்து விட்டனர். ஒரு சிலர் மட்டும் அவரைக் கண்டால் மட்டும் அனுதாபம் காட்டுவார்கள்.

வேலுச்சட்டம்பியார் பொலிஸ் நிலையத்திலிருந்து வந்ததும் அவரின் வீட்டை சனம் மொய்த்தது. நான்கு வருடங்களுக்கு முன் களவு போன சைக்கிள் கிடைத்ததை அறிய யாருக்குத்தான் ஆவல் இராது. பொலிஸ் நிலையம் சென்றுவந்த வேலுச்சட்டம்பியார் விபரமாக விளக்கிக் கூறினார்.

"மாத்தறைப் பொலிஸார் ஒரு சைக்கிள் திருடனைப் பிடித்தார்கள். அவன் கொடுத்த தகவல்களின் படி பல சைக்கிள்கள் மீட்கப்பட்டன. அதிலே ஒன்று அவன் பருத்தித்துறையில் உள்ள ஒருவரிடம் வாங்கியது. அந்தச்சயிக்கிள் நம்பரை பருத்தித்துறைப் பொலிசுக்கு அறிவிச்சார்கள். அது களவு போன சைக்கிள் எண்டு பருத்தித்துறைப் பொலிஸ் கண்டுபிடிச்சுது. திங்கட்கிழமை சைக்கிள் பருத்தித்துறைக்கு வரும்."

வேலுச்சட்டம்பியாரின் அதிர்ஷ்டத்தைப் பற்றி எல்லோரும் வியந்து கதைத்தார்கள். வீட்டுக்கு வந்த எல்லோருக்கும் இனிப்புக் கொடுத்தார் சட்டம்பியார்.

கோயில்கள் எல்லாவற்றுக்கும் போய் அர்ச்சனை செய்து, நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினார் சட்டம்பியார். திங்கட்கிழமை மிகுந்த சந்தோசத்துடன் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்குப் போனார் வேலுச்சட்டம்பியார்.

"மாஸ்ரர் மன்னிச்சுக் கொள்ளுங்கோ. சைக்கிள் இன்னும் வந்து சேரவில்லை. நாளைக்கு ஒருக்கா வந்து பாருங்கோ. இன்ஸ்பெக்டரின் வார்த்தையைக் கேட்ட சட்டம்பியார் மனவருத்தத்துடன் வெளியேறி னார். "இன்று போய் நாளை வாராய்" என்ற படலம் ஒரு வாரமாகத் தொடர்ந்தது. வேலுச்சட்டம்பியாருக்கு அலுத்து விட்டது. இன்று தான் கடைசி இனிப் போவதில்லை என நினைப்பார். கடைசியில் மனம் கேளாமல் போவார்.

வேலுச்சட்டம்பியாரைக் கண்ட இன்ஸ்பெக்டர், "மாஸ்ரர் நான் மிக மனவருத்தப்படுறன். சைக்கிள் கிடைக்குமெண்டுதான் எதிர்பார்த்தனான். ஆனால் இப்பிடிக்கிடைக்குமெண்டு நினைக்க வில்லை" எனக்கூறி ஒரு அறையைக் காட்டினார்.

அவர் காட்டிய அறையினுள் நுழைந்த சட்டம்பியார் திடுக்கிட்டார். தன்னுடைய சைக்கிள் தானா என அறிவதற்காக அருகிலே போய் இலக்கத்தைப் பார்த்தார். சரியான இலக்கம் தான். மனம் கேளாமல் ஒவ்வொரு இலக்கமாகப் பார்த்தார். முழுச் சைக்கிளாகப் போனது முக்கோண பிறேமாகத் திரும்பி வந்துள்ளது.

இன்ஸ்பெக்டர் காட்டிய இடத்தில் கையெழுத்திட்டு விட்டு முக்கோணப்பிறேமைத் தூக்கித் தோளிலே போட்டுக் கொண்டு பொலிஸ் ஸ்ரேசனை விட்டு வெளியேறினார் வேலுச்சட்டம்பியார்.

நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பற்றிய தகவல் ஒன்றும் தெரியவில்லை. இதெண்டாலும் கிடைத்ததே என வேலுச்சட்டம்பியார் நினைக்கையில் "போனால் போகட்டும் போடா இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா......." என்ற பாடல் வானொலியில் ஒலிபரப்பாகியது.

"மனிதனே போறான். இடையில் இது என்ன பெரிசா? அடச்சீ போனால் போகட்டும்" எனக்கூறிக் கொண்டு நடந்தார் வேலுச் சட்டம்பியார். ●

**ஈழநாடு வாரமலர் ஞாயிற்றுக்கிழமை 02.12.1979**

# பொன்னுக் கிழவி ●

பொன்னுக் கிழவியின் உயிர் இப்பவோ இக்கணமோ என்று இருக்கிறது. உறவினர்கள், தெரிந்தவர்கள், வேண்டியவர்கள் வந்து பார்த்துக் கொண்டு போகிறார்கள். வர முடியாதவர்கள் வந்து பார்த்துப் போனவர்களிடம், "எப்பிடி இருக்கு? இப்ப போகுமோ?" என்று வினவினார்கள்.

வெளி இடங்களில் உள்ளவர்களுக்கு தந்தியிலும், தொலைபேசியிலும் நிலைமை அறிவிக்கப்பட்டது. காணிப் பிரச்சினை காரணமாக கிழவியுடன் மூன்று வருடமாகப் பேசாதிருந்த சீதா ஓடி வந்து தலைமாட்டில் இருக்கிறாள்.

கிழவிக்குக் கிட்டப்போய் "எணை ஆச்சி என்னைத் தெரியு தேணை" என யாராவது கேட்டால் போதும் சீதாவும் ஓடிப்போய் "எணை கண்ணை முளிச்சுப்பாரணை நான் சீதா வந்திருக்கிறன்" என்று தானும் இருப்பதாக மற்றவர்களுக்குக் காட்டிக் கொண்டாள்.

"இளந்தாரிப் பொடியள் திடீர் திடீரெனச் சாகுதுகள். இது போகமாட்டன் எண்டு இழுபறிப்படுது" கிழவி இன்னமும் சாகவில்லை என்ற எரிச்சலில் ஒருவர் பிரலாபித்தார். விபுலன் தோளில் சால்வையும் கையில் கடதாசிக் கட்டுமாக அலுவல் பாக்கிறான்.

வாய்கொள்ளாத வெற்றிலையைப் போட்டு குதப்பிக் கொண்டு மடியிலும் வெற்றிலையையும் சுருட்டையும் கட்டிக் கொண்டு கதைக்க முடியாமல் பிறகு வருகிறேன் எனச் சைகையில் காட்டி விட்டு நடையைக் கட்டினார் சின்னராசு. எட்டு முடிவதற்கிடையில் அவர் வீட்டில் வெற்றிலைக் கடை ஆரம்பித்துவிடும்.

"எடே செல்வன் சுருட்டைக் கொண்டந்து குடடா. சுருட்டுக்கேட்டு என்னைக் கரைச்சல் படுத்துகினம்" சுருட்டுக் கேட்டு செல்வனை ஏவினார்

கந்தவனம். ஒரு தட்டில் சுருட்டையும் கயிற்றுத் தணலையும் கொண்டு வந்து கந்தவனத்துக்கும் இன்னும் சிலருக்கும் இடையில் வைத்தான் செல்வன்.

கந்தவனம் ஒரு சுருட்டை எடுத்து வலது காதில் செருகினார். இன்னொன்றை வாயில் வைத்து புகையை வெளியே விட்டார். சுருட்டு பாதி புகைந்ததும் இன்னொரு சுருட்டை எடுத்து மடியிலே வைத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்றார்.

ஒருவருக்கும் தெரியாமல் இரவு இரண்டாவது காட்சிக்குப் போவதற்கு சில இளைஞர்கள் திட்டமிட்டனர். பொன்னுக்கிழவி, பொன்னாத்தா, பொன்னுப்பேத்தி என எல்லோராலும் அழைக்கப்படும் அவரின் பெயர் பொன்னி என்பது பலருக்குத் தெரியாது.

பொன்னிக்குப் பத்து வயதாக இருக்கும் போதே அவரின்பாட்டி "எனக்கென்ன என்ரை பொன்னி சாமத்தியப்பட்டாப்போலை தான் கண்ணை மூடுவன். அதுக்கு முதல் நான் போக மாட்டன்" எனச் சொல்வாள்.

ஆசை நிறைவேற நான்கு வருடங்களுக்கு முன்னமே பொன்னியின் பாட்டி போய்ச் சேர்ந்து விட்டாள். பொன்னிக்குத் திருமணம் முடிந்து சரஸ்வதி என்ற குழந்தையைப் பெற்றாள். "என்ரை சரசுவதி சாமத்தியப் பட்டாப் போலை தான் சாகுவன்" என்ற பல்லவியைப் பாடத்தொடங்கிய பொன்னியின் தாயும் ஆசை நிறைவேற முன்னர் காலமானாள்.

சரஸ்வதி ஆசிரியராகக் கடமையாற்றுகிறாள். அவளது கணவன் பிரபல பாடசாலையின் அதிபர். அவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு சிவசோதி எனப் பெயரிட்டனர். முன்னோர்க்கு தான் சற்றும் சளைத்தவள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் "உவள் சோதி பெரிசானாப் போலை தான் நான் கண் மூடுவன்" என அடிக்கடி கூறினார் பொன்னுக் கிழவி. "அவளின்ரை கலியாண வீட்டுக்கும் நீ இருப்பாயணை" என ஆறுதல் கூறுவாள் மகள் சரஸ்வதி.

சிவசோதியும் அம்மாச்சி அம்மாச்சி என பொன்னியின் மடியிலே நெடுக இருப்பாள். பொன்னுக்கிழவியின் பரம்பரையில் நடக்காதது நடந்து விட்டது. சிவசோதி பெரிசாகும் வரை பொன்னுக்கிழவி உயிருடன் இருந்து விட்டாள்.

"சிவசோதியும் கலியாணம் கட்டினாப் போலை தான் நான் கண் மூடுவன்" என்ற புதிய பல்லவியைப் பாடத்தொடங்கினாள் பொன்னுக்கிழவி. சிவசோதியின் திருமணத்துக்கிடையில் பொன்னுக் கிழவி எத்தனையோ

முறை செத்துப் பிழைத்தாள். சிவசோதியின் திருமணத்தன்று பொன்னுக்கிழவி மிகவும் உசாராக வேலை செய்தாள். சாகக்கிடந்த கிழவியா இது என அனைவரும் ஆச்சரியப் பட்டனர்.

சிவசோதியின் கணவன் கொழும்பிலே தனியார் நிறுவனம் ஒன்றில் பொறுப்புள்ள அதிகாரியாகக் கடமையாற்றுகிறார். சிவசோதி கணவனுடன் கொழும்புக்குப் புறப்பட்ட போது பொன்னுக்கிழவி அழுதுவிட்டாள். சிவசோதியும் தன்னை மறந்து அழுதாள்.

"அம்மாச்சி அம்மாவைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளனை" என பொன்னுக்கிழவியிடமும். "அம்மா அம்மாச்சியைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளனை" என தாயிடமும் கூறினாள் சிவசோதி.

பொன்னுக்கிழவிக்குப் புதியதொரு ஆசை பிறந்தது. "சோதிக் கொரு பெட்டை பிறந்தாப் போலை தான் நான் சாகுவன்" என்று கூறினார் பொன்னுக்கிழவி. சிவசோதி கர்ப்பமானாள். சோதிக்குப் பொம்பிளைப் பிள்ளை பிறக்க வேண்டும் என ஊரில் உள்ள கோயில்கள் எல்லா வற்றிலும் நேர்த்தி வைத்தார் பொன்னுக்கிழவி. எல்லாக் கடவுளும் சேர்ந்து கிழவியை ஏமாற்றி விட்டார்கள். சிவசோதி அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அடுத்தது பொம்பிளைப்பிள்ளை தான் என்று மனதைத் தேற்றினாள் பொன்னுக்கிழவி.

"சலசா சலசா" என்று குழந்தையைச் செல்லங்காட்டினாள் பொன்னுக் கிழவி. அப்போது அங்கே வந்த ரமணன் "அம்மாச்சி தங்கச்சியின்ரை பேர் சலசா அல்ல சைலஜா" என்று திருத்தினான். தாய் சிவசோதி அம்மாச்சி என்று கூப்பிடுவதால் அவனும் அப்படியே கூறினான்.

பொன்னுக்கிழவி சாகத்துணிந்து விட்டாள். "பேத்தீன்ரை பொடியளை யும் கண்டாச்சு நான் இனிச்சாகலாம்" என்று எல்லோரிடமும் சந்தோச மாகக் கூறுவாள். ஆண்டொன்று போகப்போக ஆசைகளும் வளரத் தொடங்கின. "இன்னும் கொஞ்சக்காலம் தான் சலசா பெரியபிள்ளை யானாப் போலை தான் நான் கண்மூடுவன். அதுவரையும் யமன் எனக்குக் கிட்ட வரமாட்டான்" என்றாள் பொன்னுக்கிழவி.

சைலஜா பெரியவளாகு முன் பொன்னுக்கிழவியைக் கூட்டிப் போக யமன் வந்து நிற்கிறான். அவளை வழியனுப்பி வைக்க எல்லோரும் ஆயத்தமாக நிற்கிறார்கள். வாசலில் கார் வந்து நின்றது. சிவசோதியும் கணவனும் பிள்ளைகளும் இறங்கினர். சிவசோதி "அம்மாச்சி" எனக் கூப்பிட்டு "என்னைத் தெரிகிறதா" எனக் கேட்டாள். பொன்னுக்கிழவி

ஒன்றும் பேசாது கிடந்தாள். சைலஜா கூப்பிட்ட போதும் ஒரு அசைவும் தென்படவில்லை.

சிவசோதி வந்து இரண்டு நாட்களாகி விட்டது. எல்லாம் அப்படியே தான் உள்ளது. தங்கம் உரைஞ்சிப் பருக்கினால் ஆசை அடங்கும் என யாரோ ஒரு புத்திசாலி சொன்னார். அதையும் செய்து பார்த்தார்கள். ஒரு அசைவும் தென்படவில்லை.

பெண்களிடையே திடீரென ஒரு பரபரப்பு தென்பட்டது. சத்தம் வெளியே வராமல் கதைத்தார்கள். சிலர் நம்ப முடியாமல் உண்மையா என அறிவதற்கு வெளியே சென்றனர். அதை அவதானித்த ஆண்களும் என்ன என அறிவதற்கு ஆர்வம் காட்டினர். ஆண்களும் அறிந்து விட்டனர். “என்னடாப்பா இந்தக்கிழவி இப்பிடிக்கிடக்க அது அப்பிடியாப்போச்சு” என்றனர்.

பொன்னுக்கிழவிக்கருகில் சென்ற சரஸ்வதி மெதுவாகக் குனிந்து காதருகே “அம்மா” என மூன்று முறை கூப்பிட்டாள். கிழவி மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்தாள். “சைலஜா சாமத்தியப்பட்டுவிட்டாள்” என்று சரஸ்வதி கூறினாள்.

கிழவி கண்ணை நன்றாக விழித்துப் பார்த்துச் சிரித்தாள். ஏதோ சொல்வதற்கு முயற்சித்தாள். வார்த்தைகள் வரவில்லை. “சரசக்கா” என யாரோ கூப்பிடத் திரும்பிப் பார்த்த சரஸ்வதி மீண்டும் பொன்னுக் கிழவியைப் பார்த்த போது கண்கள் மூடி இருந்தன. அவை நிரந்தரமாக மூடிவிட்டன.

**ஈழநாடு வாரமலர் 01.02.1981**

## மிலேனியம் அப்பா ●

வள்ளிப்பிள்ளையால் நம்பமுடியவில்லை இப்படியும் நடக்குமா என தனக்குள் திரும்பத்திரும்பக் கேட்டுக் கொண்டாள். ஐம்பது வயது அனுபவத்தில் அவள் எத்தனையோ பேருக்கு ஆலோசனைகளும், அறிவுரைகளும் கூறியிருக்கிறாள்.

இன்று அவள்மீது கேலிப்பார்வைகளும் கிண்டல் பேச்சுக்களும் வரப்போவதை எண்ணி மனதுக்குள் வெதும்பினாள். சின்னஞ் சிறிசுகளுக்கு முன் எப்படி நிற்கப்போகிறேன்? எனப்பொருமினாள். பேரப்பிள்ளைகளைக் காணவேண்டிய வயதில் இப்படி ஒரு நிலையா எனத் துவண்டாள்.

வள்ளிப்பிள்ளையின் கணவன் பொன்னம்பலம் மூன்று நாட்களாக வீட்டுக்குச் செல்லவில்லை. பகலில் பல இடங்களுக்குச் செல்லும் அவர் இரவில் கோயில் மடத்தில் தங்கினார். தனிமையில் இருக்கும் போது தற்கொலை எண்ணம் அவர் மனதில் சிறகடித்தது.

எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? அறுபது வயதில் அப்பாவாகப் போவதைச் சந்தோசமாகச் சொல்ல முடியுமா? ஊர்ப் பெரியவர்களின் அழுத்தத்தால் பொன்னம்பலம் வீட்டுக்குச் சென்றார். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்ற பழமொழிகளை மனதில் இருத்தியதால் வள்ளிப்பிள்ளை அவரை ஏற்றுக் கொண்டாள்.

கோயில், சந்தை, கலியாணவீடு, செத்தவீடு போன்ற நிகழ்ச்சிகள் எதற்கும் வள்ளிப்பிள்ளை போவதில்லை. பொன்னம்பலம் தான் எங்கும் செல்வார். எவருடனும் அதிகமாப் பேசமாட்டார். அதிக நேரத்தை வீட்டிலேயே கழிப்பார்.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் மகன் என்ன சொல்வானோ எனத்

தெரியாது இருவரும் கலக்கமடைந்தனர். ஆனால் இதைப் பற்றித் தெரிந்த அவன் ஒரு வரியும் எழுதாமல் வழமை போன்றே கடிதம் எழுதினான்.

பத்திரிகை படித்துக் கொண்டிருந்த பொன்னம்பலத்துக்கு எதிரே யாரோ நிற்பதைப்போன்ற உணர்வு உண்டானதும் பத்திரிகையை விலத்திப் பார்த்தார். அறிமுகமில்லாத நான்கு பேர் அவர் முன் நின்றனர். பொன்னம் பலம் கதைக்க முன்னர் அவர்களில் ஒருவர் கதையைத் தொடங்கினார்.

"ஐயா இங்கே பொன்னம்பலம் என்கிறது நீங்கள் தானே.?"

ஆமாம் என்பதுபோல பொன்னம்பலம் தலையாட்டினார்.

"டொக்டர் வடிவேல் உங்களைப் பற்றிச் சொன்னவர். அது தான் உங்களைச் சந்திக்க வந்தனாங்கள்."

"உதிலை இருங்கோ. நீங்கள் ஆர்? என்ன விசயமாக என்னைச் சந்திக்க வந்தனியள்?"

"சக்தி வைத்தியசாலையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறியளே.?"

"ஓமோம் கொழும்பிலை பெரிய வைத்தியசாலை அது."

"நாங்கள் அங்கை இருந்து தான் வந்திருக்கிறம்."

பொன்னம்பலம் எதுவும் புரியாமல் அவர்கள் நால்வரின் முகத்தை யும் மாறிமாறிப் பார்த்தார். வள்ளிப்பிள்ளை குசினி அலுவலை இடையில் விட்டுவிட்டு அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்பதைக் கேட்க வாசலில் நின்றாள்.

"அடுத்த ஆண்டு மிலேனியம் ஆண்டு."

தெரியும் என்பது போல் பொன்னம்பலம் தலையாட்டினார்.

"மிலேனியம் குழந்தை எங்கே பிறக்கும் எண்டு சொல்ல முடியாது. மிலேனியம் குழந்தை எங்கள் வைத்தியசாலையில் பிறக்க வேண்டும் என எங்கள் வைத்தியசாலை நிர்வாகம் விரும்பியது. அதனால் மிலேனியம் குழந்தையைப் பற்றிய விபரங்களைச் சேகரித்தோம். டொக்டர் வடிவேல் உங்கள் விலாசத்தைத்தந்து மிலேனியம் குழந்தைக்கு அப்பாவாகும் அதிர்ஷ்டம் உங்களுக்கு இருப்பதாகச் சொன்னார். அடுத்த வாரம் இங்கு வரும் எங்கள் வைத்தியசாலைக் குழுவினர் உங்கள் மனைவியைப் பரிசோதிப்பார்கள். ஒவ்வொரு மாதமும் இங்கு வந்து பரிசோதனை செய்வார்கள். மிலேனியம் குழந்தைக்கு நீங்கள் அப்பாவானால் நாங்களும் சந்தோசப்படுவோம்" எனச்சொல்லி விட்டு நால்வரும் சென்றார்கள்.

அதிர்ச்சியடைந்த பொன்னம்பலமும் வள்ளிப்பிள்ளையும் அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

1999 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி இரவு 10 மணி சக்தி வைத்தியசாலையில் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களும் வானொலி, பத்திரிகை நிருபர்களும் தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் இருந்தனர்.

மிலேனியம் அப்பாவாகப் போகும் ஒரு சிலர் அங்கும் இங்கும் நடமாடிக் கொண்டிருந்தனர். பொன்னம்பலமும் அவர்களில் ஒருவராக ஒரு கதிரை யில் அமைதியாக இருந்தார். தனிமையில் யோசித்துக் கொண்டிருந்த பொன்னம்பலம் "அப்பா" என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார். எதிரே அவரு டைய மகன் நின்றார்.

"சாப்பிட்டீங்களா?" என மகன் கேட்டதும் தன்னையும் அறியாமல் எழுந்து மகனைத் தடவியபடி "சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லை. அடிக்கடி வயித்தாலைபோகுது" என்றார். அவரை இருக்கும் படி கூறிவிட்டு அப்பால் சென்றான் மகன்.

மிலேனியம் ஆண்டு பிறக்க இன்னமும் அரை மணித்தியாலம் இருக் கிறது. வைத்தியசாலை புதியகளை கட்டியது. வைத்தியர்களும் ஊழியர் களும் சரித்திர முக்கியத்துவம் பெறப்போகும் நிகழ்வுக்காகத் தம்மைத் தயார்ப்படுத்தினர்.

விடைபெறப்போகும் நூற்றாண்டைப் பற்றிக் கவலைப்படாது மலரப் போகும் புத்தாண்டில் பிறக்கப்போகும் குழந்தையைப்பற்றியே அங்குள்ள அனைவரும் சிந்தித்தார்கள்.

அந்த ஹோலிலுள்ள மணிக்கூடு புதிய ஆண்டு பிறக்க இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருப்பதாகக் காட்டியது. ஏதாவது குடிக்க வேண்டும் என பொன்னம்பலத்தின் மனது கூறியது. வெளியே போய் வருவதற்கிடையில் மிலேனியம் ஆண்டும் குழந்தையும் பிறந்து விடுமோ என்ற பயத்தில் வெளியே செல்லாமல் காத்திருந்தார்.

இன்னும் ஐந்து நிமிடம் இருக்கு என யாரோ சொல்ல பொன்னம் பலத்தின் இதயம் வேகமாக அடித்தது. திடீரென அவரின் வயிற்றி னுள் விநோதமான சத்தங்கள் உண்டாயின. வயிற்றைத் தடவியபடி அவர் ஹோலை விட்டு வெளியேறினார்.

வயிறு உபாதையை முடித்துக் கொண்டு பொன்னம்பலம் வெளியே வந்த போது மிலேனியம் குழந்தை பிறந்து விட்டது. அவசர அவசரமாக

அவர் ஹோலுக்குள் நுழைந்த போது டொக்டரைச் சுற்றி எல்லோரும் நின்றார்கள். சனத்தைத் தாண்டி டொக்டரின் அருகில் செல்ல முடியாத பொன்னம்பலம் ஒரு கதிரையில் ஏறி நின்று பார்த்தார்.

தொலைக்காட்சிக் கமராக்கள் டொக்டரை மொய்த்தன. பொன்னம் பலத்தின் மகனும் டொக்டரின் அருகில் நின்றார். கமரா வெளிச்சங் கள் மின்னல் போல் எங்கும் ஒளியைச் சிந்தின. டொக்டர் சொல்வது பொன்னம்பலத்துக்குக் கேட்கவில்லை. மிலேனியம் அப்பா யாரென அறிவதற்காக கதிரையில் நின்றவாறே உயர்ந்து உயர்ந்து பார்த்தார்.

டொக்டரின் அருகில் நின்ற பொன்னம்பலத்தின் மகன் தகப்பனைக் காட்டி ஏதோ சொன்னார். உடனே அனைவரும் பொன்னம்பலத்தை நோக்கிச் சென்றனர். சந்தோசத்தில் பொன்னம்பலத்தின் கை கால் எல்லாம் நடுங்கின. மிலேனியம் ஆண்டையும் மிலேனியம் குழந்தையையும் வரவேற்கும் வெடிச்சத்தங்கள் அவருடைய காதைச் செவிடாக்கின.

மிலேனியம் அப்பா என்ற சந்தோசத்தில் என்ன குழந்தை? வள்ளிப்பிள்ளை சுகமாக இருக்கிறாளா? என்பதை எல்லாம் மறந்து சந்தோசக் கனவுகளில் மிதந்தார் பொன்னம்பலம். தொலைக்காட்சிக் கமராக்களின் வெளிச்சம் அவரின் உடலை நெருப்புப் போல் சுட்டன. புகைப்படக் கமரா வெளிச்சங்கள் அவர் கண்களுக்கு ஒளிக்கோலம் காட்டின. டொக்டர் பொன்னம்பலத்தின் கையைப் பிடித்துக் குலுக்கினார். கைகளைத்தலைக்கு மேலே உயர்த்திக் கும்பிட்டார் பொன்னம்பலம்.

தொலைக்காட்சி நிருபர் ஒருவர் பொன்னம்பலத்தின் அருகில் சென்று “உங்கள் மகன் மிலேனியம் அப்பாவாகி விட்டார். உங்களை மிலேனியம் தாத்தா என அழைக்கலாமா?” எனக் கேட்டார்.

திடீரென பொன்னம்பலம் மயங்கிவிழ கிழவன் சந்தோசத்திலை மயங்கிட்டுது என யாரோ சொல்வது அவர் காதுகளில் அரை குறையாகக் கேட்டது. ●

**தினக்குரல் 01.01.2000**

## என்னைத் தெரியுமா?

கல்பனாவைக் கண்டதும் சிரித்துத் தலையாட்டும் அனைவரும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்.

மிகக் குறுகலான ஒழுங்கை என்றதால் ஆட்டோ மெது மெதுவாகச் சென்றது. கலவரமடைந்த கல்பனா பின்னுக்குப் பார்த்தாள். பின்னால் நின்றவர்கள் ஆட்டோ வைக் காட்டி ஏதோ கதைத்தார்கள்.

வீடுகளுக்குள் இருந்தவர்கள் வீதிக்கு வந்து விட்டார் கள். ஒரு சிலர் ஆட்டோவைத் தொடர்ந்தார்கள். கல்பனா வின் வீட்டிற்குச் செல்லும் பாதையில் ஆட்டோ திரும்பிய தும் கல்பனாவின் இரத்தம் உறைந்தது.

கல்பனாவின் வீட்டைச் சுற்றிப் பல பொலிஸ்காரர்கள் நின்றார்கள். இரண்டு பொலிஸ் ஜீப்கள் வெளியே நின்றன. ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதென உணர்ந்த கல்பனாவின் கை கால்கள் பதறின.

கல்பனாவின் வீட்டில் பொலிஸார் குவிந்திருந்ததைக் கண்ட ஆட்டோ டிரைவர் கண்ணாடியில் கல்பனாவைப் பார்த்தான். அவனது கண்களில் சந்தேக ஒளி படர்ந்தது.

கல்பனா கடந்த ஐந்து வருடங்களாக வத்தளையில் வாழ்ந்து வருகிறாள். அவளது கணவன் கடந்த வருடந் தான் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றான். இரண்டு குழந்தை களும் அவளும் மட்டுமே தற்போது அந்த வீட்டில் வசிக்கிறார்கள்.

அந்த சுற்றாடலிலுள்ள அனைவருடனும் கல்பனா மிகவும் நட்பாகப் பழகினாள். மரக்கறி வியாபாரி, மீன் வியாபாரி, சந்தியிலுள்ள ஆட்டோ சாரதிகள் அனைவரும் அவள் மீது மதிப்பு வைத்திருந்தனர்.

முன்னால் பொலிஸ், பின்னால் ஊர் மக்கள் ஒரு சில விநாடிகள் பல யுகம் போல கழிந்தன. ஆட்டோ வாசலில் நின்றதும் கல்பனா

வைக் காட்டி "இவதான் வீட்டிலே இருக்கிறா" என டிரைவர் பொலிஸ் காரரிடம் கூறினார்.

குனிந்து கல்பனாவைப் பார்த்த பொலிஸ்காரர் ஆட்டோவை உள்ளே போகும்படி பணித்தார். வீட்டிலிருந்து ஏதாவது தடை செய்யப்பட்ட பொருள் எடுத்தினமோ தெரியாது. கடவுளே முந்தி இருந்தது யாரென்றும் தெரியாது என கல்பனாவின் எண்ண அலைகள் ஓடின.

நடுங்கியபடி கல்பனா ஆட்டோவை விட்டு இறங்கிய போது "நீயா இங்கு இருப்பது" என பொலிஸ் அதிகாரி ஒருவர் சிங்களத்தில் கேட்டார். கல்பனா சிங்களத்தில் பதில் சொன்னாள்.

"சிங்களம் தெரியுமா?" என அந்த அதிகாரி மீண்டும் சிங்களத்தில் கேட்ட போது "கொஞ்சம் விளங்கும். கொஞ்சம் தெரியும்" எனத் தடுமாறி தனக்குத் தெரிந்த சிங்களத்தில் கூறினாள். பொலிஸ் அதிகாரி உடனே தமிழில் கதைக்கத் தொடங்கினார்.

"உங்க பெயர் கல்பனா. மாப்பிள்ளை பிரான்ஸிலை. இரண்டு பிள்ளைகள் பம்பலப்பிட்டியில் படிக்கினம். விசா கிடைச்சா பிரான்ஸிற்குப் போவியள். சொந்தக்காரர் வெளிநாட்டிலையும் யாழ்ப்பாணத்திலையும் இருக்கினம். சரிதானே" என்றார்.

கல்பனா ஒன்றும் பேசாமல் மௌனமாக நின்றாள். "இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்" என அதிகாரி கேட்டார்.

"நீங்க பொலிஸ். உங்களுக்கு எல்லாம் தெரியும்" எனத் தயங்கித் தயங்கி கல்பனா பதிலளித்தாள்.

"உங்களுக்குப் பிடிச்ச நடிகர் விஜய். நடிகை சிம்ரன். கடைசியாகப் பார்த்த படம் ஜெமினி. பிடிச்ச பாட்டு ஓ...போடு" எனக் கூறிய அதிகாரி கல்பனாவை உற்றுப் பார்த்தார்.

இதெல்லாம் கூட பொலிஸுக்கு எப்படித் தெரியும் என கல்பனா குழம்பினாள்.

"எனக்கு மட்டுமில்லை உலகத்துக்கே தெரியும்... நீங்கதான் சொன்னீங்க" என பொலிஸ் அதிகாரி கூறினார்.

பொலிஸ் அதிகாரி கூறிய வார்த்தையின் அர்த்தம் தெரியாமல் கல்பனா தடுமாறினாள்.

"போன கிழமை ரேடியோவில் உங்களைப் பற்றி சகல விபரங்களையும்

சொன்னீங்கள்... அதைக் கேட்டிட்டு ஒருத்தன் திருட வந்திட்டான்.

பக்கத்து வீட்டுக்காரர் போன் பண்ணினதாலை நாங்க வந்து அவனைப் பிடிச்சம்... ரேடியோவிலை கேட்டிட்டு பல இடங்களிலை அவன் திருடியிருக்கிறான். உங்களைப் பற்றி சகல விபரங்களையும் சந்தோஷமாகச் சொல்லுவீங்க... பிறகு களவு போனாப்போல எங்களிட்டை ஓடி வருவீங்க... அந்திக்கு பொலிஸ் ரேசனுக்கு வாங்க" எனக் கூறிவிட்டு சக பொலிஸ்காரர்களையும் அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

பொழுதுபோக்கு விபரீதமானதைக் கண்ட கல்பனா இனி இப்படிச் செய்வதில்லை என முடிவெடுத்தாள். ●

இடி வாரமலர் 2002

தாயகம் டிசம்பர் 2007

## செல்லாக்காசு

“எத்தினை முறை சொல்லிப்போட்டன். பேப்பர் படிச்சது போதும். முதல்லை கோயிலுக்குப் போட்டு வாங்கோ. இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை”

“கொஞ்சம் பொறுமப்பா. சும்மா மேலாலை பாத்துப் போட்டு போறன்”.

“அதுதான் நானும் சொல்லுறன். இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை கோயிலிலை சனம் வரமுதல் போட்டு வாங்கோ. மூத்த பேத்தீன்ர பேத்டே. நல்ல நாளில் வேலையை மினகெடுத்தாதேங்கோ.”

“சரி சரி குடையை எடுத்துவா. கோயிலாலை வந்து மிச்சத்தைப் பாப்பம்”. கணேசமூர்த்தி வேண்டா வெறுப் பாக பேப்பரை மடித்து வைத்து விட்டு நிமிர்ந்த போது அவர்கள் வாடகைக்கு இருக்கும் வீட்டுக்காரி முன்னால் நின்றாள்.

ஏதாவது வேலை இருந்தால் மட்டும் அவள் கணேசமூர்த்தியைத் தேடி வருவாள். என்ன வேலையாக இருந்தாலும் கோயிலாலை வந்துதான் செய்து கொடுக்க வேண்டும் என நினைத்தபடி கணேசமூர்த்தி அவளைப் பார்த்து சிரித்தான்.

“குட்மோர்னிங் மிஸ்டர் மூர்த்தி, நீங்கள் தந்த காசிலை ஒரு ரென்ருப்பி சரியான டமேஜ்” எனக் கூறியபடி பத்து ரூபாவைத் தூக்கிக் காட்டினாள்.

“இஞ்சாருங்கோ பத்து ரூபா இருந்தா அன்ரிக்குக் குடுங்கோ” என்று மனைவியிடம் கூறினார் கணேசமூர்த்தி.

“நோ நோ மிஸ்டர் மூர்த்தி ஏமாத்துக்காரர் தான் இப்ப அதிகம். நாங்க தான் கவனமாக பாத்து நடக்க வேணும்” என்று கூறிய வீட்டு

உரிமையாளர் கணேசமூர்த்தியின் மனைவி கொடுத்த பத்து ரூபாவை வேண்டிக் கொண்டு சென்றாள்.

“கோயிலாலை வரேக்கை பத்து ரூபாவை மாத்திக் கொண்டு வாறன்” என்று கூறிவிட்டு மனைவியின் பதிலையும் எதிர்பாராது வீட்டை விட்டு வெளியேறினார் கணேசமூர்த்தி. பத்து ரூபா மாற்றப்படவில்லை என்றால் அது பெரிய சரித்திரமாகிவிடும். கணேசமூர்த்தி காசை மாற்றமாட்டார் என்ற நம்பிக்கையில் மனைவி மனதுக்குள் சிரித்தாள்.

கணேசமூர்த்திக்கு மூன்று ஆண் பிள்ளைகள். கனடா, இத்தாலி, ஜேர்மனி நாடுகளில் மூவரும் குடும்பமாக இருக்கின்றார்கள். ஒருவர் அங்கேயே யாரோ ஒருத்தியைக் கட்டிவிட்டான். ஒருவனின் திருமணம் இந்தியாவிலும், அடுத்தவனின் திருமணம் சிங்கப்பூரிலும் நடந்தது. கடைசி காலத்திலை பெற்றோர் சுகமாக இருக்க வேண்டும் என்பதற்காக வெள்ளவத்தையில் வசதியான வீடொன்றில் அவர்களைக் குடியமர்த் தினார்கள் பிள்ளைகள். வாரத்திலை ஒரு நாளைக்கு மூன்று பேரும் பெற்றோருடன் பேசுவார்கள். கணேசமூர்த்தியின் மனைவிதான் முதல் கதைப்பாள். ஆடு குட்டி போட்டது. வாழை குலை போட்டது. வேலி அடைச்சது. ஊரிலை நடக்கும் கலியாணம், குழம்பின கலியாணம், காணி வாங்கினது, விற்றது என சகல செய்திகளும் தொலைபேசியில் கதைத்தபின் கணேசமூர்த்தியும் அவற்றையே திரும்பவும் கதைப்பார்.

கொழும்பிலை நடக்கிற ஒரு நிகழ்ச்சியையும் கணேசமூர்த்தி தவறவிட மாட்டார். புதுப்படம் வெளியான உடனே வீடியோ கடைக்காரன் வீடு தேடி வந்து கொப்பியைக் குடுத்திட்டுப் போவான். சந்தியில் நிற்கும் ஆட்டோ ஒண்டு இவர்களை நம்பித்தான் நிற்கிறது. இருமினால், தும்மினால் உடனே காசு கட்டி முழுப் பரிசோதனையும் நடக்கும்.

கோயிலில் நிறைய சனம் என்றாலும் அங்குள்ள குருக்கள்மார் எல்லோருக்கும் கணேசமூர்த்தியைத் தெரியுமென்பதால் அவரை விஷேசமாகக் கவனித்தார்கள். அர்ச்சனைக்கு இருபத்தைந்து ரூபா ரிக்கெற் ஆனால், கணேசமூர்த்தி நூறு ரூபா தட்சணை கொடுப்பார். காளாஞ்சியை சொப்பிங் பாக்கில் போட்டுவிட்டு உண்டியலுக்கு காசு போட பொக்கற்றினுள் கையை விட்டு காசை எடுத்தபோது கிழிஞ்ச பத்து ரூபா தான் வந்தது. கையை பொத்தியபடி காசை மடித்து உண்டியலுக்குள் செருகினார். மனசு கேட்கவில்லை. கிழிஞ்ச பத்து ரூபாவை வைத்துவிட்டு ஐம்பது ரூபாவை எடுத்து உண்டியலினுள் போட்டார். செருப்பு பாதுகாப்பாளரிடம் துண்டையும் கிழிஞ்ச காசையும்

கொடுத்துவிட்டு பராக்குப் பார்த்தார். அவன் செருப்பைக் கொடுத்து விட்டு "ஐயா இந்தக் காசு சரியில்லை, இல்லாட்டி பிறகு வரேக்க தாருங்கோ" என்றான்.

"ஓ, தம்பி நான் கவனிக்கவில்லை. ஆரோ கூடாத காசு தந்திட்டாங்கள்" எனக் கூறியபடி இரண்டு ரூபா நாணயத்தைக் கொடுத்தார்.

இரண்டு முயற்சியும் தோல்வியடைந்ததால் பஸ்காரனிடம் மாற்றலாம் என கணேசமூர்த்தி நம்பினார். சனமில்லாமல் வந்த இரண்டு பஸ்களைத் தவற விட்டு விட்டு சனம் நிரம்பி வந்த பஸ்ஸில் ஏறினார் கணேசமூர்த்தி. வெள்ளவத்தை எனக் கூறிவிட்டு மனம் படபடக்க கொண்டக்டரைப் பார்த்தார் கணேசமூர்த்தி. கொடுத்த பத்து ரூபாவை வைத்துக் கொண்டு வேற ஆட்களிடம் காசை வேண்டிக் கொண்டு மிச்சக்காசையும் கொடுத்தான். கணேசமூர்த்தி கொடுத்த பத்து ரூபாவை புரட்டிப் புரட்டிப் பார்த்த கொண்டக்டர்,

"மாத்தையா இந்த சல்லி நீங்க தந்ததுதானே? தெஹிவலை, கல்கிசை, பாணந்துற எல்லாம் தெரியுது''எனச்சிரித்தபடி கூறினான். கொண்டக்டரிடமிருந்து பத்து ரூபாவை வாங்கிக் கொண்டு மூன்று ரூபா கொடுத்தார் கணேசமூர்த்தி. பஸ்ஸில் இருந்த எவரையும் நிமிர்ந்து பார்க்காது கூச்சத்துடன் நின்ற கணேசமூர்த்தி வெள்ளவத்தை பஸ் நிலையத்தில் இறங்கினார்.

கிழிந்த பத்து ரூபாவை மாற்றுவதற்கு கணேசமூர்த்தி மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்ததால் மனைவிக்கு என்ன கூறுவது எனத் தெரியாது தவித்துக் கொண்டிருந்தவருக்கு எதிரே கடவுள் போல் சுவீப் ரிக்கெற்காரன் வந்தான். சுவீப் ரிக்கெற்காரன் கட்டாயம் மாற்றித்தருவான் என்ற நம்பிக்கையிலே அவனை மறித்து சுவீப் ரிக்கெற்றுகளைப் பார்த்தார். அவன் ஒவ்வொரு ரிக்கெற்றையும் கூறி அதற்குரிய பரிசுத்தொகையையும் கூறினான். ஏதோ நினைத்தவராக சுரண்டல் ரிக்கெற்றினை நகத்தால் சுரண்டத் தொடங்கினார். கணேசமூர்த்தி சுரண்டி முடிந்ததும் ரிக்கெற்றைப் பார்த்த அவன் பத்து ரூபா இருக்கு என்றான். இன்னொரு ரிக்கெற்றை சுரண்டினார். அதில் இருபது ரூபா இருந்தது. கணேசமூர்த்தி இரண்டு ரிக்கற்றுகளைச் சுரண்டினார். ஒன்றில் எதுவும் இல்லை. இன்னொன்றில் ஐம்பது ரூபா இருந்தது. சுவீப் ரிக்கற் விற்பவனுக்கு உற்சாகம் பிறந்து விட்டது. இன்னும் ஐந்து ரிக்கெற்றுகளைச் சுரண்டுமாறு கூறினான். கணேசமூர்த்தி உசாராகிவிட்டார். ஏமாற்றப் போறான் என்ற சந்தேகத்தில் நான்கு அதிர்ஷ்ரலாப ரிக்கற்றுக்களை

எடுத்துக் கொண்டு ஒரு ரிக்கெற்றைச் சுரண்டினார். சுவீப் ரிக்கெற்காரன் "மாத்தையா ரண்டாயிரம் ரூபா கிடக்கு" என்று பெரிதாகச் சத்தம் போட்டான். கணேசமூர்த்தி திரும்பிப் பார்த்தார். ரிக்கெற்காரன் ஏமாந்திப் போடுவானோ என்ற சந்தேகமும் அவருக்கு ஏற்பட்டது. கிடைச்சவரையில் இலாபம். இனியும் தொடர்ந்தால் சிலவேளை இதுவும் இல்லாமல் போய்விடும் என நினைத்த கணேசமூர்த்தி இரண்டாயிரம் ரூபா கிடைத்த ரிக்கெற்றை வேண்டிக் கொண்டு கிழிந்த பத்து ரூபாவைக் கொடுத்தார். "என்ன மாத்தையா இவ்வளவு காசு கிடைச்சிருக்கு கிழிச்சகாசே தாறியள். சந்தோசமாக காசு தர வேண்டாமா?" என்று அவன் கேட்டான். அதை திருப்பி வாங்கிக் கொண்டு நூறு ரூபாவைக் கொடுத்து விட்டு கணேசமூர்த்தி வீட்டை நோக்கிச் சென்றார்.

கணேசமூர்த்தி வீட்டுக்குள் நுழைந்தது கூடத் தெரியாமல் அவரின் மனைவி தொலைக்காட்சியில் லயித்திருந்தாள். "இண்டைக்கு எனக்கு நல்ல முளுவியளமப்பா'' எனக்கூறியபடி சுரண்டல் ரிக்கெற்றில் இரண்டாயிரம் ரூபா விழுந்ததைக் கூறினார். "காலமை கிழிஞ்ச காசு வேண்டைக்கை என்னை முறைச்சுப் பாத்தனி. இப்ப ரண்டாயிரம் ரூபா கொண்டந்திட்டன். இதுக்கு என்ன சொல்லப் போறாய்'' என்று சவால் விட்டவாறு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான சுரண்டல் ரிக்கெற்றையும் கிழிந்த பத்து ரூபாவையும் கணேசமூர்த்தி மனைவியிடம் கொடுத்தார். இதை நீங்களே வைத்திருங்கோ என்று பத்து ரூபாவை அவள் திருப்பிக் கொடுத்தாள்.

**நன்றி : மல்லிகை 2004, ஏப்ரல், சூரியன்.கொம்**

## தாலிபாக்கியம் ●

வள்ளிப்பிள்ளை தன்னைச்சுற்றி இருப்பவர்களை ஒரு முறை பார்த்தாள். அங்கு இருப்பவர்களில் அதிக மானவர்கள் அவளை விட வயதில் குறைந்தவர்கள். தூரத்தில் இருப்பவர்கள் அவளைச் சுட்டிக்காட்டிப் பேசும் போது அவளுக்கு வெட்கமாக இருந்தது.

இந்த வயதில் இது தேவையா? என்று தன்னைத் தானே ஒருமுறை கேட்டாள். பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும் இருக்கையில் இப்படி ஒரு ஏற்பாடு தேவைதானா? இதை நிறுத்த முடியாதா? அவள் தன்னைத்தானே கேட்டாளே தவிர எவருக்கும் அதைப் பற்றிச் சொல்ல முடியாத நிலை.

கணவனே ஒப்புக்கொண்ட பின்னர் அவள் மறுத்து என்ன பயன். இந்தச் சின்னப் பிள்ளையளுக்கு முன்னாலை தனக்கு நடக்கப் போவதை நினைக்க நினைக்க அவளுக்கு வெட்கத்தில் என்ன செய்வ தென்றே தெரியாது தவித்தாள்.

தனக்கு இப்படி ஒரு சம்பவம் நடக்கும் என்று வள்ளிப்பிள்ளை கனவிலும் நினைக்கவில்லை. நடக்கப் போவது நல்லதென்று தான் அனைவரும் கூறுகிறார்கள். ஆனால் அவளுக்கு இதில் துளி கூட விருப்பம் இல்லை.

வள்ளிபிள்ளையின் கணவன் கந்தசாமிக்கு வலு சந்தோசம். அவரது வாழ்நாளில் செய்ய முடியாத சாதனை இன்று நடக்கப் போகிறது என்பதில் அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. கந்தசாமியின் மீது வள்ளிப் பிள்ளைக்கு ஏற்பட்ட கோபம் இன்னும் அடங்கவில்லை.

எத்தனை வயதில் தனக்குத் திருமணம் நடந்ததென்று வள்ளிப் பிள்ளைக்குத் தெரியாது. அவள் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண் டிருக்கும் போது ஒரு நாள் தகப்பன் வந்து இடையில் கூட்டிச் சென்றார். அன்று இரவு கந்தசாமியின் கையால் சோறு குடுப்பித்தார்கள்

அன்றிலிருந்து அவள் கந்தசாமியின் மனைவி.

கந்தசாமி வள்ளிப்பிள்ளையின் முறை மைத்துனன். நல்ல குடிகாரன். கள்ளு, சாராயம், கசிப்பு என எது கிடைத்தாலும் முடாக்கணக்கில் குடிப்பான். காணி, பூமி இருந்ததனால் படிப்பைப் பற்றிக் கந்தசாமி கவலைப்படவில்லை.

வருடம் கூடக்கூட கந்தசாமியின் குடும்ப எண்ணிக்கையும் கூடியது. நான்கு பெண்பிள்ளைகளும் கடைசியாக ஒரு ஆண் குழந்தையும் பிறந்த பின்னர் குடும்ப அங்கத்தவர் தொகையும் நின்று விட்டது.

வள்ளிப்பிள்ளையின் பெண் பிள்ளைகள் அனைவரும் அழகானவர்கள் என்பதனால் கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள உறவினர்களும் நண்பர்களும் சம்பந்திகளாயினர். கடைசியாகப் பிறந்தவனும் மூத்த அக்காவுடன் கனடாவுக்குச் சென்று விட்டான்.

ஒரு குறையும் இல்லாமல் வள்ளிப்பிள்ளை வாழ்ந்து கொண்டிருக் கிறாள். அவளுக்கு ஒரு குறை இருப்பதாக கந்தசாமி கூறியதால் தான் இன்று அந்தக் குறையைத் தீர்ப்பதற்கான ஏற்பாடு நடைபெறு கிறது.

ஆலமரத்துக்குக் கீழே ஒரு தடியாகக் கிடந்த அண்ணமார் இன்று பிள்ளையார் கோயிலாகி உள்மண்டபம், வெளிமண்டபம், வெளிவீதி, தேர் என்று சிறப்பாக இருக்கிறது. ஊரிலுள்ள மண்வீடுகள் எல்லாம் மாளிகையாகி விட்டன. ஊரே சிறப்பாக இருக்கும் போது வள்ளிப்பிள்ளை ஏன் சிறப்பாக இருக்கக் கூடாது எனக் கந்தசாமி கேட்டதனால் இன்று பிள்ளையார் கோயிலில் வள்ளிப்பிள்ளையின் கழுத்தில் தாலி கட்டப் போகிறார் கந்தசாமி.

"என்ன பொம்பிளை முகத்திலை வெக்கம் களைகட்டுது". சுந்தரேசக் குருக்கள் வள்ளிப்பிள்ளையைப் பார்த்து பகிடி பண்ணினார்.

"எங்க மாப்பிளை? அவர் எப்பவும் மாப்பிளைதான். பேரன் பிறந்தா என்ன? பேத்தி பிறந்தா என்ன? பூட்டி பிறந்தா என்ன? கந்தசாமி எண்டைக்கும் மாப்பிளைதான்" சுந்தரேசக்குருக்கள் கூறியதைக் கேட்ட வள்ளிப்பிள்ளை மேலும் வெட்கப்பட்டாள்.

தொப்புளில் புரளும் இரட்டைப்பட்டுச் சங்கிலி, புலிப்பல்லுப் பதித்த பதக்கம், தடித்த கைச்சங்கிலி, விரல்கள் நிறைய மோதிரம், தங்கமுலாம் பூசிய கைக்கடிகாரம் என நகைக்கடைபோல் ஜொலித்தார் கந்தசாமி.

இதற்கு மாறாக வள்ளிப்பிள்ளையின் உடலை ஒரு நூல் சங்கிலியும் ஒரு சோடி காப்புமே அலங்கரித்தன.

ஆலயமணி டாண் டாண் என ஒலி எழும்பிய போது விஷேட பூஜையின் பின் தனது அன்பு மனைவியின் கழுத்தில் கந்தசாமி தாலி கட்டினார். கந்தசாமியின் மனதில் இருந்த பாரம் இறங்கியது. வள்ளிப்பிள்ளையின் கழுத்தில் பாரம் ஏறியது. வாழ்ந்து கெட்ட நேரத்தில் இது தேவையா என வள்ளிப்பிள்ளை கேட்ட போது, தேவைதான் எனப் பிள்ளைகள் கூறியதால் பிள்ளைகள் செய்து கொடுத்த தாலியைச் சுமந்தாள் வள்ளிப்பிள்ளை.

கந்தசாமியின் வீடு அன்று கல்யாணக்களை கட்டியது. உறவினர்கள், நண்பர்கள், சம்பந்தி வீட்டுக்காரர்கள் எல்லோருக்கும் தடல் புடலாக கல்யாண விருந்து நடைபெற்றது. கந்தசாமியும் தன் பங்குக்கு போத்தல் போத்தலாக நண்பர்களுக்கு ஊற்றிக் கொடுத்தார். எப்பவோ நடக்க வேண்டிய நல்ல காரியம் எத்தனையோ வருடங்களின் பின் நடந்தது.

இரவு இரண்டுமணி வரை கந்தசாமியும் வள்ளிப்பிள்ளையும் நித்திரை கொள்ளவில்லை. ஐந்து பிள்ளைகளும் மாறிமாறிக் கதைத்தார்கள். அதிகாலை ஐந்து மணிக்கு எழும்பி தோட்டத்துக்குப் போகும் கந்தசாமி எட்டுமணி வரை எழும்பவில்லை. நித்திரை முழிப்பும் அளவுக்கு மிஞ்சின குடியும் அவரை எழும்பவிடவில்லை.

"என்னப்பா இன்னும் எளும்ப மனமில்லையே"

"எளும்புறன் எளும்புறன்" எனக் கூறிக் கொண்டு கண்விழித்த கந்தசாமிக்கு வள்ளிப்பிள்ளையின் புதுப்பொலிவு ஆச்சரியத்தைக் கொடுத்தது. மடிப்புக்கலையாத புதுத்தாலியுடன் வள்ளிப்பிள்ளை வேலை செய்வதைப் பார்த்த கந்தசாமியின் மனம் ஒருகணம் துணுக்குற்றது.

குளித்துச் சாப்பிட்டு விட்டு வழமைபோல் சைக்கிளுடன் வெளியேறினார் கந்தசாமி.

"என்னப்பா எங்கை போறியள்? நேத்து கனக்க குடிச்சனீங்கள் தானே. இண்டைக்கெண்டாலும் குடியாதேங்கோ"

"இல்லை இல்லை குடிக்கப்போகேல்லை. பொடியனுக்கு ஒரு சம்பந்தம் பாக்கச் சொல்லி புறோக்கருக்குச் சொன்னனான். அந்தாள் இண்டைக்கு வரச் சொன்னது. நான் மறந்து போனன்." எனக் கூறிக்கொண்டு சைக்கிளை உதைத்து ஏறினார் கந்தசாமி.

வீட்டு வாசலில் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டது. "ஆர் ஓவசியரே? அவர் சந்திப்பக்கம் போட்டார்" உள்ளே இருந்து குரல் கொடுத்தார் வள்ளிப்பிள்ளை.

"சந்திக்கோ? அங்கை ஏதோ பிரச்சினயாம். அதுதான் அந்தப்பக்கம் போக வேண்டாம் எண்டு சொல்லத்தான் வந்தனான்"

"பிரச்சினையோ? என்ன பிரச்சினை ஓவசியர்?"

"ஏதோ ஹர்த்தாலாம். கடையைப் பூட்ட வேண்டாம் எண்டு ஆமி சொல்லுதாம். கடை எல்லாம் பூட்டித்தான் கிடக்காம்"

ஓவசியர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சந்திப்பக்கம் துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது.

"என்ன ஓவசியர் வெடிச்சத்தம் கேக்குது?" வள்ளிப்பிள்ளை கலக்கத் துடன் கேட்டாள்.

"நீ உள்ளை போ பிள்ளை நான் பாத்து வாறன்." எனக் கூறிய படி ஓவசியர் வேகமாகச் சந்திப்பக்கம் சைக்கிளைச் செலுத்தினார்.

ஓவசியர் சந்தியை நோக்கிச் செல்ல சந்தியிலிருந்து சனம் அடிச்சுப் பிடிச்சுக் கொண்டு ஓடி வந்தது.

"ஓவசிரியர் அங்கை போகாதேங்கோ. ஆமிக்காரன் சுடுறான். நாலுபேர் செத்துப் போச்சினம். கந்தசாமிக்கும் சூடு பட்டுப் போச்சு. திரும்புங்கோ." என்றான் எதிரே வந்த பசுபதி.

"எடே கந்தசாமிக்கு என்ன நடந்தது."

ஓவசியரின் கேள்விக்குப்பதில் கூறாமல் சைக்கிளை வேகமாக மிதித்தான் பசுபதி. ●

**மித்திரன் 05/11/2006**

## திக்குத்தெரியாத....

கொழும்பிலிருந்து புறப்பட்ட இரவு நேரப் புகையிரதம் நான்கு மணித்தியாலம் தாமதமாக கண்டி புகையிரத நிலையத்தைச் சென்றடைந்தது. கண்டி புகையிரத நிலையம் அன்று வழமைக்கு மாறாக இருந்தது. பயணிகளை விட அதிகளவு இராணுவத்தின ரும் பொலிஸாரும் குவிந்திருந்தனர்.

நீண்ட தூரப் பயணம் செய்த புகைவண்டி பெருமூச்சு டன் கண்டி புகையிரத நிலையத்தில் நின்றதும் பயணிகள் முண்டியடித்துக் கொண்டு இறங்கினர்.

புகைவண்டியின் வாசலின் நின்றபடி இருபக்கங்களும் நிதானமாகப் பார்த்தான் அவன். வழக்கத்துக்கு மாறான இறுக்கமும் பாதுகாப்பும் அவன் மனதை உறுத்தியது. பின்னால் நின்ற அவசரப்பயணி அவன் முதுகைச் சுரண்டி னான். முதுகில் சுரண்டியவனைப் பார்த்து விட்டு புகை வண்டியை விட்டு இறங்கினான். அவனை விலத்திக் கொண்டு அவசரமாக இறங்கியவர்கள் வெளியேறும் இடத்தை நோக்கிச் சென்றனர்.

புகையிரத்துக்காகக் காத்து நின்றவர்களின் அடையாள அட்டை களை சில பொலிஸார் பார்த்தபடி கேள்விகளைக் கேட்டனர். சில பொலிஸாரும் இராணுவத்தினரும் பொதிகளைச் சோதித்தனர். மெதுவாக நடந்தபடி தொலைபேசியின் மூலம் யாருடனோ கதைத்தான் அவன். நடந்தபடியே மீண்டும் யாருடனோ கதைத்தபடி தலையை இருபக்கமும் ஆட்டியபடி வெளியேறும் இடத்தை நோக்கிச் சென்றான். அவனது நடத்தைகள் அனைத்தையும் இரண்டு கண்கள் அவதானித்துக் கொண்டிருந்தன.

புகையிர நிலையத்தை விட்டு வெறியேறும் இடத்தில் நீண்ட வரிசையில் பலர் நின்றனர். அவனும் அந்த வரிசையுடன் சேர்ந்தான். அவனுக்குப் பின்னால் இன்னும் சிலர் சேர்ந்து அந்த வரிசையை நீளமாக்கினர். அவனது நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்த

கண்களுக்குரியவன் அவனருகே சென்று அடையாள அட்டையைக் கேட்டான். எனக்கு முன்னால் பலர் நிற்கிறார்கள். இவன் ஏன் இடையில் வந்து என்னிடம் அடையாள அட்டையைக் கேட்கிறான் என அவன் நினைத்தான். அவனிடம் அடையாள அட்டையைக் கேட்டவர் புலனாய்வு அதிகாரி என்பது அவனுக்குத் தெரியாது. மிரட்டியபடி அடையாள அட்டையைக் காட்டும் படி அதிகாரி கேட்டார். அவன் தனது அடையாள அட்டையைக் கொடுத்தான். அடையாள அட்டையில் உள்ள படம் அவனது முகத்தை ஒத்திருக்கிறதா என்று பார்க்காது மறுபக்கத்தைப் பார்த்தார் அந்த அதிகாரி. அங்கே தமிழ் எழுத்து இருந்தது. வரிசையை விட்டு வெளியே வரும்படி கூறினார் அந்த அதிகாரி.

வரிசையில் நின்றவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. புகையிரத மேடையில் நின்றவர்கள் அவனை வினோதமாகப் பார்த்தனர். அவனது தோளிலிருந்த பாக்கை வாங்கி ஒவ்வொரு சிப்பாகத் திறந்து பார்த்தார் அந்த அதிகாரி. மாற்று உடுப்புகளும் ஆங்கில நாவலும் அந்த பாக்கினுள் இருந்தன. அவனுடைய கையடக்கத் தொலைபேசியை வாங்கிய அந்த புலனாய்வு அதிகாரி அதிலிருந்த இலக்கங்களைப் பார்த்தார். திருப்தி யாகத் தலையை ஆட்டியபடி தன்னுடன் வருமாறு கூறிவிட்டு முன்னே சென்றார்.

என்ன செய்வதெனத் தெரியாது அவன் திகைத்து நிற்கையில் முதுகில் யாரோ சுரண்டினார்கள். திரும்பிப் பார்த்தான். இரண்டு பொலிஸ் காரர்கள் நடக்கும்படி சைகை காட்டினார்கள். எதுவும் பேசாமல் அந்த புலனாய்வு அதிகாரியை பின்தொடர்ந்தான் அவன். அவனுக்குப் பாதுகாப் பாக இரண்டு பொலிஸ்காரர்கள் பின் தொடர்ந்தனர்.

புகையிரத நிலையத்துக்கு வெளியே நின்ற பஸ்சில் அவனை ஏற்றினார்கள். அவன் உள்ளே நோட்டம் விட்டான். பதினைந்து பேர் இருந்தார்கள். அவர்களில் மூவர் பெண்கள். அவனுக்காகவே காத்துக் கொண்டு நின்றது போன்று அவன் ஏறியதும் பஸ் புறப்பட்டது. புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்ட பஸ் பொலிஸ் நிலையத்தினுள்ளே சென்று நின்றது. எல்லோரையும் இறங்கச் சொன்னார்கள். அவனும் இறங்கினான். அவனுடைய கால் கூசியது. முதன் முதலாக பொலிஸ் நிலையத்தினுள் கால் பதித்தான். ரயில் நிலையத்தில் அவர்களைக் கைது செய்த அதிகாரியின் பின்னால் வரிசையாகச் சென்றார்கள்.

அந்த அதிகாரி அவனைத்தான் முதலில் தனது அறைக்கு அழைத்தார். பெயர், விலாசம் போன்ற விபரங்களை எழுதிவிட்டு மணிக்கூடு, மோதிரம்,

சப்பாத்து, பெல்ட் எல்லாவற்றையும் அருகே நின்ற பொலிஸிடம் கொடுக்கச் சொன்னார். ஐந்து வருடங்களாக விரலிலிருந்து கழற்றாத அந்த மோதிரத்தைக் கவலையுடன் கழற்றிக் கொடுத்தான். அவனுக்கு மிகமிகத் தேவையான ஒரு ஜீவன் பிறந்தநாள் பரிசாகக் கொடுத்த மோதிரம் அது.

அவனை ஒரு கூண்டுக்குள் விட்டுப் பூட்டினார்கள். ஆறு பேர் இருக்கக்கூடிய அக்கூண்டினுள் பத்தாவது ஆளாக அவன் தள்ளப்பட்டான். குப்பென்று ஒரு துர்நாற்றம் அவன் மூக்கினுள் நுழைந்தது. அப்படி ஒரு மோசமான நாற்றத்தை அவன் வாழ்நாளில் அனுபவித்ததில்லை. புதிய விருந்தாளியை எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள். ஒருவன் நீட்டி நிமிர்ந்து நல்ல நித்திரை. இன்னொருவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் இருந்தவன் பீடியை ரசித்துச் சுவைத்து புகையை வெளியே விட்டான். அவனுக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. கண்களில் நீர் நிறைந்து அவனையுமறியாமல் கன்னத்தில் வடிந்தது. கம்பிகளின் வழியாக வெளியே பார்த்தான். அப்போது அவனது முதுகில் யாரோ தட்டினார்கள். பீடி குடித்தவன் ஒரு அசட்டுச் சிரிப்புடன் எங்கே பிடித்தார்கள் என சிங்களத்தில் கேட்டான். வெறுப்படைந்த அவன் பேசா மலிருந்தான். தமிழா எனக் கேட்டான். ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையை மேலும் கீழும் ஆட்டினான்.

“எங்கே பிடிச்சாங்க”

“ரயில்வே ஸ்டேசன்லை”

“என்ன செய்தாய்”

“ஒண்டும் செய்யலை”

“அப்ப ஏன் பிடிச்சாங்க?”

“தெரியாது”

“பொக்கற்றிலை காசு இருக்கா?

அவன் பொக்கற்றினுள் கையை விட்டு நூறு ரூபாத்தாளை எடுத்தான். அவசரமாகக் காசைப் பறித்த பீடிக்காரன் தனது பொக்கற்றினுள் திணித்தான்.

“யோசிக்க வேணாம். விசாரிச்சுட்டு விட்டுடுவாணுங்க. கஞ்சா கேசில ஆறு மாசம் உள்ள இருந்தனான். வெளிய வந்து ஒரு கிழமை தான் புடிச்சுட்டானுங்க. இனி ஆறு மாசமோ ஒரு வருசமோ தெரியாது. அந்திக்கு

உன்னை விட்டுடுவானுங்க'' நூறு ரூபா அவனை சினேகிதனாக்கியது.

"பிரபு யாரு?'' கூண்டுக்கு வெளியே நின்ற பொலிஸ் சிங்களத்தில் கேட்டான்.

"நான் தான் பிரபு'' என அவன் சிங்களத்தில் கூறினான். கதவைத் திறந்து அவனை அழைத்துச் சென்றான். ரயில் நிலையத்தில் அவனைக் கைது செய்த அதிகாரி கதிரையில் அவனை இருக்கச் சொன்னார். இன்னும் சில அதிகாரிகளும் அந்த அறையினுள் இருந்தார்கள்.

"என்ன பெயர்'' அதிகாரி தமிழில் கேட்டார்.

"பிரபு'' என்றான்.

"பிரபுவா? பிரபாவா?''

அவர் கேட்டதும் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை பிரபுவுக்குச் சில்லிட்டது.

"என்ன பதிலைக் காணம்?''

"பிரபா இல்லை. பிரபு'' என அவன் சிங்களத்தில் கூறினான்.

"இங்க இருக்கிற எல்லாருக்கும் தமிழ் நல்லாத் தெரியும். நீ சிங்களத்தில கதைச்சு கஸ்ரப்பட வேண்டாம்'' என அந்த அதிகாரி கூறினார்.

"சொந்த இடம் எது?''

"கண்டி''

"கொழும்பில என்ன செய்யிறாய்?''

"படிக்கிறன்''

"என்ன படிக்கிறாய்?''

"ஏ. எல்''

"இப்ப ஸ்கூல் லீவா?''

"இல்லை''

"அப்ப ஏன் இங்கை வந்தாய்?''

அந்தக்கேள்விக்குப் பிரபுவால் பதில்கூற முடியவில்லை.

“யாழ்ப்பாணத்திலை யாரைத் தெரியும்?”

“யாரையும் தெரியாது”

“உன்ரை போனிலை யாழ்ப்பாண நம்பர்கள் கனக்க கிடக்கு”

“பிரண்ட்ஸ்”

“யாரையும் தெரியாதெண்டா எப்பிடி பிரண்ட்ஸ்?”

“கொம்பியூட்டர் கிளாஸ்ல படிக்குற பிரண்ட்ஸ்”

அன்று வெளியான தமிழ்ப் பத்திரிகை ஒன்றைப் பிரபுவிடம் கொடுத்து “இதைப் படிடா” என்றார் அந்த அதிகாரி. அப்போது தான் அவர்கள் தன்னை ஏன் கைது செய்தார்கள் என்ற உண்மை அவனுக்குத் தெரிய வந்தது. கொழும்பிலே குண்டு வெடித்த இரவுதான் அவன் ரயில் ஏறியது அவனுக்கு ஞாபகம் வந்தது.

கொழும்பில் குண்டு வெடிப்பு ஐந்து பேர் பலி. பதினைந்து பேர் படுகாயம் என்ற பெரிய எழுத்துக்களுடன் கொழும்பில் நடந்த குண்டு வெடிப்புப்பற்றிய படங்களும் செய்தியும் அந்தத்தமிழ்ப் பத்திரிகையின் முன்பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது.

“படியடா” என்று அந்த அதிகாரி கோபத்துடன் கூறினார். தலையை இடமும் வலமுமாக அசைத்து முடியாது என்றான் அவன்.

“படிக்கச் சொல்லுறன். ஏலாதுனு தலையை ஆட்டிறாய்” எனக் கோபத்துடன் கூறிய அதிகாரி பிரபுவின் முகத்தில் ஓங்கி அடித்தார். சுருண்டு விழுந்த பிரபுவின் மூக்கால் இரத்தம் வடிந்தது.

மிகவும் ஆத்திரத்துடன் பிரபுவின் சேட்டைப் பிடித்து உலுக்கிய அந்த அதிகாரி தமிழ்ப் பேப்பரை அவன் முகத்துக்கு முன்னால் பிடித்து “படிக்கப்போறியா இல்லையா?” என்று கேட்டார்.

இரத்தத்தையும் கண்ணீரையும் துடைத்தபடி வார்த்தையை வெளியிடத் தயங்கிய பிரபு தன்னால் படிக்க முடியாதென இடமும் வலமுமாகத் தலையை அசைத்தான். அந்த அதிகாரி பிரபுவின் முகத்தில் ஓங்கிக் குத்தினார். அவன் வாயிலிருந்து இரத்தம் வடிந்தது.

“நான் படிக்கிறது சிங்கள மீடியம்” என்று தட்டுத்தடுமாறியபடி சிங்களத்தில் சொன்னான் பிரபு. அவனை அடிக்கக் கையை ஓங்கிய அதிகாரி திகைத்துப்போய் நின்றார். ●

**ஞானம், வைகாசி 2007**

## முடிவிலும் ஒன்று தொடரலாம் ●

அவன் கையில் அழகான குழந்தையின் படம் இருந்தது. அதனை எங்கே தொங்க விடுவது என்று அவனும் அவளும் சிறிது நேரம் சர்ச்சைக்குட்பட்டார்கள். இருவரும் இணைந்து அந்தப் படத்தைத் தொங்க விடும் இடத்தைத் தீர்மானித்தார்கள்.

அவன் ஒரு மேசையில் ஏறி நின்று ஆணியை அடித்தான். அவள் மேசையைக் கவனமாகப் பிடித்தாள். அவன் அடித்த ஆணிகளில் ஒன்று கூட சுவரில் ஏறவில்லை. முனை மழுங்கி, உடைந்து நெளிந்து போன ஆணிகள் பல மேசைக்குக் கீழே கிடந்தன. அப்போது அங்கே வந்த ஒரு பெண் ஒரு ஆணியைக் கொடுத்தாள். இரண்டு முறை அடித்ததும் சுவரில் சிக்கென இறுகியது ஆணி. அவன் அதிசயமாக அவளைப் பார்த்தான்.

அவள் சிரித்துக் கொண்டு இரண்டு விரல்களை வி வடிவில் உயர்த்திக் காட்டினாள். அவளின் விரல்களுக் கிடையில் டயமண்ட் என்ற ஆங்கில எழுத்து மின்னியது.

தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை ஆகியவற் றில் வெளியான டயமண்ட் ஆணி பற்றிய விளம்பரங்கள் அனைத்தும் அமைதியாகி விட்டன. மூன்று வருடங் களில் கிடுகிடுவென முன்னேறிய டயமண்ட் ஆணி முதலிடத்தைப் பிடித்தது. தரத்தில் சிறந்த ஆணி என்ற உள்நாட்டு விருதுகளும் சர்வதேச விருதுகளும் டயமண்ட் ஆணிக்கு கிடைத்தன.

வெளி உலகில் டயமண்ட் ஆணிக்கு மதிப்பு இருந்தாலும் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் மத்தியில் இருந்த மனக் கசப்பு வெளி உலகத்துக்குத் தெரியவில்லை. ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாபநிதி என்பனவற்றினைக் கழித்துக் கொண்டுதான் சம்பளம் கொடுத்தார்கள். ஆனால், மூன்று வருடங்களாக அவை கட்டப்படவில்லை. தொழிலாளர்கள் அங்கு வேலை செய்வதற்கான அத்தாட்சி எவையும்

இல்லை. மூன்று வருடங்களாக யாரும் நிரந்தரமாக்கப்படவில்லை. இதற்கு முடிவு காண வேண்டும் என்று நினைத்த தொழிலாளர்கள் ஒருநாள் திடீரென வேலை நிறுத்தம் செய்தனர்.

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஊடகங்களும், அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்கின. நிர்வாகம் இவற்றைக் கண்டு கொள்ளாது நிறுவனத்தை இழுத்து மூடியது. பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்று அடித்துக் கூறிவிட்டது.

டயமண்ட் ஆணித்தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டதனால் கந்தையா வின் குடும்பமும் தத்தளித்தது. நானூறு தொழிலாளர்கள் ஒரே நாளில் நடுத்தெருவில் விடப்பட்டனர். கந்தையாவின் மூத்த மகன் குமரன் உயர்வகுப்பு படிக்கிறான். வரவு செலவு தெரியாது செலவு செய்யும் இரண்டாவது பையன் வரதன் எட்டாம் வகுப்பு படிக்கிறான். செல்லமும் சிணுங்கலுமாக தாயின் சேலையைப் பிடித்தபடி இருக்கும் கடைக்குட்டி மாலதி ஐந்தாம் வகுப்பு படிக்கிறாள்.

மூன்று மாதமாக கடன்பட்டு குடும்பத்தைப் பார்த்த கந்தையா அடுத்து என்ன செய்வது என்று தெரியாது தவித்தார்.

“அப்பா ஆதித்தன் அங்கிள் வாறார்” இளையவள் மாலதி கட்டியம் கூறினாள்.

வேலை இல்லாமல் இருக்கும் மூன்று மாதமும் கந்தையாவுக்கு ஆறுதல் சொல்பவன் ஆதித்தன். முற்றத்தில் நிற்கும் மாமரத்தில் சைக்கிளைச் சாத்திவிட்டு வீட்டுக்குள் நுழைந்த ஆதித்தன் கந்தையாவின் முன்னால் உள்ள கதிரையில் அமர்ந்தான்.

“மீனாச்சி தம்பிக்கு தேத்தண்ணி கொண்டுவா” என குசினிப்பக்கம் பார்த்து சத்தமாகக் கூறிவிட்டு “தம்பி நிலைமை என்ன மாதிரிக் கிடக்கு” என்று ஆதித்தனிடம் கேட்டார்.

“சரிவாற மாதிரித் தெரியவில்லை. நிர்வாகம் இப்போதைக்கு விட்டுக் கொடுக்க மாட்டாது. வேலைக்கு வந்தால் தான் பேச்சுவார்த்தை நடத்துமாம் இல்லை என்றால் புதுசா ஆக்களை எடுத்து கம்பனியை நடத்துமாம்” என்றான் ஆதித்தன்.

ஆதித்தனும் கந்தையாவும் கதைத்துக்கொண்டிருக்கும் போது தேநீருடன் வந்த மீனாட்சி தேநீரை ஆதித்தனிடம் கொடுத்துவிட்டு “என்ன முடிவு வரும் தம்பி” என ஆவலுடன் கேட்டாள். “வாற பதினைந்தாம் திகதிக்கு முதல் எல்லோரையும் வேலைக்கு வரட்டாம். இல்லையென்றால்

வேலைநிறுத்தம் செய்கிறவர்கள் தாங்களாகவே வேலையிலிருந்து நின்றதாக கருதி புதிய ஆட்களை எடுப்பினமாம்" என்றான் ஆதித்தன்.

"தம்பி நானூறு பேர் ஆணி பக்ரறியில் வேலை செய்தனாங்கள். அதில நாங்கள் ஐம்பது பேர் இனி அங்கு வேலை செய்ய மாட்டம். மிச்சப் பேர் கட்டாயம் போவினம்" என்றார் கந்தையா.

"உங்கட கோரிக்கைகள் நியாயமானது தான் ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தி முடிவெடுக்கலாம் தானே" தனது சந்தேகத்தைக் கேட்டான் ஆதவன்.

"எங்கட முதலாளியைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும் தம்பி. அவயின்ர கௌரவம் முக்கியமானது. தொழிலாளர் நலன் இரண்டாம் பட்சம்தான். காமன்ஸ், பெயின்ற் எண்டு இன்னும் ஏழு பக்ரறி அவைக்கு கிடக்கு. இந்த பக்ரறி மூடினதால அவைக்கு இழப்பு இல்லை. விரல் போனவைக்கும் கைபோனவைக்கும் நட்ட ஈடு கொடுக்கல. அவங்கள வேலையால நிப்பாட்டிப் போட்டினம். உயிர் போனாக் கூட ஒண்டும் தர மாட்டினம்" என்றார் கந்தையா.

கந்தையா கூறிய அனைத்தும் ஆதித்தனுக்கும் தெரிந்த விடயம்தான். மன ஆறுதலுக்காக கந்தையா கூறியதைக் கேட்டான் ஆதித்தன்.

"மீனாச்சி தான் யோசிக்கிறாள். இதைவிட நல்ல வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு தம்பி. இந்த முறை வெள்ளாமை என்ன மாதிரி?" எனக்கேட்டார் கந்தையா.

"வயல் நல்லா இருக்கு. எட்டுக்கு பத்து தேறும் எண்டு நினைக்கிறேன்" எனக்கூறிய ஆதித்தன் சைக்கிளையும் உருட்டிக் கொண்டு கந்தையாவின் வீட்டை விட்டு வெளியேறினான்.

டயமண்ட் ஆணித் தொழிற்சாலைக்கு புதிதாக தொழிலாளர்களை சேர்ப்பதற்கான விளம்பரம் பத்திரிகைகளில் பிரசுரமாகியது. நான்கு மாதங்களின் பின்னர் நல்லதொரு நாளில் டயமண்ட் ஆணித் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கப்போவதாகவும் பத்திரிகைகளில் விளம்பரம் வெளிவந்தது.

தனது ஊரைச் சேர்ந்த மூன்று பேர் டயமண் ஆணித்தொழிற் சாலையில் வேலைக்குச் சேர்ந்துள்ளதாக கந்தையா அறிந்தார். அவர்களில் ஆதித்தனும் ஒருவர் என்பதை அறிந்த கந்தையா ஆச்சரியப்பட்டார்.

ஆதித்தனைப்பற்றி கந்தையா வைத்திருந்த எண்ணம் எல்லாம் தவிடு பொடியானது. ஆதித்தன் இப்படிப்பட்ட ஒரு வேலையைச் செய்வான்

என கந்தையா கனவிலும் நினைக்கவில்லை. டயமண்ட் ஆணித்தொழிற் சாலை மீண்டும் இயங்கத் தொடங்கி ஒரு மாதமாகிவிட்டது. கந்தையா வுக்கு இன்னமும் வேலை கிடைக்க வில்லை.

“அப்பா ஆதித்தன் மாமா இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னவர்” என்று ஒரு கடிதத்தை தகப்பனிடம் கொடுத்தான் வரதன்.

வேண்டா வெறுப்பாக கடிதத்தை வாங்கி படித்தார் கந்தையா.

அன்பின் கந்தையா அண்ணா அறிவது.

எனது முதல் மாத சம்பளம் அனுப்பியுள்ளேன். உங்களுக்கு ஒரு வேலை கிடைக்கும் வரை இந்த என்வலப் உங்களைத் தேடிவரும்.

அன்புடன்,

ஆதித்தன்

“ஏ வரதா, ஆதித்தன் எங்கேடா? ஓடடா ஓடு ஓடிப்போய் அவனைக் கூட்டிவா” என சத்தமாகச் கூறினார் கந்தையா. ●

மித்திரன் வாரமலர் 20.07.2008

## குலதெய்வம் ●

சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான். பசியுடன் அலைந்த முதிய மீனுக்கு இரை கிடைக்கவில்லை. திடீரென நீரினுள் எழுந்த வித்தியாச அலையினால் எச்சரிக்கை யான அந்த முதிய மீன் தனது இனத்தவரின் வருகை என்பதை புரிந்து கொண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டது. மிகச் சிறிய மீன்கள் முன்னே துள்ளிக் குதித்து வர, அதன் பின்னே பெரியதும் சிறியதுமான மீன்கள் அணி வகுத்து வந்தன. அதிக கூட்டமாக வரும் மீன் களைக் கண்ட முதிய மீன் ஆச்சரியத்துடன் பார்த்தது.

முதிய மீனை ஒரு பொருட்டாகக் கணக்கில் எடுக் காது மீன் கூட்டம் விலத்திக் கொண்டு விரைந்தது.

"ஏனப்பா என்ன ஏதாவது பிரச்னையா? சுனாமி வரப் போகுதா? எதற்காக இப்படிக் கூட்டமாக ஓடி வருகிறீர் கள்?" என்று முதிய மீன் கேட்டது.

"நாங்கள் பாதுகாப்பாக வாழப் போகின்றோம்" எனக் கூறிய சிறிய மீன், பெரிய மீன்களை முந்திக் கொண்டு சென்றது.

பாதுகாப்பான உயிர் வாழ்வா?

எம்மையே பிடித்து விழுங்கத் துடிக்கும் பெரிய மீன்கள், வலிமையான வலைகள்... இவற்றிடமிருந்து எப்படி நாம் உயிர் பிழைத்து பாதுகாப்பாக வாழ்வது எனச் சிந்தித்தபடி இரை தேடியது முதிய மீன்.

மீண்டும் ஒரு முறை நீரின் சலசலப்பு வித்தியாசமானதால் எச்சரிக்கை யடைந்த முதிய மீன் உற்றுப் பார்த்தது. தன் இனத்தவரின் வரவினால் ஏற்பட்ட நீரின் மாற்றம் என்பதை உணர்ந்து நிம்மதியானது. முன்னர் வந்ததை விட அதிக எண்ணிக்கையிலான மீன்கள், முதிய மீனைக் கடந்து சென்றன.

“எல்லோரும் எங்கே போகிறீர்கள்?” என்று முதிய மீன் கேட்டது.

“நாங்கள் பாதுகாப்பாக வாழப் போகின்றோம்” என்று கூறிய படி மீன்கள் வேகமாகச் சென்றன.

“நீ எதற்காக தனியே நிற்கிறாய்..? எங்களுடன் வந்தால் பாதுகாப்பாக உயிர் வாழலாம்” என்று முதிய மீனிடம் அதன் வயதை ஒத்த மீனொன்று அழைப்பு விடுத்தது.

“எங்கே ஐயா நாம் பாதுகாப்பாக வாழ்வது?” என்று முதிய மீன் கேட்டது.

“உனக்கு சங்கதி தெரியாதா? குமரிக் கண்டத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ள நாட்டில் மீனை பாதுகாக்க சட்டம் போட்டிருக்கிறார்கள். அவர்களின் குலதெய்வம் மீனாம். ஆகையால், பாதுகாப்பு வலையம் அமைத்து மீனைப் பாதுகாக்கிறார்களாம்” என்றது புகலிடம் தேடிச் செல்லும் மீன்.

“அப்படியா... உண்மையாகவா?” என்று ஆச்சரியத்துடன் கேட்டது முதிய மீன்.

“பக்கத்து நாட்டுக்காரன் மீன் பிடித்தாலும், அந்த நாட்டுக்காரன் அடிக்கிறானாம்” என்று கூறியபடி பாதுகாப்பு வலையம் நோக்கி சென்றது அந்த மீன்.

யுத் ஃபுல் விகடன்

ஜனவரி 2010

## தண்ணீர் தண்ணீர் ●

**பட..**பட...பட....படபடபட..பட....பட கதவு தட்டும் சத்தத்தினால் திடுக்கிட்டு விழித்தார் சண்முகம்பிள்ளை. மங்கிய வெளிச்சத்தில் நேரத்தைப் பார்த்தார். 12.45 மணி. ஆமி செக்பண்ண வந்திருக் கிறாங்கள் என நினைத்தபடி படுக்கையை விட்டு பதட்டத்துடன் எழுந்தார்.

அலுவலக விசயமாக கொழும்புக்குப் போக வேண்டும். பிரச்சினை இல்லாத லொட்ஜ் எது என்று சண்முகம்பிள்ளை கேட்ட போது ஆட்டுப்பட்டித்தெருவில் உள்ள இந்த லொட்ஜ் விலாசத்தைக் கொடுத்தார் சுந்தரம்.

“நான் கொழும்புக்குப் போனால் இந்த லொட்ஜிலை தான் நிக்கிறனான். ஒரு பிரச்சினையுமிராது. செக் பண் ணேக்கை பிடிபட்டாலும் அலுவல் பாத்து எடுத்துப் போடுவாங்கள்” என்ற சுந்தரத்தின் வாக்குறுதியை நம்பி வந்த சண்முகப்பிள்ளையின் மனது படபடத்தது.

பட...பட...பட..தட...தட...தட.... கதவில் தட்டும் சத்தம் அதிகரித்தது. அடையாள அட்டை, பொலிஸ் ரிப்போட், யாழ்ப்பாண அடையாள அட்டை, அலுவலகக் கடிதம் எல்லாவற்றையும் கையில் எடுத்தார். சண்முகம் பிள்ளையின் நாவறண்டது. சரஸ்வதி விலாஸில் சாப்பிட்ட மசாலாத் தோசை தாகத்தை அதிகமாக்கியது. வெளியே சந்தடி அதிகமாகியது. யாரையோ பிடித்துவிட்டார்கள் என நினைத்தபடி பைப்பைத் திருகி இரண்டு கிளாஸ் தண்ணீரை மள மளவெனக் குடித்த பின் கதவைத் திறந்தார்.

“ஐயா தண்ணி குடிச்ச அம்பது பேர் வாந்தி எடுத்ததாலை. ஆஸ்பத்திரியிலை சேத்திருக்கினமாம். பைப்பிலை தண்ணி குடியாதையுங்கோ. இந்தாங்கோ தண்ணிப்போத்தல்” எனக் கூறியபடி தண்ணீர்ப் போத்தலை ஒருவர் நீட்டினார். ●

15.04.10

## திரைகடல் ஓடியும் ●

பகல் வேலை முடிந்தவர்கள் சிறுவர்களைப் போல் துள்ளி ஓடி பஸ்ஸினுள் ஏறினார்கள். இரவு வேலைக்காக பஸ்ஸில் வந்தவர்கள் இறங்க மனமில்லாது இறங்கினார்கள்.

"என்ன இன்பம் இறங்க மனமில்லையோ?"

"இந்தச் சவப்பெட்டி எப்பபோகப் போகுதோ? அடியைப் பாத்தாலே வயித்தைக் கலக்குது." தான் வேலை செய்யப்போகும் அந்தப் பிரமாண்டமான உருவத்தைப் பார்த்து வெறுப்புடன் கூறினான் இன்பம்.

"உப்பிடி எத்தினையை அனுப்பிப் போட்டம். இன்னும் எத்தினை வருமோ தெரியாது. கடிதம் வந்ததே?" சிவா.

"ஓம் மகன் நாப்பது கடிதம் வந்தது. என்ரை பேருக்கு ஒண்டு கூட வரவில்லை."

"யாழ்ப்பாணக் கடிதம் தான் சுணக்கம் எண்டால் மட்டக்களப்புக் கடிதமும் வரேல்லையே?"

"மட்டக்களப்பு கிடக்கட்டும் மகன். கொழும்புக் கடிதம் கூட எனக்கு வரவில்லை."

"நைற் வேலைக்காரர் எல்லாரும் பஸ்ஸாலை இறங்குங்கோ" இரவு வேலைக்குப் பொறுப்பான ஜோன்சன் பஸ்ஸுக்குள் ஏறிக் கூறினான்.

"மகேந்திரண்ணை காலமை வெள்ளன வந்திடுங்கோ" இரவு வேலைக்குப் போகிறவர்கள் பஸ் சாரதி மகேந்திரனிடம் கூறினார்கள்.

பஸ் பிரதான வாசலைக் கடக்கும் வரை பார்த்துக் கொண்டிருந்த இன்பம். தான் சவப்பெட்டி என வர்ணித்த அந்தப் பிரமாண்டமான கப்பலைப் பார்த்தான். சவுதி அரேபியாவின் கிழக்கு நகரமான யுபேல் துறைமுகக் கடல் அமைதியாக இருந்தது. சீனாவில் இருந்து யூரியா ஏற்றுவதற்காக

வந்த அந்தக் கப்பலை நோக்கிச் சென்றார்கள் பஸ்ஸில் வந்தவர்கள். அவர்கள் அனைவரும் இலங்கையில் இருந்து மூன்று வருட ஒப்பந்தத்தில் வேலைக்கு வந்தவர்கள். ஒருவருடம் கழிந்து விட்டது.

யூரியா ஏற்றும் வேலை மிகவும் சிரமமானது. பெல்ட்டின் மூலம் யூரியா பைகள் வேகமாக வந்து கொண்டிருக்கும் அந்த வேகத்துக்கு ஈடுகொடுத்து அவற்றை துரிதமாக அடுக்க வேண்டும். ஒரு மணித்தி யாலத்துக்கு இரண்டு பேர் வேலை செய்வார்கள். ஏனையோர் ஓய்வெடுப்பார் கள். ஒரு குழுவில் பத்துப் பேர் இருப்பார்கள் ஒரே நேரத்தில் நான்கு குழுக்கள் கப்பலில் வேலை செய்யும்.

ஒவ்வொரு மாதமும் யூரியா ஏற்றுவதற்காக நான்கு அல்லது ஐந்து கப்பல்கள் அந்தத் துறைமுகத்துக்கு வரும். ஒவ்வொரு கப்பலும் ஐந்து நாட்கள் தரித்து நிற்கும். ஐந்து நாட்களும் ஓய்வு இல்லாது வேலை. ஏனைய நாட்களில் எண்ணெய் ஏற்றுவதற்காக வரும் கப்பல்களைக் கட்டுவதும் அவற்றை அவிழ்த்து விடுவதும் தான் அவர்களின் வேலை.

இரவு எட்டுமணியாகி விட்டது. வேலை செய்பவர்களைத் தவிர ஏனை யோர் ஓய்வெடுத்தனர். ஸ்ரீயும், சிவபாலனும் அணியத்தில் நின்று தூண்டில் போட்டனர். அவர்கள் மீன்பிடிப்பதை வேடிக்கை பார்த்தான் நாதன். இவர்களுக்கு சற்று தூரத்திலே கடலைப் பார்த்துக் கொண்டிருந் தான் ராஜலிங்கம். எப்பவும் கலகலப்பாக இருக்கும் ராஜலிங்கம் அமைதியாக இருப்பதை அவதானித்த நாதன் அவரை நோக்கிச் சென்றான்.

“என்ன லிங்கம் அமைதியாக இருக்கிறாய்?” எனக் கேட்டபடி ராஜலிங்கத்தின் முதுகில் தட்டினான் நாதன்.

“ஒன்றுமில்லை” எனக் கூறி சிரிக்க முயன்றான் ராஜலிங்கம், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

“உனக்கு எத்தினை மணிக்கு வேலை” ராஜலிங்கம்

“எனது வேலை கிடக்கட்டும். ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்” நாதனின் கேள்விக்கு பதில்ளிக்காது கடலை வெறித்தபடி பார்த்தான் ராஜலிங்கம்.

“இந்த இரவிலையும் என்ன புளுக்கம்” என வியர்வையைத் துடைத்தபடி மீன்பிடிப்பவர்களை நோக்கிச் சென்றான் சுந்தரம்.

“எடே சுந்தரம் இங்கைவா, இவன் ராசலிங்கன் உன்ரை ரூம் தானே. உசார் இல்லாமல் இருக்கிறான் என்ன நடந்தது?” நாதன்.

“சுகமில்லை எண்டு பகலும் சாப்பிடேல்லை. வேலைக்கு வரும்வரை

படுத்திருந்தவர் வேலைக்கு வர வேண்டாம் எண்டனான். சம்பளம் வெட்டிப் போடுவாங்கள் எண்டு தான் வேலைக்கு வந்தவர்" என்று கூறினான் சுந்தரம்.

"லிங்கம் என்ன பிரச்சினை எண்டு சொல்லு. நீ சொன்னால் தான் எங்களாலை எதும் செய்ய முடியும். பிரச்சினையை மனசுக்கை வைச்சிராதை" என்றான் நாதன். நாதனின் வற்புறுத்தலின் பின்னர் கடிதம் ஒன்றைக் கொடுத்தான் ராஜலிங்கம்.

கொடிகாமம்

12.05.1990

என்றும் அன்புள்ளவருக்கு,

இத்தனை நாளும் உங்களை ஏமாற்றியதற்கு மன்னிக்கவும். எனது உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளது. நான் கண்ணை மூடமுன் உங்களைப் பார்க்க விரும்புகிறேன். எனது நோய்க்கு இங்கு வைத்தியம் பார்க்க முடியாது. கொழும்புக்குத் தான் போக வேண்டும். கொழும்புக்குப் போகவழி இல்லை.

இப்படிக்கு,

என்றும் உங்கள் மனைவி,

மீனாட்சி

கடிதத்தைப் பார்த்த நாதனின் கைகள் நடுங்கின. சிறிது நேரத்தினுள் கப்பல் முழுவதும் செய்தி பரவி விட்டது. ராஜலிங்கத்தின் மனைவி எழுதிய கடிதம் சகலரையும் கலங்க வைத்தது. ராஜலிங்கத்தின் மனைவியின் நோய் சகலரையும் அதிர்ச்சியடைய வைத்தது. ராஜலிங்கத்தை வேலை செய்யவிடவில்லை. ராஜலிங்கம் சாப்பிடவில்லை என்பதை அறிந்த நாதன் வற்புறுத்தி அழைத்துச் சென்று சாப்பிட வைத்தான்.

"என்னை நெஞ்சளுத்தமடப்பா உனக்கு. கான்சர்கார மனுசியை தனிச்சு விட்டிட்டு வந்திருக்கிறாய். நீ ஒண்டுக்கும் யோசிக்காத கொஞ்சம் நித்திரை கொள்ளு விடிய காம்புக்குப் போய் நல்ல முடிவு எடுப்பம்" என்று ஆறுதல் கூறினான் நாதன்.

இரவு வேலை முடிந்து முகாமுக்குச் சென்றதும் நாதன், ஸ்ரீ, சிவபாலன், சுந்தரம் ஆகியோர் முகாம் பொறுப்பதிகாரியுடன் ராஜலிங்கத்தின் பிரச்சினையை பற்றிக் கதைத்தனர். பத்துமணிக்கு தலைமை அலுவலகம் சென்று உரியவர்களுடன் கதைப்போம் என்று கூறினார் பொறுப்பதிகாரி.

தலைமை அலுவலகத்துக்குச் சென்ற வாகனம் வந்ததும் அனைவரும் முண்டியடித்துக் கொண்டு ஓடினர்.

"என்னவாம்? என்ன சொன்னாங்கள்?" ஏக காலத்தில் பலர் ஒரே மாதிரிக் கேட்டனர்.

"எல்லாம் எதிர்பார்த்ததுதான் மூன்று வருடம் நிக்க வேணுமாம். என்ன பிரச்சினை எண்டாலும் போக முடியாதாம். நாங்கள் வாதாடின தாலை ராஜலிங்கம் போறதுக்கு அனுமதித்திருக்கிறார்கள். ரிக்கெட் நாங்கள் போடவேணும். ராஜலிங்கம் திரும்பி வர முடியாது. நாங்கள் எல்லாரும் காசு போட்டு ராஜலிங்கத்தை அனுப்பி வைப்பம். கையிலை காசில்லாட்டிலும் பரவாயில்லை. எவ்வளவு போடப் போறியள் எண்டு சொல்லுங்கோ. நான் வட்டிக்கு வேண்டுறன். சம்பளம் எடுத்துப் போட்டு காசைத் தாங்கோ" என்று நீண்ட ஒரு பிரசாரம் செய்தான் நாதன்.

சுறுசுறுப்பாக அலுவல்களைப் பார்த்து மூன்று நாட்களில் ராஜலிங் கத்தை அனுப்பி வைத்தார்கள். கைச் செலவுக்கு இலங்கைப் பணத்தில் 50 ஆயிரம் கொடுத்தார்கள். மனைவிக்கு சத்துணவு, பிள்ளைகளுக்கு உடுப்பு, விளையாட்டுச் சாமான்கள் என்று ராஜலிங்கத்தைக் குறைவின்றி அனுப்பி வைத்தார்கள். விமான நிலையத்தில் கண்ணீர் மல்க நன்றி கூறி விடைபெற்றான் ராஜலிங்கம்.

ராஜலிங்கம் சவுதியிலிருந்து இலங்கைக்குச் சென்று ஒரு வாரத்தின் பின்னர் ராஜலிங்கத்தின் பெயருக்கு இலங்கையிலிருந்து கடிதம் வந்தது. கடிதத்தைத் திரும்ப அனுப்ப வேண்டும் என்றனர் சிலர். உடைத்துப் பார்த்தால் மனைவியின் நிலைமையை அறியலாம் என்றனர் சிலர். நீண்ட வாதப் பிரதிவாதத்தின் பின்னர் கடிதத்தை உடைத்துப் பார்த்தவர்கள் திகைத்து விட்டனர். இப்படியும் நடக்குமா என்று நாதன் அதிர்ச்சியில் உறைந்தான். கடிதத்தைப் பார்த்த மற்றவர்களும் கதி கலங்கி விட்டனர்.

"என்ன உலகமடா இது அடக் கடவுளே இப்படியும் நடக்குமா?" என வாய்விட்டு அரற்றினான் சுந்தரம். ராஜலிங்கத்தின் மனைவி எழுதிய அந்தக் கடிதத்தின் சாராம்சம் சுந்தரத்தின் மனதைக் குடைந்தது.

சண்டை இப்போதைக்கு முடியாது. இந்த மாதம் காணி ஈடுமீளவில்லையெண்டால் அறுதியாகிவிடும். காசுக்கு ஏற்பாடு செய்யுங்கோ என்ற கடிதத்தின் வரிகள் சுந்தரத்தின் மனதில் முள்ளாய்க் குத்தின.

●

யாதும் 2010

-கனடா-

# கொக்கு வெடி

**ம**ழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. வண்டு களின் ரீங்கார ஒலிக்குப் போட்டியாக தவளைகள் அகோரமாக கோஷ்டிகானம் இசைத்தன. காரிருள் சூழ்ந்த அவ்வேளையில் ஆங்காங்கே இருந்த காவற்கொட்டில் களின் லாம்புகள் கோலங்காட்டின. மணி ஓசையும், வெடிகளும், ஹோ ஹோ என்ற சத்தமும் இடையிடையே காற்றில் கலந்தன. நெல் அறுவடை நெருங்கியதால் முழுமையான பயனைப் பெறுவதற்கு தூங்காமல் இருந்தனர்.

செல்லையா கறுத்தக் கோட்டைப் போட்டுக் கொண்டு தலையில் ஒரு துண்டைக் கட்டினான். ஐந்து புதுப்பற்றி களைப் போட்டுவிட்டு இருட்டுக்குள் ரோச்சை அடித்து வெளிச்சம் ஓரிடத்தில் குவிந்திருக்கிறதா எனச்சரி பார்த்தான். சாம்பலுக்குள் இருந்த தோட்டாக்களை எடுத்து பொலித்தீன் பாக்கினுள் போட்டான். நெருப்புப் பெட்டியும் பீடிகளும் தோட்டாக்களுடன் ஒட்டிக் கொண் டன.

மூலையில் இருந்த துவக்கை எடுத்து கைவிளக்கு வெளிச்சத்தில் குறிபார்த்த பின்னர் குழல் முனையில் சுண்ணாம்பைப் பூசினான். அனைத்தையும் மீண்டும் ஒரு முறை சரிபார்த்த பின்னர் கைவிளக்கை அணைத்து விட்டு காவற்கொட்டிலை விட்டு வெளியேறினான்.

பீடியை ருசித்தவாறு இருளைப் பார்த்துக் கொண்டிருந்தான் செல்வன். அவனுடைய காவற்கொட்டிலின் நடுவே பிரம்பு போன்ற மெல்லிய காட்டுத்தடிகளினால் கட்டப்பட்ட சிறாம்பி இருந்தது. அதன் கீழே இருந்த நெருப்புச்சட்டி காவற்கொட்டிலை வெதுவெதுப் பாக்கியது. மூலையிலே இரண்டு பெரிய தகரங்களும், இரண்டு சிறிய கொட்டன்களும் இருந்தன. செல்வனின் காவற்கொட்டிலினுள் செல்லையா நுழைந்த அதே வேளை

மழை பெரிதாகப் பெய்யத் தொடங்கியது.

"என்ன செல்லையா கையோடை மழையையும் கூட்டி வந்திட்டாய் போலை"

"வரவேண்டாம் எண்டு தான் சொன்னனான் பின்னாலை வந்திட்டுது. இந்தச் சிறாம்பியிலை கிடக்கிறன். ஒன்பது மணிபோலை எழுப்பி விடு" எனக் கூறிவிட்டு காட்டுத் தடிகளினால் கட்டப்பட்ட சிறாம்பியில் படுத்தான். நெருப்புச் சட்டியின் வெதுவெதுப்பு அவனுக்கு இதமாக இருந்தது.

மழை விட்டதும் செல்வனின் மனைவி சாப்பாட்டுடன் வந்தாள். செல்லையாவை எழுப்பி சாப்பிடுமாறு கூறினான் செல்வன். அவன் முதலில் மறுத்தான். செல்வனும் மனைவியும் வற்புறுத்தியதனால் சாப்பிட்டான். சுடுறொட்டியும், கருவாடு போட்ட பூசணிக்காய்க் குழம்பும் செல்லையாவுக்கு மிகவும் பிடித்த சாப்பாடு. செல்லையாவுக்கு தாயின் நினைவு வந்தது.

செல்லையா படிக்க வேண்டும் என்று அவனது தாய் மீனாட்சி விரும்பினாள். செல்லையாவுக்கு படிப்பில் விருப்பம் இல்லை. மீனாட்சியின் கணவன் இன்னொருத்தியுடன் ஓடியதால் செல்லையாவை வளர்க்க தாய் மிகவும் கஸ்டப்பட்டாள். ஆசிரியரின் வயலுக்கும் தோட்டத்துக்கும் காவலாளியாக செல்லையா சென்றதும் அவளது கஸ்ரம் ஓரளவு தீர்ந்தது. அருவி வெட்டும் போது பாம்பு கடித்து மீனாட்சி இறந்ததால் ஆசிரியரின் வீட்டிலேயே செல்லையா சரணடைந்தான். அதன் பின்னர் அவன் நிரந்தரக் காவலாளியாகினான்.

"செல்வன் என்ரை வயலிலையும் ஒரு கண் வைச்சிரு. அங்காலை ரத்தினத்துக்கும் சொன்னனான்" எனக் கூறியபடி வேட்டைக்குத் தயாரானான் செல்லையா.

"நீ கவலைப்படாதை செல்லையா. நான் பாத்துக் கொள்ளுறன்" என்றான் செல்வன். ஏதாவது கிடைத்தால் தனக்கும் ஒரு பங்கு இறைச்சி கிடைக்கும் என்று செல்வன் எதிர்பார்த்தான்.

அம்மியான் மோட்டையில் மரை ஒன்று திரிவதாகக் கேள்விப்பட்ட செல்லையா அம்மியான் மோட்டையை நோக்கிச் சென்றான். மழை இருளிலும் பாதை தவறாது அரை மணித்தியாலத்தில் அம்மியான் மோட்டையைச் சென்றடைந்தான். அம்மியான் மோட்டையைச் சூழவுள்ள மரங்களில் பரண் கட்டப்பட்டிருந்தது. காற்று வளம் பார்த்து. ஒரு வீரை மரத்தின் பரணில் ஏறி வசதியாக இருந்தான் செல்லையா.

இடது கையால் குறிபார்த்துச் சுடும் மிகத்திறமையான வேட்டைக்

காரனான செல்லையா தனது முதலாவது வேட்டையை என்றைக்குமே மறந்ததில்லை. ஆசிரியருடன் வேட்டைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை செல்லையாவின் மனதில் இருந்தது. அதற்குரிய சந்தர்ப்பம் என்றைக்குமே கிடைத்ததில்லை. ஆசிரியர் தனது குடும்பத்துடன் ஊருக்குச் சென்ற ஒரு நாள் தனது நண்பர்களுடன் பகலில் வேட்டைக்குச் சென்றான் செல்லையா.

ஆசிரியருடன் அடிக்கடி வேட்டைக்குச் செல்வதாக செல்லையா கூறிய பொய்யை நம்பிய அவனது நண்பர்கள் செல்லையாவின் திறமையைப் பார்க்க அவனுடன் கூடச் சென்றனர். பாடசாலைக்குச் செல்வதால் தமக்கு வேட்டையைப் பற்றி எதுவுமே தெரியாது. வேட்டைக்குச் செல்லும் செல்லையா கொடுத்து வைத்தவன் என்று அவனது நண்பர்கள் நம்பினார்கள்.

செல்லையாவின் நல்ல காலம் எதிரே பெரியதொரு பன்றிக் கூட்டம் தென்பட்டது. செல்லையாவின் நண்பர்கள் ஆனந்தப்பட்டார்கள். ஒரு வேட்டையை அவர்கள் நேரடியாகக் காணும் முதலாவது சந்தர்ப்பம் இதுதான். சுடு சுடு என்று நண்பர்கள் அவசரப்படுத்தினார்கள். சுடத் தெரியாத செல்லையாவுக்கு கை கால் எல்லாம் நடுங்கியது.

ஏதோ ஓர் அசட்டுத்துணிவில் எல்லோரையும் மரங்களின் பின்னால் மறையும்படி கூறினான் செல்லையா. மரத்தின் பின்னால் மறைந்த செல்லையாவின் நண்பர்கள் மெதுவாக எட்டிப்பார்த்தார்கள். துவக்கை கமக்கட்டினுள் வைத்த செல்லையா குதிரையைத் தட்டினான். யாரோ துவக்கைப் பறித்தது போன்று உணர்ந்தான். கண்மூடித் திறப்பதற்குள் கையிலிருந்த துவக்கைக் காணவில்லை. வெடிச்சத்தம் கேட்டதும் பன்றிக் கூட்டம் கலைந்து ஓடியது.

செல்லையாவின் நண்பர்கள் மறைவிலிருந்து வெளியே வந்தார்கள். செல்லையாவுக்குப் பின்னால் கிடந்த துவக்கை ஒருவன் காட்டினான். அப்பொழுது தான் செல்லையாவுக்கு உயிர் வந்தது. துவக்கை அணைக்கத் தெரியாது வெடி வைத்ததை நினைத்தால் செல்லையாவுக்கு இப்போதும் சிரிப்பு வரும்.

நட்சத்திரங்கள் நிற்கும் நிலையைப் பார்த்த செல்லையா பன்னிரண்டு மணிதாண்டி இருக்கும் என்று நினைத்தான். மரையை இன்னும் காணவில்லை என்று சலித்துக் கொண்டான்.

செல்லையா மீண்டும் பழைய சிந்தனையில் ஆழ்ந்தான். கோயில்

பொங்கல் முடிந்த மறுநாள் செல்லையாவும் வேறு சிலரும் இரவு கதைத்துக் கொண்டிருக்கையில் சுந்தரம் மூச்சிரைக்க ஓடிவந்தான்.

"செல்லையா அண்ணை, செல்லையா அண்ணை அந்தப் பெரிய கலை வளவுக்கை நிக்குது உடனை வாங்கோ" என்றான் சுந்தரம்.

அவனை அனுப்பிவிட்டு ரோச் லைற்றையும் துவக்கையும் எடுத்துக் கொண்டு செல்வனுடன் சுந்தரத்தின் வளவு நோக்கிச் சென்றான் செல்லையா.

"என்ன செல்லையா தோட்டா இல்லை எண்டனி இப்ப என்னண்டு வெடி வைக்கப்போறாய்" என தனது சந்தேகத்தைக் கேட்டான் செல்வன்.

தயாராக வைத்திருந்த கட்டுத் துவக்கை வெடிக்க வைத்து விட்டு ரோச்லைற்றை அங்கும் இங்கும் அடித்தான் செல்லையா. சிறிது நேரத்தில் சுந்தரத்தின் வீட்டுக்குச் சென்ற செல்லையா "நுரையீரல் வெடி தப்பாது. விடிஞ்சாப் போலை காட்டுக்கை போய்ப்பாப்பம்" என்றான். சிரிப்பை அடக்க வெகுவாக கஸ்ரப்பட்டான் செல்வன்.

விடிந்ததும் வேப்பங்குச்சியுடன் பல்லு விளக்கியபடி வயலுக்குச் சென்றான் செல்லையா. அப்போது எதிரே வந்தான் ரத்தினம்.

"என்ன செல்லையா கலை தப்பிட்டுது போலை. பசுபதி வேலைக்குப் போகேல்லை நாயளையும் கூட்டிக் கொண்டு காட்டுக்குப் போய்விட்டான்" என்றான் ரத்தினம். செல்லையா சிரித்து விட்டுச் சென்றான்.

சிந்தனை கலைந்த செல்லையா வானத்தைப் பார்த்தான். மூன்று மணி இருக்கும் இனிமேல் மரைவராது என்பதைத் தெரிந்து கொண்ட செல்லையா மரத்திலிருந்து இறங்கி வீட்டை நோக்கி நடந்தான்.

"நாளைக்கு யாழ்ப்பாணத்திலை இருந்து ஆக்கள் வருகினம். மான், மரை எண்டாலும் வேணும்" என வல்லிபுரம் முதலாளி கூறியது செல்லையாவின் மனதில் வந்து போனது. தாண்டிக் குளத்தை அண்மித்த செல்லையாவின் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் படர்ந்தன. ஜோஸப்பின் மாடுகள் செல்லையாவைக் கண்டதும் ஆசிரியரைக் கண்ட மாணவரைப் போன்று எழுந்து நின்றன. ஒன்றை ஒன்று பார்த்து "ம்மா" என்றன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சில கன்றுகள் பாலைக் குடித்தன.

செல்லையாவின் துப்பாக்கி வெடித்ததும் மாடுகள் சிதறி ஓடின. வெடிபட்ட மாடு அலறியபடி காலைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள்

ஓடியது. தனது துரதிர்ஷ்டத்தை நினைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்ற செல்லையா தன்னையும் அறியாமல் படுத்துத் தூங்கிவிட்டான்.

"செல்லையா செல்லையா" விதானையாரின் குரல் கேட்டதும் துடித்துக் கொண்டு எழுந்த செல்லையா வெளியே போனான். அங்கே செல்லத்துரை விதானையார், மாட்டுக்கார ஜோஸப் இன்னும் இரண்டு மூன்று பேர் நின்றனர்.

"செல்லையா ராத்திரி வேட்டைக்குப் போனனிதானே?" விதானையார் கேட்டார்.

"ஓம் விதானையார்"

"என்ன மிருகம் கிடைச்சது"

"ஒண்டும் கிடைக்கேல்லை விதானையார்"

"தாண்டிக் குளத்திலை என்னத்துக்கு வெடி வைச்சனி?"

"கொக்கு கொக்கு" தன்னையும் அறியாமல் பதறினான் செல்லையா.

"கொக்கோ உண்மையைச் சொல்லு ஜோஸப்பின் மாட்டுக்குத் தானே வெடிவைச்சனி" என்று விதானையார் மிரட்டினார்.

"தெரியாமல் வெடி வைச்சிட்டன். அறுவடை முடிஞ்ச பிறகு காசு தாறன்" என்று செல்லையா கெஞ்சினான். செல்லையாவிடம் காசு வாங்குவதற்கு ஜோஸப் சம்மதித்தான் விதானை அதனைப் பெரிதாக்கவில்லை. ஜோஸப்பின் மாடு காட்டுக்குள் செத்திருக்கும் என செல்லையா நம்பினான்.

செல்லையாவும் பசுபதியும் பகலில் உடும்பு வேட்டைக்குச் சென்றனர். அப்போது அவர்களின் எதிரே செல்லையாவிடம் சூடுவாங்கிய ஜோஸப்பின் மாடு நின்றது. சூடுபட்ட காயத்திலிருந்து ஊனம் வடிந்து கொண்டிருந்தது. அந்தக்கால் நிலத்தில் பட்டும் படாமலும் இருந்தது. மாட்டின் பார்வையைச் சகிக்க முடியாத செல்லையா துப்பாக்கியைத் தூக்கி குறிபார்த்தான். என்ன நினைத்ததோ தெரியாது நொண்டியபடி காட்டுக்குள் ஓடி மறைந்தது மாடு.

செல்லையாவும் பசுபதியும் எதுவும் பேசாமல் சென்று கொண்டிருந் தனர். அப்போது திடீரென செல்லையா அவலக்குரல் எழுப்பினார். ஜோஸப்பின் மாட்டின் கொம்பில் செல்லையா துடிப்பதைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்தார் பசுபதி.

ஜோஸப்பின் மாடு தலையை நாலா பக்கமும் சுழற்றியது. அப்போது மாட்டின் கொம்பிலிருந்த செல்லையா கீழே விழுந்தார். ஜோஸப்பின் மாடு மீண்டும் மீண்டும் தன் கொம்பினால் செல்லையாவைத் தாக்கியது. கோபம் தீர்ந்ததும் நொண்டியபடி மாடு காட்டை நோக்கிச் சென்றது. மாடு சென்றதும் செல்லையாவின் அருகில் சென்று பார்த்தான் பசுபதி. செல்லையாவின் உடலில் எந்த அசைவும் இல்லை. ●

மன்றம்

யாதும் 2011

-கனடா-

## என்று மறையும் ●

கிராய்ப்பிள்ளையார் கோயிலில் காலைப்பூசை முடிவடைந்த பின்னர் சில பக்தர்கள் ஆலயத்தினுள் இருந்தனர். பலர் ஆலயத்துக்கு வெளியே உள்ள மரங்களின் கீழ் இருந்தனர். அர்ச்சனை செய்ய விரும்பியவர்கள் ஐயரைச் சூழ்ந்து நின்றனர். அப்போது தூரத்திலே வித்தியாசமான சத்தம் கேட்டது. மரத்தின் கீழ் இருந்தவர்கள் ஒருவரை ஒருவர் திகைப்புடன் பார்த்தவாறு வானத்தை அண்ணாந்து நோக்கினர். அவர்களின் கண்களுக்கு எதுவுமே புலப்படவில்லை. கோயிலின் தெற்குப் பக்க வெளி வீதியில் நின்றவர் பதைபதைப்புடன் மரத்தின் கீழ் இருந்தவர்களைக் கைகாட்டி அழைத்தார். மரத்தின் கீழ் இருந்தவர்கள் ஓட்டமும் நடையுமாக அவரை நோக்கிச் சென்றார்கள். மேற்குத் திசையில் பலாலிப் பக்கத்தில் வானத்திலே சில புள்ளிகள் தெரிந்தன. வித்தியாசமான சத்தத்துக்கு அந்த ஹெலிகள் தான் காரணம் என அவர்கள் அறிந்து கொண்டனர். ஏழு ஹெலிகள் வரிசையாக அவர்களைத் தாண்டிச் சென்றன. "ஆனையிறவுக்குப் போறாங்கள் போலை" என்று அங்கு நின்றவர்களில் ஒருவர் கூறினார்.

மற்றவர்கள் அதை ஆமோதித்தனர். ஹெலிகள் எங்கே போகின்றன என்று ஊகித்தவர்கள் மீண்டும் மரத்தின் கீழ் அமர்ந்தனர். இரண்டு பேர் மட்டும் கிழக்கு நோக்கிச் செல்லும் ஹெலிகளைப் பார்த்துக்கொண்டு நின்றனர். ஹெலிகளை பார்த்துக் கொண்டு நின்றவர்கள் மீண்டும் பதை பதைப்புடன் கைகளைக் காட்டி மரத்தின் கீழ் இருந்தவர்களை அழைத்தனர். மரத்தின் கீழ் இருந்தவர்கள் மீண்டும் ஓட்டமும் நடையுமாக அவர்களை நோக்கிச் சென்றனர். அந்த ஏழு ஹெலிகளும் திடீரென தரை இறங்கின. "தில்லை அம்பலத்திலை இறங்குறாங்கள். வறணியை சுத்தி வளைக்கப் போறாங்கள் போலை" என ஒருவர் கூறினார். அதற்கு மற்றவர்கள் ஆமாம் போட்டனர். அந்த ஏழு ஹெலிகளும் மீண்டும் பலாலி நோக்கிச் சென்றன. சுமார் பதினைந்து நிமிடங்களின் பின்னர்

அந்த ஏழு ஹெலிகளும் மீண்டும் பலாலியிலிருந்து தில்லையம்பலம் நோக்கிச் சென்றன. நடக்கப் போகும் விபரீதத்தை அறியாதவர்கள் கிராய்ப்பிள்ளையார் கோயிலிலிருந்து தமது வீடு நோக்கிச் சென்றனர். வடமராட்சியின் வான்வெளியை ஹெலிகளும், ஏரோபிளேன்களும், சீப்பிளேன்களும் ஆக்கிரமித்திருந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவ ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. ஆலயங்களிலும் பொது இடங்களிலும் மக்கள் இருப்பது பாதுகாப்பானது என வானொலியில் விசேட செய்தி அடிக்கடி ஒலிபரப்பாகியது. உடுப்பிட்டியையும், வல்வெட்டித் துறையையும் கைப்பற்றிய இராணுவம் மேலும் முன்னேறிக் கொண்டிருந் தது. பொம்பர் குண்டுகளும், ஹெலிகளின் பிப்ரிகலிபர்களும், ஏரோக்களின் பீப்பாக் குண்டுகளும் வடமராட்சியை அதிரச் செய்தன.

இராணுவத்திடமிருந்து தப்புவதற்கு விரும்பியவர்கள் வதிரி, கரவெட்டி ஆகிய கிராமங்களை நோக்கி நகர்ந்தனர். சிதம்பரத்தின் வீட்டிற்கு அயலிலுள்ளவர்கள் எல்லோரும் வெளியேறிவிட்டனர். வீட்டை விட்டுப் போவதில்லை என்பதில் சிதம்பரம் உறுதியாக இருந்தார். குமர் பெட்டையையும், இளந்தாரிப் பொடியனையும் வைச்சுக் கொண்டு தனிச் சிருக்கிறது நல்லதல்ல என்று சிதம்பரத்தின் மனைவி பலமுறை கூறி விட்டார். மனைவியின் சொல்லுக்கு சிதம்பரம் மசியவில்லை. சிதம்பரத்தின் வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் இடம்பெயர்ந்த மக்கள் சாரிசாரியாக சென்றனர். வயதானவர்களை சைக்கிளில் இருத்தி சைக்கிளை உருட்டி சென்றனர். சில வயதானவர்களை கதிரையில் இருத்தி கதிரையைப் பல்லக்கு போல் தூக்கிச் சென்றனர். ஆடு, மாடு, கோழி என்பனவற்றை விட்டுச் செல்ல மனமில்லாத சிலர் அவற்றையும் தம்முடன் அழைத்துச் சென்றனர். எஜமான்களின் பின்னே நன்றியுள்ள நாய்களும் சென்றன. சிதம்பரத்தின் நாயான வீமன் தனது எல்லைக்குள் வந்த நாய்களைக் கண்டதும் சிறிது தூரம் விரட்டிச் சென்று விட்டு மீண்டும் தனது வீட்டுக்கு வந்தது. "வீட்டிலை தனியா இருந்தவையை சுட்டுப் போட்டாங்களாம். கலட்டிப்பிள்ளையார் கோயிலிலை இருந்த பொடியங்களை ஆமி பிடிச்சுப் போட்டுதாம்". சிதம்பரத்தின் மகள் மல்லிகா தான் கேள்விப்பட்டவற்றைத் தகப்பனிடம் கூறினாள். முகத்தில் எந்தவிதமான உணர்ச்சிகளையும் காட்டாது மகள் கூறுவதைக் கேட்டார் சிதம்பரம்.

"நாங்களும் ஆமி அறிவிச்ச கோயிலுக்குப் போவமப்பா. சனத்தோட சனமா இருந்தா பயமிராது. அண்ணாவை நினைக்க பயமாக் கிடக்கப்பா" என்று கூறினாள் மல்லிகா. சிதம்பரத்தின் மகள் மல்லிகா ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறாள். அவளது அண்ணன் கல்விப் பொதுத் தராதர

உயர் வகுப்பு மாணவன். பெரிய மனுஷி போல் தகப்பனுக்கு ஆலோசனை கூறினாள் மல்லிகா. மல்லிகாவின் பயத்தை உணர்ந்த சிதம்பரம் வீட்டைவிட்டு வெளியேற ஒப்புக் கொண்டார். அந்தக் கோவில் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. வல்லிபுரக் கோவில், சன்னதி, நல்லூர்க் கோயில்களின் தேர், தீர்த்தத்துக்கு கூடும் அதே சனக்கூட்டத்தால் கோவில் திக்கு முக்காடியது. இப்படி ஒரு சனக்கூட்டத்தை அந்தக் கோயில் கண்டதில்லை. அந்தக் கோயில் எல்லையில் சிதம்பரம் இப்போது தான் காலடி எடுத்து வைத்தார். சிதம்பரத்தின் கிராமத்தவர்கள் ஒரு மரத்தின் கீழ் இருந்தார்கள். தம்முடன் வந்து இருக்கும் படி சிதம்பரத்தை அழைத்தார்கள். சிதம்பரமும், மனைவியும், பிள்ளைகளும் தமது கிராமத்தவர்களுடன் கலந்தனர். நீண்ட தூரம் நடந்த களைப்பு, பயம், பதற்றம், பசி என்பனவற்றினால் சிதம்பரத்தின் மனைவி சோர்வடைந்தாள். தண்ணி கிடக்கே என சிதம்பரத்தின் மனைவி கேட்டாள். அருகில் இருந்த ஒருவர் தண்ணீரைக் கொடுத்தார். தாகம் தீரக்குடித்தாள் சிதம்பரத் தின் மனைவி. தண்ணீரின் தேவையை உணர்ந்த சிதம்பரம் தண்ணீர் எங்கே எடுக்கலாம் என அருகில் இருந்தவரைக் கேட்டார். கிணறு இருக்கும் திசையைக் காட்டினார் அவர். செம்பையும், வாளியையும் எடுத்துக் கொண்டு கிணற்றடியை நோக்கிச் சென்றார் சிதம்பரம். கிணற்றைச் சுற்றி நிறைய சனம். ஒருவர் தண்ணீரை வாளியால் ஊற்றினார். சுற்றி நின்றவர்கள் நீரைப் பெறுவதற்காக முண்டியடித்தனர். அரைவாசிக்கும் மேற்பட்ட நீர் வெளியில் சிந்தியது.

“தள்ளி நில்லுங்கோ, தள்ளி நில்லுங்கோ. நெருக்குப்படாமல் நிண்டால் தண்ணி எடுக்கலாம். ஆமிக்காரன் வெளிக்கிட்டது எளியதுகளுக்கு வாச்சுப் போச்சு” என்று நீரை ஊற்றியவர் கூறினார். சிதம்பரத்தின் நெஞ்சில் அந்த வார்த்தைகள் சுருக்கெனத் தைத்தன. தண்ணீர் எடுக்காமல் திரும்பிச் சென்றார்.

“ஏனப்பா தண்ணி இல்லையே” மகள் கேட்டாள்.

“தண்ணி நிறையக் கிடக்கு பிள்ளை. அதைத் தாறவனுக்குத்தான் மனசு சரியில்லை. இப்பிடி ஒரு அவமானம் வரக்கூடாது எண்டுதான் வீட்டிலை இருப்பம் எண்டனான். வாங்கோ வீட்டை போவம்”

“உங்களுக்கென்ன விசரே. சனமெல்லாம் உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டு ஓடுது. நீங்கள் வீட்டை போவம் எண்ணுறியள்” சிதம்பரத்தின் மனைவி வெகுண்டெழுந்தாள்.

“சரி நீங்கள் நில்லுங்கோ நான் போறன்” எனக் கூறிக் கொண்டே

சயிக்கிளை உருட்டத் தொடங்கினார் சிதம்பரம். சிதம்பரத்தின் மனைவி யும், மகளும், மகனும் அவரின் பின்னால் மௌனமாகச் சென்றனர். வடமராட்சியை இராணுவம் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தது. பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கி இருந்தவர்கள் தமது வீட்டுக்குத் திரும்பினர். சிதம்பரத்தின் அயல் வீட்டுக்காரரான சண்முகத் தின் குடும்பம் வீட்டுக்குத் திரும்பியது. சிதம்பரத்தின் வீடு பூட்டியிருந்தது.

"என்னப்பா வீடு பூட்டிக் கிடக்கு. சிதம்பரமண்ணையவை எங்கை போச்சினமோ தெரியாது?" சண்முகத்தின் மனைவி கேட்டாள்.

"மச்சானுக்கு புத்தூரிலை ஆக்கள் இருக்கினம். அவை அங்கை போயிருப்பினம். பங்கரை மூடச் சொல்லி ஆமி அறிவிச்சிருக்கு. நான் மச்சான் வீட்டு பங்கரை மூடிப்போட்டு வாறன்" எனக் கூறிய சண்முகம் மண்வெட்டியுடன் சிதம்பரத்தின் வீட்டை நோக்கிச் சென்றார். சிதம்பரத்தின் வீட்டு பங்கர் மிகவும் பாதுகாப்பானது.

ஷெல் வீச்சு, விமானத் தாக்குதல் நடந்தால் அருகில் உள்ளவர்கள் சிதம்பரத்தின் வீட்டு பங்கருக்குத்தான் செல்வார்கள். சிதம்பரத்தின் வீட்டைச் சுற்றிப் பார்த்தார் சண்முகம். திருடர் வந்து போன அடையாளம் எதுவும் இல்லை. பங்கரை மூடுவதற்கு முன் எட்டிப் பார்த்த சண்முகத்தின் மேனி சில்லிட்டது. சப்தநாடிகளும் ஒடுங்கி என்ன செய்வதெனத் தெரியாது அதிர்ச்சியில் உறைந்தான். சண்முகத்தின் அழுகுரல் கேட்டு அயலவர்கள் சிதம்பரத்தின் வீட்டை நோக்கி ஓடினார்கள். பங்கருக்குள் சதைக்குவிய லாக சிதம்பரத்தின் குடும்பம் கிடந்தது.

சிதம்பரத்தின் வீட்டுக்குப் பின்னால் உள்ள வடலிக்குள் எழுந்த வீமனின் குரைப்புச் சத்தம் உறவினர்களின் அழுகுரலை விஞ்சியது. சிதம்பரத்தின் செல்லநாயான வீமனின் வித்தியாசமான குரைப்புச் சத்தம் வந்த வடலியை நோக்கி சென்றவர்களுக்கு இன்னொரு அதிர்ச்சி. மேலெங்கும் இரத்தக் காயங்களுடனும் அரைகுறை ஆடைகளுடனும் மயங்கிய நிலையில் சிதம்பரத்தின் மகள் கிடந்தாள். ●

**ஜீவநதி**

**மார்கழி 2011**

## காவியமா? நெஞ்சில் ஓவியமா? ●

"காவியமா? நெஞ்சில் ஓவியமா? அதன் ஜீவிதமா? தெய்வீகக் காதல் சின்னமா?"

காற்றினிலே மிதந்து வந்த அந்தப் பழைய பாடல் ராகேஷின் தூக்கத்தைக் கலைத்தது. கட்டிலின் இடது புறமாக இறங்கிய ராகேஷ் ஐந்து அடிகள் நடந்ததும் கையை மெதுவாக நீட்டி சுவரைத் தடவி திரைச் சீலையை இழுந்தான்.

திரைச்சீலையால் மறைக்கப்பட்ட அந்தப் பிரமாண்ட மான படம் பளிச்செனத் தெரிந்தது. மூன்றடி பின்னே நகர்ந்து இரண்டு கைகளையும் மார்பிலே கூப்பியபடி கண்களைத் திறந்தான் ராகேஷ். காலையில் எழுந்ததும் சுவரில் உள்ள அந்தப்படத்தை சுமார் பதினைந்து நிமிடங்கள் பார்த்த பின்பே தனது வழமையான பணி களை அவன் ஆரம்பிப்பான்.

ராகேஷைத் தேடிவந்த அவனது நண்பன் நந்தன் ஜன்னலினூடாக அந்தக் காட்சியைக் கண்டதும் அப்படியே சிலையாக நின்றான். நந்தனின் கண்களில் நிறைந்த நீர் அவனை அறியாது கன்னத்தில் விழுந்தது.

சுவரில் இருந்த சித்திரத்தை வணங்கிய பின் நந்தனைக் கண்ட ராகேஷ் கதவைத் திறந்தான். கண் களைக் துடைத்தபடி ராகேஷின் அறைக்குள் நுழைந்த நந்தன் அந்தக் சுவரோவியத்தைப் பார்த்து மானசீகமாக வணங்கினான்.

ராகேஷ் குளியறைக்குள் நுழைந்தான்.

இலங்கையில் மிகக் சிறந்த ஓவியர்களில் ராகேஷும் ஒருவன். அவனுடைய ஓவியங்களை விலை கொடுத்து வாங்குவதற்கு வெளி நாட்டில் உள்ளவர்கள் போட்டிபோடுவார்கள்.

நந்தனும், ராகேஷும் ஒரே பாடசாலையில் படித்தவர்கள்.

கொழும்பிலே வெவ்வேறு நிறுவனங்களில் வேலை செய்கிறார் கள். வீடொன்றை வாடகைக்கு எடுத்து இருவரும் தங்கியுள்ளனர். விடுமுறை நாட்களில் ஓவியம் வரைவதற்காக ராகேஷ் வெளியூர் போகும் போது நந்தனும் அவனுடன் செல்வான்.

இலங்கையின் பிரபலமான சஞ்சிகையில் வெளியாகும் தொடர் கதைக்கு ராகேஷின் ஓவியம் உயிர் கொடுத்து வருகிறது. அந்தத் தொடர் கதையின் நாயகனும், நாயகியும் பேராதனைப் பூங்காவுக்குச் செல்வதாகக் கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

நாயகனும், நாயகியும் சந்திக்கும் இடத்தைப் பார்த்து ஓவியம் வரைவதற்காக ராகேஷ் பேராதனைக்குச் சென்றான்.

நந்தனும் ராகேஷுடன் சென்றான். ராகேஷ் ஓவியம் வரையும் போது நந்தன் பூங்காவைச் சுற்றிப் பார்த்தான். பேராதனையில் உள்ள ராகேஷின் நண்பன் ஒருவன் இரவு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந் தான். ஓவியம் வரைந்ததும் விருந்துக்குச் செல்வதாக இருவரும் தீர்மானித்திருந்தனர்.

ஓவியம் வரைவதில் ராகேஷ் மும்முரமாக இருந்தான். பூங்காவைச் சுற்றிப் பார்த்த நந்தன் தனக்குத் தலைவலிப்பதாகவும், விருந்துக்கு வராது அறையில் ஓய்வெடுக்கப் போவதாகவும் கூறிச்சென்றான்.

நந்தன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான் ராகேஷ்.

உண்மையிலேயே நந்தனுக்குத் தலையிடி இல்லை என்பதும் அவன் வேறு ஒரு இடத்துக்குப் போகிறான் என்பதும் ராகேஷுக்குத் தெரியும். நந்தனைக் திருத்துவதற்கு ராகேஷ் எவ்வளவோ முயற்சி செய்தான். நந்தன் திருந்தக் கூடிய எந்தவிதமான அறிகுறியும் அவனுக்குத் தெரியவில்லை.

நண்பனின் வீட்டில் விருந்துண்ட ராகேஷ் இரவு ஒன்பது மணிக்கு விடுதிக்குச் சென்றான். அறைக் கதவு பூட்டப்பட்டிருந்தது. அவன் எதிர் பார்த்தது போன்று நந்தன் இன்னமும் அறைக்கு வரவில்லை என நினைத்தான். என்ன செய்வதென ராகேஷ் யோசித்துக் கொண்டிருக் கையில் அறைக்குள் யாரோ நடமாடுவது போன்ற சத்தம் கேட்டது.

ராகேஷ் கதவை தட்டிவிட்டு காத்திருந்தான். கதவைத் திறந்த நந்தன், ராகேஷைக் கண்டதும் திகைத்து விட்டான். பத்து மணிக்குப் பின்னர் தான் ராகேஷ் வருவான் என்று நந்தன் எதிர்பார்த்திருந் தான். ஒன்பது

மணிக்கு ராகேஷ் வருவான் என நந்தன் எதிர்பார்க்கவில்லை. வாசலை மறைத்துக் கொண்டு நந்தன் நின்றான்.

அவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்ற ராகேஷ் அதிர்ச்சியில் உறைந்தான்.

அரைகுறை ஆடையுடன் இருந்த பெண் குளியறைக்குள் ஓடி ஒளிந்தாள். அரை குறை ஆடையுடன் இவ்வளவு நெருக்கத்தில் ஒரு பெண்ணை ராகேஷ் கண்டதில்லை. தன் அந்தரங்க லீலையை ராகேஷ் கண்டு விட்டான் என்ற கலக்கத்தில் செய்வதறியாது தவித்தான் நந்தன். எதுவும் பேசாது அறைக்கு வெளியே சென்று மாடிப்படி அருகே நின்றான் ராகேஷ். தனக்குப் பின்னால் யாரோ நடந்து வரும் ஓசை ராகேஷுக்குக் கேட்டது.

அந்தச் சத்தம் மாடிப்படியில் இறங்கும் என்று எதிர்பார்த்தான் ராகேஷ். ராகேஒக்குப் பின்னால் நின்ற அந்தக் காலடிச் சத்தம் தொடரவில்லை சுமார் ஒரு நிமிடத்தின் பின் திருப்பிப் பார்த்தான் ராகேஷ். அறைக்குள் அரைகுறை ஆடையுடன் இருந்த பெண் மலங்க மலங்க முழித்த படி நின்றாள். அந்தப் பெண்ணின் கண்களைப் பார்த்தான் ராகேஷ். அந்தக் கண்களில் ஆயிரம் ஓவியங்கள் தெரிந்தன. கற்பனையில் மிதந்த ராகேஷ் தன்னிலை அடைந்த போது எதிரே அப்பெண் இல்லை. சற்று தூரத்தில் நந்தன் நின்றான்.

சுதாகரித்துக் கொண்ட ராகேஷ் மாடிப்படியால் விறுவிறு என இறங்கி னான்.

ராகேஷின் நடவடிக்கையால் அதிர்ச்சியடைந்த நந்தன், ராகேஷைத் தொடர்ந்து சென்றான். அந்தப் பெண்ணைத் துரத்திச் சென்ற ராகேஷ் அவளிடம் ஏதோ கூறினான்.

அவள் பலமாக தலையை ஆட்டி மறுத்தாள். கெஞ்சுவது போல் ராகேஷ் ஏதோ கூறினான்.

சில நிமிடங்களில் சம்மதத்துக்கு அறிகுறியாக தலையை மேலும் கீழும் ஆட்டினாள் அவள். இந்தக் காட்சியைத் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த நந்தன் பதற்றமடைந்தான்.

பெண்கள் விடயத்தில் மிகவும் பலவீனமானவன் நந்தன். பெண்களுக்கு மிகவும் மரியாதை கொடுத்து அவர்களை உயர்ந்த இடத்தில் வைத்திருப் பவன் ராகேஷ்.

இப்படிப்பட்ட ராகேஷ் ஒரு விபச்சாரியிடம் கெஞ்சிக் கதைத்ததை நம்ப முடியாது பார்த்தான் நந்தன். ராகேஷ் முதுகில் தட்டியதும் சுயநினைவு அடைந்த நந்தன். அவனிடம் பல கேள்விகளைக் கேட்டான். அந்தப் பெண்ணுடன் கதைத்த விசயம் ஒன்றையும் ராகேஷ் வெளிப்படுத்த வில்லை. அன்று இரவு வழமைக்குமாறாக ராகேஷ் நேரத்துடன் படுத்து விட்டான். தூக்கம் வராது புரண்டு படுத்த நந்தன், நிம்மதியாக உறங்கும் ராகேஷைப் பார்த்தான்.

கொழும்புக்குச் செல்வதற்காக ராகேஷும், நந்தனும் தமது பொருட் களுடன் தயாராகும் போது அழைப்புமணி அடித்தது. கதவைத் திறந்த நந்தன் சிலையாக நின்றான். அவன் எதிரில் அந்தப் பெண் அவளின் கையில் சூட்கேஸ், தோளிலே ஒரு பை.

“நேற்று இரவு உனக்குத் தரவேண்டிய காசைத் தந்துவிட்டேன். இப்போ ஏன் வந்தாய்?” என்று கோபமாகக் கேட்டான் நந்தன். மெல்லிய புன்னகை ஒன்று அவளிடமிருந்து பதிலாக வந்தது.

“நான் தான் வரச் சொன்னேன்” நந்தனின் பின்னால் நின்ற ராகேஷ் உறுதியாகக் கூறினான்.

“உனக்கென்ன பைத்தியமா?” ராகேஷின் மீது சீறிப் பாய்ந்தான் நந்தன்.

“இவளைப் பற்றிய சகல விசயங்களும் தெரிந்து கொண்டு தான் வரச் சொன்னேன். இப்போ இவளுக்கு நான் வைத்த பெயர் வதனி. எங்களுடன் கொழும்புக்கு வருகிறாள். லேடீஸ் ஹொஸ்டல் ஒன்றில் இவளைச் சேர்க்கப் போகிறேன் என்று நிதானமாகக் கூறினான்” ராகேஷ்.

அவளைக் கூட்டிக் கொண்டு போகக் கூடாது என்பதற்கான பல காரணங்களைக் கூறினான் நந்தன். அவை ஒன்றையும் ராகேஷ் ஏற்றுக் கொள்ளவில்லை. வதனியை கொழும்புக்கு கூட்டிச் செல்வதில் உறுதி யாக இருந்தான் ராகேஷ். ராகேஷ், நந்தன், வதனி மூவரும் கொழும்பு நோக்கிச் சென்றனர். பிரயாணத்தின் போது வழி நெடுக கலகலப்பாக இருந்தது. நந்தன் அன்று அமைதியாக இருந்தான். எப்பவும் அமைதியாக இருக்கும் ராகேஷ் கலகலப்பாக இருந்தான். ஒவ்வொரு இடத்தையும் அருகே இருந்தவளிடம் விளக்கமாகக் கூறினான். அவன் கூறிய பல விடயங்கள் வதனிக்குப் புதியனவாக இருந்தன.

கொழும்பு பஸ் நிலையத்தில் இறங்கிய நந்தன் வீட்டுக்குச் சென்றான். ராகேஷ், வதனியை ஹொஸ்டலில் சேர்த்து விட்டு வீட்டுக்குச் சென்றான்.

ராகேஷ் வழமையை விட உற்சாகமாக இயங்கினான். ஏதோ கடமைக் காக நந்தனின் அன்றைய பொழுது கழிந்தது. ராகேஷுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. ராகேஷ் அந்தப் பெண்ணைக் கொழும்புக்கு கூட்டி வருவதற்கு தனது சபலம் தான் காரணம் என்ற குற்ற உணர்வு நந்தனை வாட்டியது. இரவு முழுவதும் நித்திரையின்றித் தவித்தான். எந்தக் கவலையும் இன்றி நிம்மதியாக தூங்கினான் ராகேஷ்.

வழக்கத்துக்கு மாறாக அதிகாலையில் எழுந்தான் ராகேஷ். ராகேஷின் செயல்களை பார்த்தபடி கட்டிலில் படுத்திருந்தான் நந்தன். சிறிது நேரத்தில் ஆட்டோ ஒன்று வந்து அவர்களுடைய வீட்டு வாசலில் நின்றது. ஆட்டோவிலிருந்து இறங்கி வந்தாள் வதனி. வதனியைக் கண்டதும் நந்தனின் மனம் பதைபதைத்தது.

இந்த வேளையில் இவள் ஏன் வந்தாள்? என்று அவன் மனம் கேட்டது. வதனி உள்ளே வரமுன்னர் "நான் வெளியே போகிறேன். திரும்பி வரத் தாமதாகும்" எனக் கூறி விட்டு நந்தனின் பதிலுக்கு காத்திருக்காது வெளியே சென்றான் ராகேஷ்.

தினமும் காலையில் வதனியுடன் செல்லும் ராகேஷ் சில நாட்கள் நள்ளிரவு வீட்டுக்குத் திரும்புவான். இதைப்பற்றி நந்தன் பேச முற்பட்ட போது உரிய பதிலளிக்காது கதையை வேறு திசைக்கு மாற்று வான் ராகேஷ். ராகேஷின் சம்மதத்துக்காக அவனது முறைப்பெண் ஊரிலே காத்திருக்கிறாள். சமூகத்தினால் ஒதுக்கப்பட்ட பெண்ணுடன் ராகேஷ் இரவு பகலாக சுற்றித் திரிகிறான். இதனை தினமும் காணும் நந்தன் இவ்வளவுக்கும் காரணம் தான் என்பதால் மனதளவில் கூனிக் குறுகி னான்.

ராகேஷின் ஓவியக் கண்காட்சி முடிந்ததும் ராகேஷின் வீட்டாருக்கு உண்மையைக் கூறி விட வேண்டும் என்று முடிவெடுத்தான் நந்தன்.

ராகேஷின் ஓவியக் கண்காட்சியைக் காண்பதற்கு நாட்டின் பல இடங்களிலிருந்தும் ரசிகர்கள் குவிந்தனர். ஓவியத்துறை விரிவுரை யாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மண்டபத்தை நிறைத்தனர். நந்தன் மனக்கசப்புகளை மறந்து முழுமுச்சுடன் செயற்பட்டான்.

கண்காட்சியைப் பார்ப்பவர்களை இருகரம் கூப்பி வரவேற்றாள் வதனி. நடமாடும் ஓவியம் போல் இருந்த வதனியை இரண்டாவது முறை பார்க்காதவர்கள் இல்லை. பொன்மானை நோக்கும் சீதை, அரச சபையில் நீதி கேட்கும் கண்ணகி, கண்ணன் மேல் காதல் கொண்ட கோதை,

துஷ்யந்தனின் மோதிரத்தைத் தொலைத்து விட்டுப் பதறும் சகுந்தலை, சாஜகானின் காதல் மனைவியாள் மும்தாஜ் ஓவியங்கள் பார்ப்பவரின் மனதை சுண்டி இழுத்தன.

அத்தனை ஓவியங்களுக்கும் மொடலாக வதனி நின்றதை அறிந்த நந்தன் ஆச்சரியப்பட்டான்.

ராகேஷும் வதனியும் அடிக்கடி தனியே சென்றது இப்படங்களை வரைவதற்கே என்பதை அறிந்த நந்தன் மிகுந்த ஆச்சரியப்பட்டான். ராகேஷையும், வதனியையும் தப்பாக இணைத்து நினைத்ததையிட்டு வருத்தப்பட்டான். ராகேஷின் ஓவியங்களைப் பார்வையிட்டவர்கள் ஓவியங் களையும் வதனியையும் ஒப்பிட்டு பார்த்து ஆச்சரியப்பட்டனர். அதிகமான ஓவியங்கள் அன்றே விலைப்பட்டன.

கலண்டர் நிறுவனங்கள் ராகேஷுடன் ஒப்பந்தம் செய்தன.

ஓவியக்கண்காட்சி முடிந்து மூன்றாம் நாள் ராகேஷ் திடீரென மயங்கி விழுந்தான். அருகில் உள்ள தனியார் வைத்திய சாலையில் ராகேஷை சிகிச்சைக்காகக் கூட்டிச் சென்றான் நந்தன். மிக நீண்ட நேரமாக ராகேஷை பரிசோதனை செய்த பின்னர் நந்தனை அழைத்து அவனுக்கும் ராகேஷுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் ராகேஷ் குடும்பத்தைப்பற்றியும் விசாரித்தார்கள்.

வைத்திய நிபுணர்கள் கேட்ட கேள்விகளால் ஏதோ ஒரு விபரீதம் நடைபெற்றதை நந்தன் உணர்ந்து கொண்டான்.

ராகேஷின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவரது இருதயம் மிகவும் பலவீனமாக உள்ளது. இருதயத்தை மாற்ற வேண்டும். உடனடியாக இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். வைத்தியர்கள் கூறிய ஒவ்வொரு வசனமும் நந்தனின் மனதில் சம்மட்டியால் அடித்தது போல் பதிந்தது. ராகேஷுக்கு தனது உடல் நிலைபற்றி நன்கு தெரியும்.

இதனால் தான் திருமணத்தைத் தவிர்த்தான் என்ற உண்மை யையும் நந்தன் அறிந்து கொண்டான். ராகேஷின் வைத்தியத்துக்காக உதவி செய்யப் பலரும் முன் வந்தார்கள். ஆனால் இதயத்தைக் கொடுக்க எவருமே இல்லை.

இந்தியாவில் உள்ள பிரபல வைத்தியசாலையில் ராகேஷ் அனுமதிக்கப்பட்டிருந்தான். விபத்தில் இறப்பவர்களின் உடல் உறுப்பு தானம் செய்வது அதிகரித்துள்ளது. ஆகையால் ராகேஷுக்கு யாராவது இருதயத்தை தானமாகக் கொடுப்பார்கள் என்று வைத்தியர்கள் ராகேஷின்

தகப்பனுக்கு ஆறுதல் கூறினார்கள்.

ராகேஷ் இந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூன்றாம் நாள் யாரும் எதிர்பார்க்காத வேளையில் வதனி வைத்தியசாலைக்குச் சென்றாள். ராகேஷுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர்களுடன் நீண்ட நேரம் தனியாக ஆலோசனை நடத்தினாள். பின்னர் ராகேஷிடம் சென்று ஆறுதல் கூறிவிட்டு மீண்டும் வைத்தியர்கள் இருக்கும் அறைக்குச் சென்றாள். தலைமை வைத்திய அதிகாரியுடன் ராகேஷின் வைத்தியர்கள் ஆலோசனை செய்வதாகவும் ஆலோசனை முடிந்த பின் வதனி சந்திக்க லாம் என்று அவளுக்கு கூறப்பட்டது.

தலைமை வைத்திய அதிகாரியிடம் கொடுக்கும்படி ஒரு கடிதத்தை கொடுத்து விட்டு அங்கே இருந்து அமைதியாக வெளியேறினாள் வதனி. சுமார் அரைமணி நேரத்தின் பின் வதனியின் கடிதம் தலைமை வைத்திய அதிகாரியிடம் கொடுக்கப்பட்டது. வதனியின் கடிதத்தை படித்த தலைமை வைத்திய அதிகாரி அலறியபடி ஆசனத்தை விட்டு எழுந்தார். சக வைத்தியர்கள் செய்வதறியாது குழம்பினர்.

அந்த வைத்தியசாலைக்கு அருகே உள்ள ஹோட்டலின் 30 ஆவது மாடியிலிருந்து ஒருபெண் குதித்து தற்கொலை செய்ததாக அறிந்த வைத்திய நிபுணர்கள் உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்தனர். இரத்த வெள்ளத்தில் வதனி சடலமாகக் கிடந்தாள்.

பொலிஸ் அதிகாரியுடன் தொடர்பு கொண்ட தலைமை வைத்தியர் வதனியைப் பற்றிக் கூறினார்.

சட்டப்படி சகலதும் மளமளவென நடைபெற்றன. வதனியின் விருப்பப் படி அவளுடைய இதயம் ராகேஷின் உடலில் பொருத்தப்பட்டது. ராகேஷ் உயிர் பிழைத்த சந்தோஷத்தைக் கொண்டாட முடியாது வதனியின் தியாகம் ராகேஷின் குடும்பத்தாரை வாட்டியது.

குளியலறையில் இருந்து வெளியே வந்த ராகேஷ் வதனியின் படத் துக்கு முன்னால் கண்களை மூடிக் கொண்டு மானசீகமாக வணங்கினான்.

●

**வீரகேசரி வாரவெளியீடு 29/04/12**

## விடியலைத்தேடி ●

கிரீச்.....கிரீச்....கிரீச்..... இருட்டின் அமைதியைக் கிழித்துக் கொண்டு அந்தப் பழைய சைக்கிள் மேட்டையும் பள்ளத்தையும் பொருட்படுத்தாது விரைந்தது. சைக்கிளின் கிரீச் சத்தத்துக்கு போட்டியாகக் குரல் எழுப்பிய சுடலைக் குருவியின் சத்தம் ஓய்ந்து விட்டது. தூரத்தில் கேட்ட அந்த சைக்கிளின் சத்தத்தின் மூலம் வருவது ஜோசெப் தான் என்பதை உறுதி செய்தார் காதர்.

"அண்ணை ஜோசேப்பு வாறான். இண்டைக்கு நல்ல செய்தி வருமெண்டு நினைக்கிறன்" என்றார் காதர். காதரின் ஆறுதல் வார்த்தை குமாருக்குத் தெம்பைக் கொடுத்தது. கிரீச் என்ற சத்தம் காதரின் வீட்டுப் படலையடியில் நின்றது. படலையைத் திறந்து சைக்கிளை மரத்தில் சாத்தினார் ஜோசெப்.

"ஆரது ஜோசெப்பே" வீட்டினுள் இருந்து கேட்டபடியே வெளியே சென்றார் காதர்.

"அது நான் ஜோசெப்" எனப் பதிலளித்தபடி வீட்டினுள் நுழைந்தார் ஜோசெப். மங்கிய விளக்கு வெளிச்சத்தில் ஜோசெப்பின் முகத்தை அனைவரும் ஆவலாகப் பார்த்தனர். குளிர் காற்று அவ்வப்போது கைவிளக்கை அணைப்பது போல் போக்குக் காட்டி விட்டுச் சென்றது.

"எல்லாம் சரி இண்டைக்கு பத்து மணிக்கு போட் வெளிக்கிடுது. பத்து நிமிசத்திலை ட்ரக்ரர் வரும். ட்ரக்ரர் உங்களைக் கடற்கரையிலை இறக்கும் பிரச்சினை இல்லாமல் போய்ச் சேரலாம்".

ஒரு கிழமைக்கு முன்பே பயணத்துக்குத் தயாராக இருந்தவர்களுக்கு பத்து நிமிடம் பல மணி நேரம் போல் தெரிந்தது. காதரின் குடும்பத்தவர்களை ஆரத்தழுவிய குமாரின் குடும்பத்தவர்கள் கண்ணீருடன் விடை பெற்றனர். குமாரின் மனைவி, மகள் பிரியா, மகன் கிருஸ்ணா ஆகியோர்

காதரின் பிள்ளைகளிடம் விடை பெற்றனர்.

குமாரின் குடும்பம் ட்ரக்ரரில் ஏறிய போது காதரின் கண்கள் பனித்தன. குமாரைப் பற்றியோ அவரின் குடும்பத்தைப் பற்றியோ காதருக்கு எதுவும் தெரியாது. இந்தியாவுக்கு ஆட்களை அனுப்பு ஜோசெப் ஒரு வாரத்துக்கு முன் குமாரின் குடும்பத்தை காதரின் வீட்டில் தங்க வைத்தார்.

குமாரின் குடும்பத்தவர்கள்பட்ட துன்பங்களையும், துயரங்களை யும் கேட்ட காதரின் குடும்பம் அதிர்ச்சியடைந்தது. வீடு, சொத்து, சுகம் எல்லாவற்றையும் இழந்து இந்தியாவுக்குச் செல்லும் குமாரின் குடும்பத்தைப் பிரிவதால் நீண்ட நாள் நண்பனைப் பிரிவது போல் கவலைப் பட்டார் காதர்.

ட்ரக்ரர் கடற்கரையை அடைந்ததும் எல்லோரையும் ஒரே இடத்தில் நிற்கும்படி கூறிவிட்டு போனார் ஜோசெப். இந்தியாவுக்கு அகதியாக போகும் பலர் ஆங்காங்கே நின்றனர். சிறிது நேரத்தில் இரண்டு பேருடன் வந்த ஜோசெப் "இவ்வளவு பேரும் என்ரை ஆக்கள். எண்ணிப்பாத்து கூட்டிப்போங்கோ" என்றார்.

ஜோசெப்புடன் வந்த இருவரும் அவர்களை எண்ணிப் பார்த்து விட்டு தங்களுடன் அழைத்துச் சென்றனர். தமது மூட்டை முடிச்சுக்களைத் தூக்கிக் கொண்டு அந்த இருவரின் பின்னால் சென்றனர். சற்று ஒதுக்குப் புறமான இடத்தில் நின்றவர்களுடன் அவர்கள் இணைந்தனர்.

"கிருஸ்ணா" அந்த இருட்டிலும் குமாரின் மகன் கிருஸ்ணாவை அடையாளம் கண்ட ஒருவர் குரல் கொடுத்தார். அந்தக் குரலோசை யிலிருந்து தன்னை அழைத்தது லம்பேட் என உறுதி செய்தான் கிருஸ்ணா. கிருஸ்ணாவின் வீடும் குமாரின் வீடும் இராணுவ முகாமுக்கு அருகே இருந்ததனால் சொந்த வீட்டிலிருந்து வெளியேறி தாய் நாட்டிலேயே அகதியானார்கள். கிருஸ்ணாவும் லம்பேட்டும் ஒரே வகுப்பில் படிக்கின்றனர்.

இந்தியாவுக்கு அகதியாகச் செல்வது இரகசியமானதால் யாருக்கும் சொல்லாமலேயே புறப்பட்டனர். எதிர்பாராத சந்திப்பினால் இருவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

அவர்களின் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. கிருஸ்ணாவும், லம்பேட்டும் வெவ்வேறு ட்ரோலரில் ஏறும்படி பணிக்கப்பட்டனர்.

"அப்பா நான் லம்பேட்டோடை வாறன்" எனக் கூறிவிட்டு லம்பேட்டின் பின்னால் ஓடினான் கிருஸ்ணா. அதிர்ச்சியில் குமார் உறைந்து நிற்க

“ஐயா ஏறுங்கோ” என குமாரைத் தூக்கி ஏற்றினார் ஒருவர். இருட்டிலே ஆளையாள் தெரியாது தடுமாறினார்கள். அப்பா, அம்மா, தம்பி, தங்கச்சி, அண்ணா, அக்கா என்றும் பெயரைக் கூறியும் ஒருவரை ஒருவர் தேடினார்கள். பிரியாவின் குரலைக் கேட்ட குமார் தட்டுத்தடுமாறி அவர்களின் அருகில் சென்றார்.

“எங்கையப்பா தம்பியைக் காணேல்லை” என்று மகனைத் தேடினாள் குமாரின் மனைவி. பிரியாவும் தன் பங்குக்கு “அண்ணா எங்கே” என்று கேட்டார். குமாரின் உடம்பு படபடத்து வியர்வையில் நனைந்தது.

“அவன் லம்பேட்டோடை மற்ற போட்டிலை வாறான்”.

தட்டுத்தடுமாறிக் கூறினார் குமார். குமாரின் பதிலைக் கேட்ட மனைவி அதிர்ச்சியடைந்தார்.

“எடே தம்பி போட்டை நிப்பாட்டு போட்டை நிப்பாட்டு” எனக் கூச்சலிட்டார்.

“இதென்ன பஸ்ஸே கண்ட இடத்திலை நிப்பாட்ட. போட் நடுக்கடலிலை போகுது சத்தம் போடாதையணை” இருட்டிலிருந்து ஒருவர் குரல் கொடுத்தார்.

“ஐயோ என்ரை பொடியன் போட் மாறி ஏறிப்போட்டான். அந்தப் போட்டிலை இருந்து அவனை இந்தப் போட்டுக்கு மாத்துங்கோ”.

“எணே ஆச்சி கத்தாதையணை. இதிலை நிப்பாட்டினா நேவிக்காரன் சுட்டுப் போடுவான். கரைக்குப் போய் உன்ரை பொடியனைத் தேடலாம்”.

நேவிக்காரன் சுட்டுப் போடுவான் என்ற வசனம் பலரைக்கிலி கொள்ள வைத்தது. அந்த மிரட்டலால் குமாரின் மனைவியும் அமைதியானாள்.

“அண்ணை நெருப்பெட்டி இருக்கா” குமாரின் அருகில் இருந்த ஒருவர் கேட்டார். யாரோ ஒருவர் தீப்பெட்டியைக் கொடுத்தார். தீக்குச்சி வெளிச்சத்தில் அந்த இளைஞனின் முகத்தைக் கண்ட குமார் அதிர்ச்சியடைந்தார். காணிப் பிரச்சினையின் போது துப்பாக்கியுடன் வந்து குமாரை மிரட்டிய இளைஞனும் அகதியாக வருவதை அறிந்த குமார் மனதுக்குள் சிரித்தார்.

ட்ரோலரின் உள்ளே இருக்க விரும்பாத சிலர் மேல் தளத்தில் இருந்தனர். எஞ்சினுக்கு அருகே சேர்ந்த கடல் நீரை சிறு பிளாஸ்ரிக் வாளியால் அள்ளி வெளியே ஊற்றினார் ஒருவர். அணியத்திலே கயிற்றைப் பிடித்து வழி காட்டியவர் எஞ்சினை நிப்பாட்டு எனச்சத்தம்

போட்டார். மேல் தளத்தில் இருந்தவர்கள் அவசரமாக உள்ளே அனுப்பப பட்டனர். எஞ்சினை நிறுத்திவிட்டு நங்கூரத்தைக்கடலில் இறக்கினார்கள். ஓட்டிகள் இருவரும் வழிகாட்டியவருக்கு அருகில் சென்று அவர் காட்டிய திசையில் பார்த்தார்கள். தூரத்திலே நேவியின் நடமாட்டம் தெரிந்தது.

ஓட்டிகளில் ஒருவர் நட்சத்திரத்தைப் பார்த்து நேரத்தைக் கணித்தார். இந்த நேரத்தில் நேவி இவ்விடத்தில் நிற்பதில்லை. மூவரும் சுற்றிவர நோட்டமிட்டனர். கண்ணுக் கெட்டிய தூரத்தில் வேறு நேவிப்படகு எதுவும் தெரியவில்லை. தனித்து நிற்பது பாதுகாப்பில்லை என்பதனால் அது அதிக நேரம் நிற்காது என உறுதியாக நம்பினார்கள்.

மேல்த் தளத்தில் இருந்தவர்கள் அவசரமாக உள்ளே சென்றத னால் சலசலப்பு அதிகரித்தது. நித்திரையிலிருந்தவர்கள் எழுந்து மலங்க மலங்க முளித்தார்கள். கடலிலே நேவி நிற்கும் செய்தி உள்ளே இருப்பவர்களிடம் கசிந்ததனால் சிலர் வாய்விட்டு அழத் தொடங்கினர். சிலர் இஷ்ட தெய்வங்களைத் துணைக்கு அழைத்தனர். சிலரின் உடல் பயத்தில் சில்லிட்டது.

கடல் அமைதியாக இருந்தது. மூவரும் அந்தக்கரும் புள்ளியையே உற்று நோக்கினார்கள். இடையிடையே நாலாபுறமும் அவதானித்தனர். அவர்கள் எதிர்பார்த்த அந்தச் சம்பவம் ஆரம்பமானது. தூரத்தே தெரிந்த கரும்புள்ளி அசையத் தொடங்கியது. கரும்புள்ளி கண்ணை விட்டு மறைந்ததும் ட்ரோலர் மீண்டும் புறப்பட்டது. அப்போது உள்ளே இருந்த வர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஒரு மணித்தியாலம் கடலில் தாமதித்ததனால் இந்திய எல்லையை விரைவில் அடைய வேண்டும் என்பதனால் ட்ரோலர் வேகம் பிடித்தது.

திடீரென கடலில் தோன்றிய வெளிச்சம் அனைவரையும் கிலியடைய வைத்தது. ட்ரோலரை நோக்கி அந்த வெளிச்சம் விரைந்தது. “கூட்டிவை கூட்டிவை” என அணியத்தில் நின்றவர் சத்தம் போட்டார். அமைதியைக் குலைத்துக் கொண்டு வெடிச்சத்தம் கேட்டது. “ஐயோ நேவி சுடுறான்” என ஒருவர் சத்தம் போட்டார்.

உயிர் வாழவேண்டும் என்ற ஆசையில் தாய் நாட்டை விட்டுத் தப்பி ஓடுபவர்களின் உயிரைக் குடிக்க கடற்படைக் கப்பலிலிருந்து குண்டுகள் புறப்பட்டன. கடலிலே தீப்பிளம்பு ஒன்று தோன்றியது. “போட் அடிபட்டுப் போச்சு” தன்னையும் அறியாது அணியத்தில் நின்றவர் சத்தமாகச் சொன்னார். அதை அறிந்த குமாரின் மனைவி மகனை நினைத்து அழத் தொடங்கினாள்.

"இறங்குறதுக்கு ஆயத்தமாகுங்கோ" என ஓட்டி ஒருவர் கூறியதால் அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ராமேஸ்வரம் வந்திட்டுது என ஒருவர் அருகில் இருப்பவரிடம் சொல்லிச் சந்தோசப்பட்டார். முழங்காலளவு தண்ணீரில் அனைவரும் இறக்கப்பட்டனர். ஓட்டிகளில் ஒருவர் முன்னே செல்ல அனைவரும் பின்னே சென்றனர். பெட்டிகளையும் பாக்குகளையும் கீழே வைக்க முடியாததனால் தலையிலும் இடுப்பிலும் சுமந்து சென்றனர்.

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் கடற்கரையோ கட்டடங்களோ தெரியாததனால் தயக்கத்துடன் அவரைப்பின் தொடர்ந்தனர். கடல் நீர் இல்லாத ஒரு இடத்தைக் காட்டி இதிலே நில்லுங்கோ. காலை யிலை எங்கடை ஆக்கள் வந்து உங்களைக் கூட்டிப்போவார்கள் எனக்கூறி விட்டு சென்றார். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர்களை ஏற்றிவந்த ட்ரோலர் இருட்டில் மறைந்தது.

ராமேஸ்வரத்தில் இறங்கியதும் அகதி முகாமுக்குப் போகலாம் என நம்பியவர்கள் கடலில் இறக்கிவிடப்பட்டதனால் செய்வதறியாது தடுமாறினர். நடுக்கடலில் எரிந்த போட்டை நினைத்து குமாரின் குடும்பம் கண்ணீர் சிந்தியது. அவர்கள் நின்ற இடத்தில் தண்ணீர் அதிகரித்தது. முழங்கால் வரை உயர்ந்த தண்ணீர் இடுப்பு வரை சென்றது. கடல் தம்மை மூழ்கடித்து விடுமோ என்ற பயத்தில் பலர் அழத்தொடங்கினர். சிறிது நேரத்தில் நீர் குறைந்து பின்னர் உயர்ந்தது. இந்திய மீன் பிடிப்படகுகளின் வெளிச்சங்கள் ஆங்காங்கே தெரிந்தன. இருள் விலகி வெளிச்சம் மெதுவாகத் தோன்றத் தொடங்கியது. அவர்களின் கண் களுக்கு கடற்கரை தெரியவில்லை. தாம் மண்மேட்டிலே இறக்கிவிடப் பட்டதை அப்போது தான் உணர்ந்து கொண்டனர்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதியாகச் சென்றவர்களில் ஒருவர் தனது சிறிய வானொலிக்கு உயிர் கொடுத்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி அறிக்கை ஒலி அவர்களைப் பரபரப்படைய வைத்தது. கடற்படையினரின் தாக்குதலில் பயங்கர வாதிகளின் படகு கடலில் மூழ்கடிக்கப்பட்டது. பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்ற தலைப்புச் செய்தியைக் கேட்டதும் குமாரின் குடும்பம் கதறி அழத்தொடங்கியது.

"ஐயோ அந்தப் பயங்கரவாதத்துக்குப் பயந்து தானே அகதியா வந்தனாங்கள். என்ரை பிள்ளை பயங்கரவாதியாம்" குமாரின் மனைவி எழுப்பிய அவல ஓலத்தில் வானொலிச் செய்தியின் முக்கியத்துவம்

குறைந்து விட்டது. கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவரின் முகத்தில் சந்தோஷ ரேகை தெரிந்தது. தான் கண்டதை மற்றவர் களுக்குக் காட்டினார். அவர்களும் மகிழ்ச்சியடைந்தனர். தூரத்தே தெரிந்த அப்படகு அவர்களை நோக்கி வந்தது. ஓட்டி கூறியது போல் அவர்களைக் காப்பாற்ற அப்படகு வருகிறதென அவர்கள் நினைத்தார்கள். அருகில் வந்த பின்னர் அது அவர்களைக் காப்பாற்ற வந்த படகு அல்ல இலங்கை யிலிருந்து அவர்களுடன் வந்த அகதி ட்ரோலர் என்பதை அறிந்தார்கள்.

ட்ரோலரில் இருந்து இறங்கியவர்கள் அந்த மேட்டை நோக்கிச் சென்றார்கள்.

"அப்பா லம்பேட் வாறார். அண்ணாவும் வருவார்" என ப்ரியா சந்தோசத்துடன் சத்தம் போட்டாள். குமாரும் லம்பேட்டை அடையாளம் கண்டார். குமாரின் மனைவியின் கண்ணிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. குமார் ஓடிச்சென்று லம்பேட்டைக் கட்டிபிடித்து "கிருஸ்ணா எங்கே" எனக்கேட்டார்.

"அவன் வரேல்லை. இயக்கத்துக்குப்போட்டான்" என்றார் லம்பேட். ●

**25.10.12**



இலங்கைப் பத்திரிகை உலகில் பல சாதனைகளைப் படைத்த ஏகாம்பரம் ரவிவர்மா கவிதை, சிறுகதை என்பவற்றிலும் முத்திரை பதித்துள்ளார். அரசியல், இலக்கியம், விளை யாட்டு, ஆன்மீகம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு உடையவர். தெளிவான இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய இவரது எழுத்துநடை வாசகர்களின் மனதில் இலகுவாகப் பதிந்து விடும் தன்மை உள்ளது.

பத்திரிகைத்துறை சார்ந்த பத்தி எழுத்து, விளையாட்டு, விவரணக்கட்டுரை ஆகியவற்றில் விருதுகளைப் பெற்றுள்ளார். ஆங்கில, சிங்கள மொழிப்பத்திரிகையாளர்களுடன் போட்டியிட்டு விவரணக்கட்டுரையில் முதலிடம் பெற்றுள்ளார்.

இவரது சிறுகதைகள் யாதார்த்த பூர்வமானவை. மனிதவாழ்வின் அவலங்களையும் சோகங்களையும் மிக லாவகமாக மனதில் பதியும்படி சிறுகதைகளாக வடித்துள்ளார்.

இவர் எழுதிய தமிழக அரசியல், திரைக்குவராத சங்கதி, தடம்மாறிய தமிழ்ப்படங்கள், பாடல் பிறந்தகதை ஆகியன வாசகர்களிடம் வரவேற்றைப் பெற்றவை. தினக்குரல், இடி, சுடர் ஒளி ஆகிய பத்திரிகைகளில் பணிபுரிந்த இவர் மெட்ரோநியூஸ் ஆசிரிய பீடத்தில் பணிபுரிகிறார். புதிய கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குண்டு. இந்தச் சிறுகதைத் தொகுப்பைப் போன்று இவரது ஏனைய ஆக்கங்களும் நூலாக வெளிவரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

மடுளுகிரியே விஜேரத்ன [BA , MA, PHD]
411/3, இஹல கொஸ்கம,
கொஸ்கம.
29 /01/13
TP : 036 2254238

ISBN : 978-955-8741-64-1

Gayathri Publication
P. O. Box : 64, Dehiwela.
011 4981906, 0777 892028